
KALKI
.6.2006 ரூ.8.00
80 பக்கங்கள்

கல்கி

குடும்பத்துடன் களிக்க...



சன்னதிக்குள் நுழையுமா சமூகநீதி?



100% Vegetarian
Supreme
SUN FLOWER OIL
Re - usable
இதில் தயாரிக்கப்படும் உணவுவகைகளுக்கு
குறைந்த அளவே எண்ணெய் தேவைப்படுவதால்
உணவு பொருட்கள் கெடாமலும், சுவையாகவும் இருக்கும்
மற்றும் மீண்டும் உபயோகிக்க கூடிய தனித்தன்மை வாய்ந்தது
சுப்ரீம் சன்பிளவர் ஆயில்
4 side sealed printed laminated pouch
Anti-leaching
Anti-odour
Naturally healthy
Supreme
SUNFLOWER OIL
FREE Gift with every pack
Stocks are available without this offer also

கொக்கி

ரொம்ப நாட்கள் நல்ல கதைக்காகக் காத்திருந்து கரண் நடிச்சிருக்குற படம். அவரோட தவம் வீண் போகலை. ஆனா இன்னும் கொஞ்சம் மெனக்கெட்டிருந்தா படம் இன்னும் சிறப்பா வந்திருக்கும். ஜோதிட, ஜாதக மூடநம்பிக்கைங்க ஒரு அப்பாவி வாழ்க்கையை எப்படி சின்னாபின்னப்படுத்துதுன்னு ஆழமா சொல்லியிருக்காரு டைரக்டர் பிரபு சாலமன். இவரு ஏற்கெனவே விக்ரம் நடிச்ச 'கிங்' படத்தை இயக்கினவரு.

தன்னோட அழகான முகத்தை கொக்கிசாமி கேரக்டருக்காக கறுப்பா மாத்தினதோடு மட்டுமில்லாம, கதாபாத்திரமாவே மாறியிருக்குற கரணோட ஆர்வத்துக்கும் உழைப்புக்கும் சலாம் போடலாம். தன்னைச் சுற்றி நடக்குற எல்லாக் காரியத்துக்கும் தான் பொறுப்பில்லன்னு அவர் பொங்கறதும், போலீஸ்காரங்ககிட்ட நியாயம் கேட்கப் போய் ஓடறதும் நெஞ்சைப் பாரமாக்குது.

கதாநாயகி சஞ்சனா, புதுமுகம். ஆனா அந்தச் சுவடே தெரியாம நடிச்சிருக்காங்க. மலேசியா வாசுதேவன், மாணிக்க விநாயகம், கோட்டா சீனிவாச ராவ்னு ஒவ்வொருத்தர் ஆக்டிங்லயும் இயல்பு தவழுது. அனல் அரசுவோட சண்டைக் காட்சிங்க புதுவிதம்.

கரண் படம் முழுக்க ஓடிக்கிட்டே இருக்கறது கொஞ்சம் சலிப்பா இருக்கு. காமெடி இல்லாதது பெரிய குறை.

சஞ்சனாவுக்கு கரண் மேல காதல் வர்றதுல அழுத்தம் இல்ல. ஒரு கட்டிப்பிடிப்புலயே தமிழ் சினிமாவுல மட்டும்தான் காதல் வரும் போல. அடிக்கடி பாட்டு வந்து வேகமா போற படத்துல தொய்வை உண்டாக்குது. தவிர்த்திருக்கலாம். தினா மியூசிக்ல ரெண்டு பாட்டுங்க தேறுது. 'கம்மா ஒரு புள்ள கொடுடா'ன்னு மோசமான பாடல் வரிகள இயக்குநர் எப்படி அனுமதிச்சாருன்னு தெரியல. திடீர்னு படம் முடியற மாதிரி ஃபீலிங்கை உண்டாக்கியிருக்க வேணாம். அங்கங்க இதுமாதிரி சின்னச் சின்னக் குறைங்க இருந்தாலும் நல்ல படம் தர்ற முயற்சி செய்திருக்கிற பிரபு சாலமனுக்கு வெல்கம் சொல்லலாம். கரணுக்கு நல்ல எதிர்காலம் இருக்கு.

\- லஜ்ஜாவதி



ரொம்ப நாளாச்சே விசிட் அடிச்சுன்னு நம்ம ராஜீவ்காந்தி நினைவு நாள் அன்னிக்கு சத்தியமூர்த்தி பவன் பக்கம் ஓர் எட்டுப் போய்ட்டு வரலாம்னு கிளம்பினேன். கூட்டணி ஆட்சி கோஷம் அங்கே கொஞ்சம் உரக்கவே ஒலிக்குதப்பு. கலர் கலர் போஸ்டரு, பேனருன்னு ஜெகஜ்ஜோதியா இருந்துச்சு பவனு.

கதரோட கதரா ஒதுங்கி, மேட்டர் தேத்தலாம்னு வாசல்ல நின்ன கூட்டத்தோட கலந்துட்டேன். அன்னிக்கு ஹாட் டாபிக் ஆட்சியில பங்கு தராததும், ஜெயா டீ.வில ஒளிபரப்பான 'கலைஞரின் கைமாறு'ம்தான்.

பொரிய வாங்கிக் கொறிச்சுக்கிட்டு, பேசிக்கிட்டிருந்த ஒரு க்ரூப் பக்கமா ஒதுங்கினேன். "ஏம்பா... இதுக்கப்புறம் இன்னொரு சான்ஸ் கிடைக்காது நமக்கு. ஆனா



• சத்யமூர்த்தி பவன்

ஃபுல் ஸ்விங்கில் இளங்கோவன்!



அதை நழுவ விட்டுப்புட்டு நிக்குறாங்களே..."ன்னு ஒருத்தர் ஆரம்பிக்க, இன்னொருத்தர் "இதுக்காக பேச வேண்டிய பல தலைங்க எம்.பி., மந்திரின்னு ஆயிட்டாங்க. அப்படியே போய்க் கேட்டு, புதுசா யாருக்காவது கொடுத்து அவங்கள வளர்த்துவிட இவங்களுக்கு மனசு வராதுப்பா. அதான் மேட்டரு"ன்னு சொல்ல, யாரோ ஒரு வி.ஐ.பி. கார்ல வந்தவுடனே க்ரூப் கலைஞ்சிடுச்சு.

அடுத்ததா டூவீலர் நிக்கற இடத்துல நின்ன கதர்

பார்ட்டிங்க பக்கம் போனேன். அவங்க பேச்சை வச்சுப் பார்க்கும்போது, அவங்க இளங்கோவன் சிஷ்ய கோடிங்கன்னு புரிஞ்சுக்கிட்டேன்.

''நம்ம தலைவரு இப்போ பழையபடி



''இவனுங்க ரொம்பத் துள்ளிக்கிட்டு இருக்கானுங்க!''

ஃபுல் ஸ்விங்குல கிளம்பிட்டாருப்பா... பேட்டி, அறிக்கைன்னு இனிமே கலைஞரைத் தூங்கவிட மாட்டாரு பாரு... எப்படியும் இந்தத் தடவை நம்ம ஆளு ஒருத்தராவது மந்திரியாவுறது நிச்சயம்''னு சொல்ல, கூட்டத்துல நின்னவங்க முகத்தைப் பார்க்கணுமே... அடேயப்பா...!

இவங்க பேசுனதைக் கேட்டுட்டு ஒரு வயசானவரு ஓரமா நின்னு எகத்தாளமா சிரிச்சாரு. ஆஹா... மேட்டர் சிக்குதப்பான்னு நினைச்சுக்கிட்டே அவர்கிட்ட போயி பேச்சுக் கொடுத்தேன்.

''ஏம்பா... கருணாநிதி என்ன இலேசுப்பட்ட ஆளா... மந்திரி பதவி கொடுக்கல காங்கிரஸ்காரனுக்குன்னு இங்க அடிச்சுக்கறாங்க... 'ரெண்டு ரூவா அரிசி தர்றதுல சிக்கல் வரும். ரெகுலரா தர முடியாது. இலவச நிலம் தர்றது கஷ்டம்'னு பேசிக்கறாங்க. இந்த ரெண்டு விஷயங்கள் தொடர்பான டிபார்ட்மெண்டை காங்கிரஸ்காரன்கிட்ட தள்ளிவிட்டுட்டா இவனுங்க பாடு திண்டாட்டமாயிடும். அப்புறம் திட்டம் நடக்கலைன்னா, அதுக்குக் காரணம் காங்கிரஸ்காரன்னு ஈஸியா சொல்லிட்டு, தி.மு.கக்காரங்க தப்பிச்சிடுவாங்க. இதைப் புரிஞ்சுக்காம இவனுங்க ரொம்பத் துள்ளிக்கிட்டு இருக்கானுங்க. என்னமோ போவட்டும்''ன்னு பெருமூச்சு விட்டுக்கிட்டே நழுவிட்டார்!

o

ஒற்றன்

கல்கி
ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623, 2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

பொழுதுபோக்கு படங்கள் மட்டுமல்ல... கருத்துச் சொல்லும் படங்களும் வெற்றிபெறுமென நிரூபித்திருக்கிறார் இயக்குநர் சீமான். சினிமா, அரசியல், மொழி எனப் பல விஷயங்களைப் பற்றியும் நம்மிடம் பேசினார், ஆவேசமாக.

"சினிமா அரசியலை

– சீமான் சீற்றம்

பொழுதுபோக்கு சினிமாக்களுக்கு மத்தியில் 'தம்பி' வித்தியாசமாக உருவானது எப்படி?

"சினிமாவை எதற்காக பொழுதுபோவதற்காக எடுக்க வேண்டும்? சும்மா உட்கார்ந்திருந்தாலே பொழுது தானாகக் கழிந்து விடுமே! அதற்குப் போய் இவ்வளவு கோடி முதலீடு, இத்தனை உழைப்பு தேவையா? சினிமா என்பது கண் வழி நூலகம். சினிமாவினால் எவ்விதமான தாக்கமும் ஏற்படும். 'அலை பாயுதே' படம் பார்த்துவிட்டு அதே பாணியில் திருட்டுக் கல்யாணத்தைச் செய்தவர்கள் எத்தனை பேர்! சமீபத்தில் ஐ.ஏ.எஸ். தேர்வில் வென்ற ஒருவர் என்னைத் தொடர்புகொண்டு 'தம்பி' படத்தில் சொன்னது போல் அதிகாரத்தைக் கையில் எடுத்து நேர்மையாகப் பணியாற்றப் போகிறேன் என்றார். இதுபோன்று ஆளாளுக்கு இரண்டு செங்கற்களை அடுக்கினாலே போதும். தமிழ் சினிமாவை தாஜ்மஹாலாக்க முடியும்."

எதிர்பார்த்த வெற்றி கிடைத்ததா?

"இன்னமும் பெரிய வெற்றி கிடைத்திருக்க வேண்டும். ஊடகங்கள் அப்பணியை சரிவரச் செய்யவில்லை. தொலைக்காட்சிகளும் தம்பியின் காதல் பாடல்களை மட்டுமே ஒளிபரப்பின. தம்பியில் சமூகத்தின் மீதான நியாயமான கோபம் இருந்தது. இந்தப் பட கதையைக் கேட்கவே சில கதாநாயகர்கள் நேரம் ஒதுக்கவில்லை. ஒருசிலர் கதையைச் சரியாக உள்வாங்கவில்லை. இறுதியில் என்னைப் போலவே மாதவனுக்கும் சமூகத்தின் மீது கோபம், ஏக்கம் இருந்ததால் கைகோக்க முடிந்தது. மணிரத்னம், ஷங்கர், பாலா, சேரன் போல நினைத்த மாதிரி படம் எடுக்க என்னைப் போன்றவர்களால் முடிவதில்லை. அதோடு 'சாமி', 'காக்க காக்க' படங்களின் வசூல், இரு படங்களின் ஹீரோக்கள் நடித்த அற்புதமான படமான 'பிதாமகன்' படத்தைவிட அதிகமாக இருக்கும்போது, இங்கு எது சிறந்த படம், எதற்காகப் படம் எடுப்பது என்று படைப்பாளிகள் யோசிக்கிறார்கள்."

தமிழ் தேசியத்தைச் சேர்ந்தவரான நீங்கள் சினிமாவை அடிக்கடிச் சாடுகிறீர்களே?

"சினிமாவுக்குக் குறைந்தபட்சம் தமிழில் தலைப்பு வையுங்கள் என்றுதான் சொல்கிறோம். ஆங்கில மோகத்தால் வெள்ளைக்காரனாகவா மாறப் போகிறீர்கள்? டப்பிங் ஆங்கிலப் படங்களின் தலைப்புகள் தூய தமிழில் இருப்பது நமக்கு அவமானமில்லையா! 'நான் உன் தாயை அம்மா என்கிறேன். நீ மட்டும் ஏன் உன் அம்மாவை மம்மி என்கிறாய்' என்றுதானே அதற்கு அர்த்தம்."

எதிர்ப்பேன்''

முன்பு விஜய்காந்தின் அரசியல் பிரவேசத்தை சாடினீர்கள். இப்போது என்ன சொல்கிறீர்கள்?

"விஜய்காந்தை மட்டுமல்ல. சினிமாவிலிருந்து எவர் அரசியலுக்கு வந்தாலும் எதிர்ப்போம். திராவிட கட்சிகளுக்கு மாற்று என்று சொல்வதற்கு இவர் என்ன ஃபிடல் காஸ்ட்ரோவா அல்லது நெல்சன் மண்டேலாவா? சமூகத்துக்காக என்ன பாடுபட்டார்? மாணவர்கள் போராட்டத்துக்குத் தோள் கொடுத்தாரா? சுனாமியால் இறந்தவர்களின் பிண உடல்களைச் சுமந்தாரா? நாசர், ரேவதி, ரோஹிணி போன்றோர் சமூகத்துக்காக குரல்கொடுத்த அளவுக்குக்கூட இவர் செய்யவில்லை. சாதியற்ற சமூகத்தை உருவாக்குவோம் என்று சொல்லிவிட்டு தம்முடைய கட்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட நாயுடு சமூகத்தினருக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறார். சொத்தை விற்று தேர்தலில் ஈடுபடுகிறேன் என்கிறார். அப்படியென்றால் ஆட்சிக்கு வந்து அத்தனையையும் மீட்டெடுப்பார் என்றுதானே நிச்சயம்.

தமிழ்நாட்டை வழிநடத்திச் செல்ல இம்மண்ணுக்காக உழைத்த எத்தனையோ பேரறிஞர்கள் இருக்கிறார்கள். நல்லகண்ணு மாதிரியான தூயவரை இந்நாடு பயன்படுத்தாதது நம் துரதிர்ஷ்டம். என்



பாமரத் தமிழன் ஞானம் இல்லாதவன். அவனுடைய அறியாமையை நீக்காத குற்றமே இன்று திராவிடக் கட்சிகள் தங்களுடைய வோட்டை விஜய்காந்திடம் இழந்திருக்கின்றன."

தி.மு.க.வுக்கு ஆதரவளித்த காரணம்?

"தி.மு.க தேர்தல் அறிக்கையில் சொன்ன மொழிக் கொள்கையில் உடன்பாடு இருந்தது. தேர்தல் முடிவுகளைப் பார்க்கும்போது இறுதியில் ஜனநாயகம் ஜெயித்தது என்பதைவிட 'பண'நாயகமே ஜெயித்துள்ளது."

அடுத்தது?

"பாலா தயாரிப்பில் ஒரு படம் பண்ணுகிறேன். மாதவன் அல்லது சேரன் கதாநாயகனாக இருக்கலாம். நிச்சயம் அது ரசிகர்களுடைய பொழுதை வீண் செய்யாத படமாக இருக்கும்."

- ச.ந. கண்ணன்

வட்டமேஜை

‘**ச**ச்சினால் நிறைந்த வெப்சைட்’ கட்டுரையில் கர்நாடக நகரம் மங்களூர், மங்கலூர் ஆகிவிட்டது. சர்ப்ப சம்ஸ்காரா, சர்ப சமஷ்காரா ஆகிவிட்டது. இன்னும் நாக பிரதிஷ்டே, நாக பிரதிஸ்தே ஆகவும் ஆஸ்லேஷா பலி, அஷ்லேஷ பாலி ஆகவும் மாறிவிட்டன.

- எஸ். விசுவநாதன், சென்னை - 18

புதியாசிங்கின் சாதனை, குழந்தை உரிமை மீறல் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

- சி. பரத், சென்னை - 82

‘**டா**ன்’னு ‘சி’.எம். காதுல போடறதுக்காகவே ‘மர்மம் விடுபடுமா’ கட்டுரை எழுதுனீங்களா?

- சுகந்தி நாராயண், சென்னை - 39



டூமச் சுஷ்மா!

சுஷ்மா, மன்மோகன்சிங்கை இந்தியாவின் பலவீனமான பிரதமர் என்று சொன்னது டூமச்!

- கே.வி. ராமன், சேலையூர்

‘**எ**ன்ன செய்யப் போகிறார் கலைஞர்’ கட்டுரை சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைந்திருந்தது!

- க. குமரேசன், வில்லிவாக்கம்

ஜோக்ஸ் ஸ்பெஷலோ என வியக்கும் வண்ணம் ஏகப்பட்ட ஜோக்குகளை வழங்கி அசத்திட்டீங்களே!

- ஸ்ரீவித்யாகாளிதாஸ், சிதம்பரம்

உழைத்துச் சம்பாதித்துப் பெற வேண்டிய சௌகரியங்களை இலவசமாகக் கொடுக்கும் அரசியல் கட்சிகளின் போக்கைக் கண்டிக்கும் தலையங்கம் அருமை.

- தேவவிரதன், சென்னை - 20

ரஜினி படத்தில்தான் நாயகிகளுக்கு முக்கியத்துவம் இருக்காது. ரஜினி படம் பற்றிய செய்தியிலாவது நாயகிகளுக்கு இடம்தரக் கூடாதா? நாயகிகளைப் பற்றி ஒரு வரி கூட இல்லையே!

- ஏ. கந்தவேல், வி.கே.புரம்

வாழும் கலை பயிற்சியில் நான் மனதளவில் உணர்ந்ததை, சிதாரவி அழகிய வார்த்தைகளில் வடித்து விட்டார்!

- லலிதா, மைலாப்பூர்

கிராமத்து மக்களின் வெள்ளை உள்ளத்தை ‘தாய் மனசு’ சிறுகதையில் காண முடிந்தது.

- எஸ். மீனா, ஸ்ரீரங்கம்

அந்த நிகழ்ச்சிக்குப் பின் 100 ஆண்டுகள் ஓடிவிட்டன. அது மீண்டும் நிகழ மேலும் ஒரு நூறு ஆண்டுகள் ஆகலாம். ஆனால் இப்போது அதை கண்கூடாகக் காணலாம்.



ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் பக்தகோடிகள் அரிதிலும் அரிய அந்த நிகழ்ச்சியில் பங்கேற்று பரவசம் அடைந்தார்கள். ஆம், மே 9, 1907. அன்றுதான், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 68வது ஆச்சார்யாள் மஹாஸ்வாமி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளுக்கு கோலாகலமான பட்டாபிஷேகம் நடைபெற்றது. நிகழ்ச்சியின் ஒவ்வொரு அம்சமும் விவரிக்க முடியாத விசேஷத்துடன் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. பக்தி சிரத்தை மட்டுமின்றி, குதூகலமும், பாரம்பரியப் பரவசமும் ஒன்றிணைந்த அசாதாரணமான அந்த நிகழ்ச்சியின் நினைவுகள் மட்டுமே இன்று நமக்குக் கிடைத்துள்ள பாக்கியம்.

அந்த அற்புதக் கணங்களை மீண்டும் அனுபவித்து மகிழ

மே 27 மற்றும் மே 28, 2006

இடம் : **ஸ்ரீ சங்கர மடம், 92 மடத்துத் தெரு, கும்பகோணம்**

நிகழ்ச்சி : **ஸ்ரீ மஹாஸ்வாமி பாதுகா பட்டாபிஷேக வைபவம்**

ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் மற்றும் ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் ஆகியோரின் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

விழாக் கொண்டாட்டங்களில் பக்தி பெருக்கூட்டும் ஹோமங்கள், பாராயணங்கள், சஹஸ்ரபோஜனம், அன்னதானம், நாமஸங்கீர்த்தனங்கள், பிரவசனங்கள் மற்றும் இசைக் கச்சேரிகள் இடம் பெறவுள்ளன.

நம் வாழ்நாளில் ஒரு முறையே நடக்கக்கூடிய இந்த விழா நிகழ்ச்சியில் ஏராளமான எண்ணிக்கைகளில் அனைவரும் கலந்து கொண்டு, ஸ்ரீ திரிபுரசுந்தரி சமேத சந்திரமௌளீஸ்வரர், லட்சக்கணக்கான பக்தர்களின் இதயங்களில் இன்றளவும் குடியிருக்கும் ஸ்ரீ மஹாஸ்வாமி பெரியவாள் மற்றும் ஆச்சார்யாள்களின் ஆசிகளைப் பெற்றுப் பயன்பெற பக்தகோடிப் பெருமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அன்னதானம் மற்றும் இதர நிகழ்ச்சிகளுக்கு நன்கொடை அளிக்க விரும்பும் பக்தகோடிகள், 'ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமி பீடாரோஹண சதாப்தி மஹோத்ஸவ்' என்ற பெயரில் தங்கள் காசோலை / டிமாண்ட் ட்ராப்ட்களை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமி பீடாரோஹண சதாப்தி மஹோத்ஸவ் டிரஸ்ட் (பதிவு பெற்றது)
(மும்பை பொது டிரஸ்ட் சட்டம், 1950ன் கீழ் பதிவு பெற்றது)

1 & 4, கைலாஷ் பவன், ப்ளாட் 258 சயான் ரோடு, சயான் (மேற்கு) மும்பை 400 022. • ஃபோன் : 2404 4242 / 2401 0051.
• ஈமெயில் : contact@srikanchimahaswami100.org • வெப்ஸைட் : www.srikanchimahaswami100.org



சன்னதிக்குள்

'பெரியாரின் நெஞ்சில் தைத்த முள் எடுக்கப்பட்டுவிட்டது' என்று சொன்னார் முதல்வர் கருணாநிதி. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு நடந்த முதல் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளில் ஒன்று, 'எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் பயிற்சி, தகுதி இருக்குமேயானால் அவர்கள் இந்து அறநிலையத் துறையின் கீழ்வரும் கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிக்கப்படுவார்கள்' என்பது. அரசின் இந்த முடிவை பா.ஜ.க உட்பட எல்லாக் கட்சியினரும் வரவேற்று அறிக்கை விட்டுவிட்டார்கள். கருணாநிதி 'முள் எடுக்கப்பட்டது' என்று சொன்னாலும் அரசின் இந்த முடிவு இப்போது இருக்கும் அர்ச்சகர்களுக்கு முள்ளாகத் தைக்கிறது. 'வேலைவாய்ப்பு, கல்வி நிறுவனங்கள் ஆகிய இடங்களில் சமூக நீதி அமல்படுத்தப்படவுள்ள இக்கால கட்டத்தில் கோயில்களிலும் அது நிகழ வேண்டும்'' என்று அரசின் முடிவுக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் வாதம் செய்கிறார்கள்.

தகுதி அடிப்படையில் யாரும் அர்ச்சகர் ஆகலாம் எனில், அதே 'தகுதி அடிப்படைதானே' எல்லா நிலைகளிலும் இயங்க வேண்டும். பணியிடங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் தகுதியைக் கருதாமல் ஜாதி அடிப்படையில் ஒதுக்கீடு செய்வது முரணல்லவா என்கிற வாதமும் இருக்கிறது (காண்க இவ்வார தராசு பதில்கள்).

தமிழ்நாட்டில் சுமார் 35000 கோயில்கள் இருக்கின்றன. இந்தக் கோயில்களில் ஆதி சைவர்கள், பிராமணர்கள், பண்டாரங்கள், பூசாரிகள் ஆகியோர் அர்ச்சகர்களாக இருக்கிறார்கள். "எங்களுக்குக் கிடைக்கும் சம்பளம் மிக மிகக் குறைவு. சிறிய கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு ரூபாய் 150தான் சம்பளம். பழநி போன்ற பெரிய கோயில்களில் 3000 ரூபாய் கொடுக்கிறார்கள். ஏதோ பாரம்பரியமாக நாங்கள் இதைச் செய்து வருகிறோம். கோயில்களில் ஒவ்வொரு தொழிலை ஒவ்வொரு பிரிவினர் செய்து வருகிறார்கள். அதில் யாராவது தலையிடுகிறார்களா? பயிற்சி கொடுத்து தேர்ச்சி பெற்று அர்ச்சகராவது என்பது நடைமுறைக்குச் சாத்தியமல்ல. வீரமணி போன்றவர்கள் இந்த விஷயத்தைக் கிண்டி எடுத்து, அரசை சிக்கலில் மாட்டி வைக்கிறார்கள்'' என்று சொன்னார் சென்னையைச் சேர்ந்த ஒரு பழுத்த சிவாச்சாரியார்.

"கருணாநிதி ஆட்சிக்கு வரும்போதெல்லாம் இந்த விவ

ஆணையுமா சமூக நீதி?

காரத்தில் ஏதாவது சர்ச்சையைக் கிளப்பி விடுகிறார். ஏதோ ஒரு குறிப்பிட்ட ஜாதிக்கு எதிராகச் செயல்பட வேண்டுமென்ற நோக்கத்தில் அவர் செய்வது புரிகிறது. ஆனால் உண்மை நிலை அவர் நினைப்பதற்கு மாறுபட்டது'' என்கிறார் அர்ச்சகர்கள் சங்கத் தலைவர் அருணாசலம்.

"1970-ம் வருடம் கருணாநிதி ஆட்சியில் இருந்தபோது, இதே போன்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார். விவகாரம் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றது. ஐந்து நீதிபதிகள் கொண்ட பென்ச், 'மத சம்பந்தப்பட்ட விஷயங்களில் தலையிட அரசுக்குச் சிறிதும் உரிமையில்லை. ஆகம விதிகளின் கீழ் கட்டப்பட்டு, பராமரிக்கப்பட்டு வரும் கோயில்களில் பாரம்பரியமாக இருக்கும் நடைமுறையை மாற்றக்கூடாது' என்று நெத்தியடியாகச் சொல்லியிருக்கிறது. ஆனால் 2002-ல் சுப்ரீம் கோர்ட் சொன்ன தீர்ப்பின் அடிப்படையில், தகுதி இருப்பின் யார் வேண்டுமானாலும் அர்ச்சகர் ஆகலாம். கேரள கோயில்களில் ஆகம நடைமுறை கடைப்பிடிக்கப்படுவதில்லை. அங்கே வைதிக பூஜைதான். எனவே அந்தத் தீர்ப்பை எடுத்துக் கொள்வது சரியல்ல. மேலும் 1970களில் சுப்ரீம் கோர்ட் பென்ச் சொன்ன தீர்ப்புக்கு மாறுபட்டு, இதுவரை எந்தத் தீர்ப்பும் வரவில்லை. அரசியலில் அமைச்சர் பொறுப்பில் வாரிசுகளுக்கே வாய்ப்புகள் தேடி வரும் இந்தக் கால கட்டத்தில் கோயில்களில் மட்டும் அர்ச்சகர்களாக வாரிசுகள் பணி புரியக் கூடாதோ'' என்று காட்டமாகக் கேட்கிறார் அருணாசலம்.



'அர்ச்சகர் பொறுப்பு என்பது ஒரு ஜாதி உரிமை அல்ல. இது சொத்துரிமையைப் போன்று அந்தந்த குடும்பங்களின் வம்சாவளி உரிமை'' என்று சொல்கிறார் தமிழ்நாடு பிராமணர்கள் சங்கத் தலைவரான நாராயணன்.

''தமிழக அரசும், அரசியல்வாதிகளும் தங்களுக்கு அதிகம் பரிச்சயமில்லாத, ஈடுபாடில்லாத, அனுபவமில்லாத இதுபோன்ற மத நம்பிக்கைக்கு உட்பட்ட விஷயங்களில் சட்ட அதிகாரம் இருக்கின்ற ஒரே காரணத்துக்காகத் தலையிடுவதைத் தவிர்த்துவிட வேண்டும்'' என்கிறார் நாராயணன். அர்ச்சகர் சங்கம், பிராமணர் சங்கம் ஆகியவை எதிர்ப்புக் குரல்கள் கொடுத்தாலும், இந்து அமைப்புகள் ஒருமித்த குரலில் அரசு முடிவை ஆதரிக்கின்றன. தமிழகக்கோயில்களில் உள்ள பூசாரிகளிடம் செல்வாக்கு பெற்ற விஷ்வ ஹிந்து பரிஷத், தமிழக அரசின் முடிவை ஆதரிக்கிறது.

* அர்ஜூன்சம்பத்



* பெரிய கருப்பன்



"சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டு நாங்கள் இதை வரவேற்கிறோம். மற்றபடி 'பெரியார் இதயத்தில் தைத்த முள்' என்றெல்லாம் கருணாநிதி சொல்வது அரசியல் சித்து வேலை'' என்கிறார் இந்து

மக்கள் கட்சியின் தலைவரான அர்ஜுன் சம்பத்.

"இந்து மதத்தின் அனைத்துப் பிரிவினரும் ஒன்று என்று சொல்லிவிட்டு அர்ச்சகர்கள் பொறுப்புக்கு மட்டும் பெரும்பான்மையினரை நிராகரிப்பது எந்த வகையில் நியாயம்? குறிப்பிட்ட பிரிவினர்தான் ஆதியில் இருந்து கோயிலில் அர்ச்சகராக இருந்தனர் என்பது சரியான வாதம் அல்ல. ராஜராஜன் கட்டிய தஞ்சை பெரிய கோயிலில் லிங்கத்தை பிரதிஷ்டை செய்தவர் கருவூர் தேவர்தானே. அதேபோல் 16-ம் நூற்றாண்டுவரை பழனி கோயிலில் பூஜை செய்தவர்கள் பண்டாரம் பிரிவினர்தான். தாழ்த்தப்பட்டோர் என்று கருதப்பட்ட முடிதிருத்தும் மருத்துவ குலத்தோரின் மனைவிகள்தான், அன்று பிரசவம் பார்க்கும் மருத்துவச்சிகள். அந்தத் தொழிலை இன்று படித்துவிட்டு பல்வேறு வகுப்பினர் எடுத்துக் கொள்ளவில்லையா? கோயில்களில் அர்ச்சகர் வருமானம் மிகக் குறைவு. பின்னர் அதை ஏன் விட்டுத்தர மறுக்கிறார்கள்? அந்தப் பொறுப்பு கொடுக்கும் சமூக உயர்வுதான் அதற்குக் காரணம். ராமானுஜர் மனோபாவம் எல்லோருக்கும் வரவேண்டும். அப்போதுதான் மதத்தைப் பாதுகாக்க நினைப்பவர்களின் எண்ணம் ஈடேறும். தமிழக அரசின் இந்த உத்தரவுக்கு அரசியல் உள்நோக்கம் இருப்பதாக நான் கருதவில்லை. ஆனால் இதை நிறைவேற்ற மன உறுதி வேண்டும்" என்கிறார் தமிழர் தேசிய இயக்கத்தைச் சேர்ந்த பழ. நெடுமாறன்.

கோயில் விவகாரங்களில் பக்தர்களுக்கு முக்கிய பங்களிப்பு உண்டு. இந்த சர்ச்சையைப் பற்றி பக்தர்கள் என்ன நினைக்கிறார்கள்? "இறைவன் சந்நிதானத்துக்கு மனநிம்மதி தேடித்தான் வருகிறோம். கோயிலில் அர்ச்சகர் எங்களுக்கும் இறைவனுக்கும் பாலமாக இருக்கிறார். அவர் தோற்றம் மட்டுமின்றி அவரது மந்திர உச்சாடணம் அல்லது தமிழ் உச்சரிப்பு போன்றவையும் எங்களுக்கு மன நிறைவு தரும் விதத்தில் அமைய வேண்டும். இதையெல்லாம் வேண்டுமானால் பயிற்சி அளித்து வரவழைக்கலாம். ஆனால் பக்தி சிரத்தையை பயிற்சியால் வரவழைக்கவும் முடியாது; பரீட்சை வைத்து மதிப்பெண் போட்டு நிர்ணயிக்கவும் முடியாது! யார் அர்ச்சகர் என்பது முக்கியமல்ல. பக்தர்கள் மன நிறைவே முக்கியம். இயல்பாகவே இந்த மாற்றம் நடைபெற்றால் சந்தோஷம்" என்று சொன்னார் சிதம்பரம் நடராஜர் கோயிலில் நாம் சந்தித்த ஸ்டேட் வங்கி ஊழியர் ஐயப்பன்.

தி.மு.க ஆட்சியில் புதிதாகப் பொறுப்பேற்றுக்கொண்ட அறநிலையத்துறை அமைச்சர் பழனிவேல்ராஜன் மரணமடைந்த நிலையில், புதிதாக பெரிய கருப்பன் பொறுப்பேற்றிருக்கிறார். "அர்ச்சகர் விவகாரம் தொடர்பான ஆணை இதுவரை பிறப்பிக்கப்படவில்லை" என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். மற்றபடி பேசத் தயங்குகிறார்கள். அரசு தலைமை வழக்கறிஞர் விஷயத்தை அலசி ஆராய்கிறாராம்.

- ப்ரியன்




"எதிர்வீட்டு முனுசாமியின் மனைவி சற்றுமுன் இறந்துட்டாளாம்!"

"யாருக்கோ வந்த அதிர்ஷ்டத்தை சொல்ல என்னைத் தூக்கத்திலிருந்து எழுப்பித் தொலைக்கணுமா?"

- உ. ராஜாஜி

நீங்கள் கேட்டவை - தராசு



• பெருகும் ஆட்சேபணை!



• முழங்கும் எச்சரிக்கை!



• 'தொடரும்' நம்பிக்கை!

● அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி - 21

? 'உள்ளாட்சித் தேர்தலிலும் அ.தி.மு.கவுடன் கூட்டணி தொடரும்' என்கிறாரே வைகோ?

! அவருக்கென்ன, ஆறு இடங்களைப் பெற்று சட்டசபைக்குள் கட்சியை நுழைத்துவிட்டார். சந்தர்ப்பவாத கூட்டணியால் ஆட்சியை இழந்து நிற்பது அ.தி.மு.க.தானே... எனவே அம்மா யோசிக்கக் கூடும்.

● ச.ஆ.கேசவன், கோவில்பட்டி

? முக்கிய அறிவிப்புகளை அறிவித்ததோடு நிற்காமல், அவற்றால் ஏற்படும் இழப்புத் தொகையையும் முதல்வர் கோடிட்டுக் கூறியதேன்?

! "உங்களுக்கு எவ்வளவு சலுகை தந்திருக்கிறேன் பாருங்க!" என்று முரசொலிப்பது ஒரு பக்கம்; "இத்தனை இழப்பையும் ஈடு செய்தாக வேண்டும்; தயாராயிருங்க" என்று வரி செலுத்துவோரை எச்சரித்து சேகண்டி அடிப்பது மறுபக்கம்.

● ராஜசேகர், செங்கல்பட்டு

?ஏசு கிறிஸ்து பற்றிய ஆங்கிலப் படத்துக்கு எதிர்ப்பு வலுத்திருப்பது குறித்து?

! கிறிஸ்தவர்கள் அதிகம் வாழும் நாடுகளில் எதிர்ப்பு இல்லை. படம் கொட்டாவி விடுகிறது! இங்கே மைனாரிட்டியினர் என்றாலும் எதிர்ப்பு அதிகம். படம் ரிலீஸ் ஆனதும் சுறுசுறுப்பாக ஓடும்! அது சரி, இந்து மதத்தவர் மனங்களைப் புண்படுத்தும் எத்தனையோ படங்கள் இங்கே திரையிடப்படுகின்றன. அவற்றை சென்ஸார் அல்லது அரசு ஆட்சேபிக்கவில்லையே!

● கே.வி.ராமன், சென்னை - 73

? ஸ்ரீ தியாகராஜர் வசித்த திருவையாறு இல்லத்தை எவ்வித மாற்றமும் இன்றி 'ஒரிஜினலாக' பாதுகாக்க வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடரப்பட்டுள்ளதாமே?

! முற்றிலும் நவீனமாக அதனை இடித்துக்கட்டி, தம்பூரா வடிவத்தில் அமைக்கப்போவதாகவெல்லாம் பேச்சு அடிபட்டது. வரலாற்று ரீதியான வளமும் முக்கியத்துவமும் பெற்ற இடத்தை, அதில் பதிந்துள்ள வரலாற்றுச் சுவடுகள் மாறாமல் தியாகய்யர் காலத்தது போலவே பராமரிப்பதுதான் உயர்வு; மதிப்பு.

● ஆர்.விஸ்வநாதன், சென்னை - 4

? மேற்கு வங்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சியே தொடர்ந்து ஆட்சி நடத்துவதற்குக் காரணம் என்ன?

! மக்களின் நம்பிக்கையைப் பெறும்

சிதம்பரம் ஜகா வாங்கிவிட்டாரே...?

வகையில் நல்லாட்சி வழங்குவதுதான்.

● **பத்ம சிவாஜி, நீடாமங்கலம்**

? தங்கள் மனத்தில் நிலைத்து நிற்கும் நகைச்சுவை நடிகர் யாரோ?

! என்.எஸ்.கே. காரணம், எழுதித் தரப்பட்ட வசனங்களைப் பேசாமல் தாமே நகைச்சுவை காட்சிகளை உருவாக்கும் சக்தி அவருக்கிருந்தது. அந்த நகைச்சுவை உயர்தரமாகவும் இருந்தது. 'நல்லதம்பி' என்.எஸ்.கே – மதுரம் தம்பதியின் புகழை என்றும் நிலைத்திருக்கச் செய்யும்.

● **பி.எஸ்.பேச்சி, ஆத்தூர் (தெற்கு) தூத்துக்குடி ✱**

? இன்றைய நிலையில் அதிக நாவல்கள் படமாக வருவதில்லையே ஏன்?

! தமிழில் மட்டும்தான் இந்தத் தேக்க நிலை. மலையாளம், மே.வங்கத்தில் பெரும்பாலும் நாவல்கள்தான் திரைப்படங்களாகின்றன. இப்பொழுது தமிழிலும் கொஞ்சம் மாற்றம் தென்பட ஆரம்பித்திருக்கிறது. லேட்டஸ்டாக, சுஜாதாவின் 'பிரிவோம் சந்திப்போம்' நாவலைப் படமாக்கவிருக்கிறார் 'செல்லமே' காந்தி கிருஷ்ணா.

● **என். கோதண்டராமன், மதுராந்தகம்**

? 'ரேஷனில் இரண்டு ரூபாய்க்கு அரிசி என்பது முழுக்க முழுக்க மாநில அரசு சம்பந்தப்பட்ட திட்டம். இதில் மத்திய அரசு எந்தவித உதவியும் செய்ய முடியாது' என ப.சிதம்பரம் ஜகா வாங்கிவிட்டாரே?

! அரிசிக்கான மானியத்தை மாநில அரசே தந்துவிட்டு, வளர்ச்சித் திட்டங்களுக்கு என்று சொல்லி, மத்திய அரசிடம் கேட்டு வாங்கிக் கொள்ளலாமே! ஆறும் நாலும் பத்து; ஏழும் மூன்றும் பத்து!

● **திமிங்கிலம், கோபி ❑**

? தகுதி அடிப்படையில் அனைத்து ஜாதியினரும் தமிழகத்தில் கோயில் அர்ச்சகர் ஆகலாம் என்று சட்டம் வரும் பட்சத்தில், எந்தத் துறையிலும் இடஒதுக்கீடு இன்றி, தகுதி அடிப்படை மட்டுமே செயல்பட வேண்டுமல்லவா?



• ஒலிக்கும் சேகண்டி!

! போட்டீங்களே ஒரு போடு! 'திமிங்கிலம்' என்ற உங்கள் புனைபெயருக்கு ஏற்ப, தைரியமா தாக்கி, ஒதுக்கீடு கப்பலையே உலுக்கிட்டீங்க!



• பொலியும் பழைமை

● **குவளை எழில், சென்னை - 92**

? "மைனாரிட்டி அரசு தாக்குப் பிடிக்க முடியாது. தைரியம் இழக்க வேண்டாம். நாம் திரும்பவும் வருவோம்" என்று ஜெ. முழங்குகிறாரே?



• நிலைக்கும் புகழ்

! மைனாரிட்டி அரசு கடைசிவரை தாக்குப்பிடித்தால்கூட அது மைனாரிட்டி அரசுதான்! ஜெயலலிதா முழங்குவதில் அர்த்தம் இருக்கிறது. கருணாநிதி செய்ததில் தவறு இருக்கிறது.

❑ ரூ.100/- பரிசு பெறுபவர்:

திமிங்கிலம்,
PSG காலனி,
86, காமராஜர் வீதி,
கோபி - 638 452

✱ ரூ.50/- பரிசு பெறுபவர்:

பி.எஸ்.பேச்சி,
8/256, அம்மன் கோவில் தெரு,
ஆத்தூர் (தெற்கு),
தூத்துக்குடி - 628151



கல்கி



2006 ஜூன் 4
விய வைகாசி 21
மலர் : 64
இதழ் : 44

தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா
- பாரதியார்.


மிரட்டினால் விளையுமா சமூகநீதி!


பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மத்திய அரசின் உயர் கல்வி நிறுவனங்களிலும் 27 சதவிகித இட ஒதுக்கீடு அடுத்த ஆண்டு முதல் அமுலுக்கு வருகிறது. கூடவே, அரசு நடத்தும் உயர்கல்வி நிறுவனங்களில், மாணவர் சேர்க்கையும் அதிகரிக்கப்படவுள்ளது! அதாவது, 'பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஒதுக்கீட்டை அறிவிக்கும் அதே வேளையில், பொதுப் பிரிவிலான இடங்களைக் குறைக்காமலும் பார்த்துக் கொள்வோம்' என்கிறது அரசு! 'பாலுக்கும் காவல்; பூனைக்கும் தோழன்' என்று இரட்டை வேடம் போட முயற்சி செய்யும் அரசியல்வாதிகள், நாட்டின் எதிர்காலத்தைக் காவுகொடுத்திருக்கிறார்கள். அதிகரிக்கப்பட்ட இடங்களிலும் ஒதுக்கீடு வேண்டும் என விரைவிலேயே குரல்கள் எழாமல் போய்விடுமா என்ன!

'நாங்கள்தான் உங்களுக்கான இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்தோம் என்று மார்தட்டிக் கொண்டு, பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் வோட்டுகளைப் பெற முற்படும் இந்த முயற்சி தொலைநோக்கற்ற அப்பட்ட சுயநலம்! இதனைச் சுட்டிக் காட்டித்தான் தேசிய பேரறிவு கமிஷனின் (National Knowledge commission) நிறுவன உறுப்பினரான பிரதாப் பானு மேத்தா அப்பதவியிலிருந்து ராஜினாமா செய்திருக்கிறார். தேசிய கல்விக் கொள்கையை நெறிப்படுத்தி வழி காட்ட நிறுவப்பட்டது இக்கமிஷன்.

பிரதமருக்குத் தாம் எழுதியுள்ள கடிதத்தில், இந்த இட ஒதுக்கீடு கொள்கையானது, அறிவார்ந்த சமுதாயத்தின் முக்கியமான நான்கு நெறிகளை மீறுவதை எடுத்துச் சொல்லியிருக்கிறார் மேத்தா:

* எந்தவொரு திட்டமும் சிறப்பாகச் செயல்படும் என்ற





உறுதியின் அடிப்படையில்தான் அமுலுக்கு வரவேண்டும். கடந்த கால வரலாறை நோக்க, அவ்வுறுதி இந்த ஒதுக்கீடு திட்டத்தில் கிடையாது. * பலதரப்பட்ட கல்வி நிறுவனங்கள் தங்களுக்கென்று தனித்தனியே கோட்பாடுகள் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கையில், அவை அனைத்துக்கும் பொதுவாக ஒரே ஒதுக்கீடு கொள்கையை, அவற்றின் ஈடுபாடோ சம்மதமோ இன்றித் திணிப்பது முறையற்றது. உலகமயமான பொருளாதாரச் சூழலில் இது தற்கொலைக்குச் சமமானது. * ஏற்கெனவே அரசியல்மயமாக்கப்பட்டுவிட்ட கல்விச் சூழல், இந்த முடிவினால் மேலும் அரசியல் சகதியில் சிக்குண்டு அர்த்தமிழக்கிற நிலைக்குத் தள்ளப்படுகிறது. * ஜாதி வேறுபாடு குறித்த விஷ சிந்தனைகளும் வெறுப்பும் மேலும் பரவி, ஆழமாக வேரூன்றுவதற்கான அபாயகரமான சூழலுக்கு அரசு வழி வகுத்திருக்கிறது.

- இவ்வாறு சுட்டிக்காட்டும் மேத்தா, பிற்படுத்தப்பட்டோரின் முன்னேற்றம் நிகழ்ந்தாலேயொழிய நாட்டின் வளர்ச்சி முழுமைபெறாது என்பதையும் ஏற்கிறார்; அதற்கான வழிமுறைகளையும் கூறுகிறார் : ஆரம்பக் கல்வி, உயர்பள்ளி வகுப்புகள் போன்ற நிலைகளில் இப்பிரிவினரின் கல்வித்தரத்தை உயர்த்த அரசு சிறப்பு முயற்சிகள் எடுத்துக் கொள்ளட்டும். இப்பிரிவினருக்குக் கூடுதல் கவனம் அளிக்கப்பட்டு, பள்ளிப் படிப்பை முடிக்கும் முன் ஒதுக்கீடுக்கே அவசியமற்ற கல்வித் தரத்தை எட்ட அவர்களுக்கு உதவ வேண்டும். - இது மேத்தாவின் ஆலோசனை.

ஆனால், மெய்யான சமூகநீதிக்கு வழிவகுக்கக் கூடிய இதுபோன்ற ஆக்கபூர்வமான ஆலோசனைகளை அரசியல்வாதிகள் எங்கே ஏற்பார்கள்?! புது தில்லியில், கூட்டணி கட்சிகளின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பிரதமர் முன்வைத்த ஒரு சமரசத் திட்டத்தை பரிசீலனைக்குக் கூட உட்படுத்தாமல், ஒரேயடியாக எதிர்த்து பா.ம.க தலைவர் ராமதாஸ் தமது குரலை உயர்த்திப் பேசி எல்லோரையும் அதிர்ச்சி அடையவைத்திருக்கிறார்.

வேறு வழியின்றி மத்திய அரசு 27 சதவிகித ஒதுக்கீடை அறிவிக்க, கருணாநிதி, ராமதாஸைத் தொலைபேசியில் அழைத்து "திருப்திதானே?" என்று கேட்க, "இது நமக்கு மிகப் பெரிய வெற்றி" என்று அவர் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்!

பிரதமரையும் சோனியா காந்தியையும் மிரட்டிப் பணிய வைத்துவிடலாம். ஆனால், பிற்படுத்தப்பட்டோருக்கு மெய்யான சமூக நீதியை இதனால் பெற்றுத்தர முடியாது. அதற்கு, சுயநல அரசியலுக்கு அப்பாற்பட்ட ஆழ்ந்த சிந்தனை தேவை. ○


ஆஹா
50
டிப்ஸ்...
+
மேனிப்
பராமரிப்பு
டிப்ஸ்
64
ஜூன் 2006
இதழ்
3 புத்தகங்கள்
என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!

இந்த வருடமும் ஐ.ஏ.எஸ் தேர்வு முடிவில் ஜாக்பாட் அடித்துள்ளது தமிழகம். ஒன்பது பெண்கள் உள்பட நாற்பத்து நான்கு பேர் தேர்வில் வெற்றிபெற்றது போக, அகில இந்திய அளவில் நாலாவது இடத்தைப் பிடித்திருக்கிறார் தமிழகத்தைச் சேர்ந்த கணேசன். கும்பகோணத்தில் வசித்து வரும் ஜெகதீசன் - சமரசம் தம்பதியின் மூத்த மகன்.

இந்தியன் வங்கிக் கிளையொன்றில் சீனியர் மேனேஜராகப் பணிபுரியும் ஜெகதீசனுக்கு, தம் மகன்களை உயர்பதவியில் அமர வைத்துப் பார்க்க வேண்டுமென்ற கனவு நனவானதில் ரொம்பவே மகிழ்ச்சி. "கணேசனுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்ததில் வேலூர் ஐடா ஸ்கடர் பள்ளியின் பங்கு முக்கியமானது. தமிழ்நாட்டிலேயே ஐ.சி.எஸ்.சி பாடத்திட்டம் போதிக்கப்படும் மிகச் சில பள்ளிகளில் அதுவும் ஒன்று'' என்கிறார் பெருமிதத்துடன்.

"ப்ளஸ்டூ தேர்வுக்குப் பின்னர் மருத்துவக் கல்விக்கான கட் ஆஃப் மார்க் குறைவாகிப் போனதில் எம்.பி.பி.எஸ் சீட் கிடைக்கவில்லை. சென்னை, பல் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படித்தேன். அங்கே என்னுடன் படித்த தீபக்குக்கும், எனக்கும் ஐ.ஏ.எஸ் தேர்ச்சி பெற வேண்டுமென்ற எண்ணம் தீவிரமானது.

டெல்லியிலுள்ள வாஜிராம் - ரவி ஐ.ஏ.எஸ் பயிற்சி மையத்தில் சேர்ந்து தீவிரமாக ஐ.ஏ.எஸ் ஆக முயற்சி செய்தேன். 2003 தேர்வில் தோல்வி. 2004 தேர்வில் வெற்றி பெற்றாலும் அகில இந்திய அளவில் 325வது ரேங்க். சென்ட்ரல் எக்சைஸ் துறையில் உதவி ஆணையர் பணி கிடைத்தது. பரிதாபாத்தில் பயிற்சி எடுத்தபடியே 2005 தேர்வுக்காக உழைத்தேன். இன்று என் முயற்சிக்குப் பலன் கிடைத்திருக்கிறது. முதல் பத்து இடங்களுக்குள் இடம் பிடிப்போம் என எதிர்பார்த்தேன். என் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை'' எனும் கணேசன், "பயிற்சி முடிந்ததும் தமிழ்நாட்டிலேயே பணிபுரிய விரும்புகிறேன். மத்திய - மாநில அரசுகளின் நலத்திட்டங்கள் அடித்தட்டு மக்களைச் சென்றடையும் வகையில் பணிபுரிவதே என் லட்சியம்'' என்கிறார்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



"எதிர்பார்த்த வெற்றியிது!"

"காசுமில்லே; கௌரவமுமில்லே!"

நம்மில் எத்தனை பேர் ஒரு கச்சேரிக்குச் சென்றால் பிரதான பாடகரையும், வயலின், மிருதங்கத்தையும் காது கொடுத்துக் கேட்பது போல் தம்பூராவைக் கேட்கிறோம்? ஒரு கச்சேரி சோபிக்க வேண்டுமானால் தம்பூராவின் பங்கு என்ன? ஆதார சுருதியாக இருக்கும் தம்பூராவை மீட்டும் கலைஞர்களுக்கு உரிய கௌரவமும் சன்மானமும் கிடைக்கிறதா?

பல கேள்விகளுடன் நாம் சந்தித்தது பெங்களூரிலிருக்கும் ஐம்பது வயது தம்பூரா பிரசாத்தை! சுமார் முப்பது வருடங்களாகத் தம்பூராவை மீட்டும் ஏழைக் கலைஞர்.

"நான் பிறந்தது வளர்ந்தது பெங்களூரில்... முதலில் வயலின்தான் கத்துக்கிட்டேன். பொருளாதாரப் பிரச்னை. தொடர்ந்து கத்துக்க முடியல.

* தம்பூரா பிரசாத்



தம்பூராவைப் பிடிச்சுக்கிட்டேன். தம்பூரா மீட்டுறது எளிதில்ல. சுருதி சுத்தமா சேரணும். சுருதி கலையக் கூடாது. பாடகர்களை அப்ஸர்வ் பண்ணணும். எனக்கு முதலில் ஆசி கூறி தம்பூராவை வழங்கிய லால்குடி ஜெயராமனை வாழ்வில் மறக்கவே முடியாது. இதுவரை ஆயிரக்கணக்கான கச்சேரியில் தம்பூரா போட மேடையேறி விட்டேன்..." பெருமையுடன் சொல்கிறார் பிரசாத்.

"பல வருடங்களுக்கு முன்னால் வெறும் பத்து ரூபாய்தான் தம்பூரா போடுபவருக்கு. இப்போது 100 அல்லது 150 ரூபாய் கிடைக்கிறது. அதுவும் பக்காவாகக் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. இன்னிக்கு இத்தனை மணிக்கு கச்சேரி என்று சொல்லிவிட்டு நாம் போனவுடன் கூலாக 'கான்ஸலாயிடுச்சு', 'வேறொருவரை புக் பண்ணிட்டோம்' என்பார்கள். எங்களுக்கு சபாக்காரர்களும் சரியாகப் பணம் தருவதில்லை. பாடகர்களும் தருவதில்லை. ஆயிரக்கணக்கில் பாடகர்களுக்குச் சம்பளம் தருபவர்கள், எங்களுக்கு ஒரு சில நூறுகள் தரவே ரொம்ப யோசிப்பார்கள்.

ஒரு மாதத்துக்கு எத்தனை கச்சேரி இருக்கும், எவ்வளவு பணம் வரும் என்றெல்லாம் சரியாகச் சொல்வது கஷ்டம். ஆனால் யார் கூப்பிட்டாலும் டக்கென்று தம்பூராவுடன் போய் விடுவேன். ஜுரமா இருந்தாலும் போயிருக்கேன். தம்பூரா மேல் அப்படி ஒரு லயிப்பு. 'பிரமாதம், சுருதி கலையாம நல்லா போட்டே', 'பிரசாத் நீ வந்துட்டா போதும்...' அப்படின்னு கலைஞர்கள் பாராட்டறதைக் கேட்டாலே போதும் என் கண்லேர்ந்து கண்ணீர் அருவியாக் கொட்டும்" என்கிறார் பிரசாத் குரல் கம்ம...

மிகச் சிறிய அளவில் ஒரு பேக்கரி கடை வைத்திருக்கும் பிரசாத், கச்சேரி புக் ஆனால் அதில் பூட்டைத் தொங்கவிட்டுவிட்டு மேடையேறி விடுகிறார்.

"தம்பூராவை விட்டா எனக்கு வேற ஒண்ணுமே தெரியாதே. நான் கேட்பதெல்லாம் எங்களுக்கும் கௌரவத்தைக் கொடுங்க, சன்மானம் தாங்கன்னுதான். பெரிய பாடகர்களுக்கு கார், ப்ளேன், ஹோட்டல் என எல்லாச் செலவுகளுக்கும் தருகிறார்கள். எங்களுக்கு ஒரு ஐநூறு ரூபாயாச்சும் தரலாமே. இசை, சங்கீதம் இதுதான் என் மூச்சு. பாட்டுன்னா ராத்திரி பூரா தூக்கமே வராது. என்ன கஷ்டம் வந்தாலும் தம்பூராவை விடமாட்டேன்" என்கிறார் பிரசாத்.

- லதா சேகர்



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.

கிளை நிறுவனம் : புதிய எண். 16, பழைய எண். 19, முதல் மாடி, 30வது தெரு,
தில்லைகங்கா நகர், நங்கநல்லூர், சென்னை – 600 061. போன் : 22333214

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 18 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை **ஸ்ரீ சாரதா சக்தி பீடம்** என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்

ஒரு மனிதனுக்கு பூஜை செய்வதற்கு உருண்டையான கல் ஒன்று தேவைப்பட்டது. தனக்கு வேண்டிய சரியானதொரு கல்லை அவன் பல ஊர்களிலும் தேடி அலைந்தான். கிடைக்கவில்லை. "அருகில் இருக்கும் மலைக்குப் போய்த் தேடிப் பார். நிச்சயம் உனக்கு வேண்டிய மாதிரி கல் கிடைக்கும்" என்றார் ஒரு பெரியவர். அவனும் கல்லைத் தேடி மலையின் உச்சிவரை சென்றான். அங்கும் ஏமாற்றமே மிஞ்சியது. அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. அங்கே கிடந்த ஒரு கல்லை ஆத்திரத்துடன் மலை உச்சியிலிருந்து உதைத்துக் கீழே தள்ளினான். அடுத்து என்ன செய்வது என்று யோசித்தவாறே மலையிலிருந்து கீழே இறங்கினான்.

அவன் மலை அடிவாரத்தை அடைந்தபோது, அங்கே முனைகள் மழுங்கிய, வழுவழுப்பான, உருண்டையான கல் ஒன்றைப் பார்த்தான். "அட! நான் இதுபோல ஒரு கல்லைத் தேடிக்கொண்டுதானே மலை மீது ஏறினேன்!" என்று ஆச்சரியத்துடன் சொன்னான். ஆனால் அது உண்மையில், அவன் மலை உச்சியிலிருந்து உதைத்துத் தள்ளிவிட்ட கல்தான். கரடுமுரடான கல், மலை உச்சியிலிருந்து கீழே விழுகிறபோது, மலையின் மற்ற கற்களுடன் இடித்து, இடித்து முனைகள் மழுங்கி, வழுவழுப்பாகி, உருண்டை உருவத்தை அடைந்து விட்டது. அந்த மனிதன் தேடிக் கொண்டிருந்த பூஜைக்கு ஏற்ற கல்லாகி விட்டது. அந்தக் கல் மலை உச்சியிலேயே இருந்திருந்தால், இந்த உருமாற்றம் நிகழ்ந்திருக்காது. கல்லுக்கு பூஜையில் இடம்பெறும் பாக்கியமும் கிடைத்திருக்காது. அதுபோலத்தான், 'நான்' என்கிற மனோபாவத்திலிருந்து விடுபட்டு பணிவு என்னும் மனோபாவத்தைப் பெறுவதற்கு, கர்மயோகம் அவசியமாகும். அப்போதுதான் அகங்காரம் என்னும் கூரிய முனைகள் மழுங்கி, மனம் எப்போது, என்ன செய்துகொண்டிருந்தாலும் அதனை இறைவழிபாடாகவே கருதுகிற மனோபாவம் ஏற்படும். அகங்காரம் இருக்குமிடத்தில் பணிவு இருக்காது. ஆனால் பணிவு இருந்தால்,




அன்பெனும் மழையிலே -

வாழ்க்கையில் எதையும் பெற முடியும்.

பல கற்களை ஒரு இயந்திரத்தில் ஒன்றாகப் போட்டுச் சுற்றுகிறபோது, அவற்றின் முனைகள் மழுங்கி, சீரான வடிவத்தைப் பெறுகின்றன. பலனை எதிர்பாராத கர்மயோகம், இதேபோல் ஒரு மனிதனின் அகங்காரத்தை அகற்றி, நற்பண்புகள் உருவாக வழிசெய்கிறது. இதற்கு ஒரு குருவின் வழிகாட்டுதல் மிகவும் உபயோகமாக இருக்கும். காரணம், குருவுக்குச் சுயநலம் இருக்காது. அவர் சிஷ்யர்களுக்காகவே வாழ்பவர். அப்படிப்பட்ட சற்குருவிடம் சிஷ்யன் சரணடைய வேண்டும்.

கண்ணில் புரை பாதிப்பு ஏற்பட்டால் கண் டாக்டரிடம் செல்கிறோம். அவர் அதனை ஆபரேஷன் செய்ய வேண்டும் என்கிறார். நாம் அதற்கு எதிர்ப்பு ஏதும் சொல்லாமல் சம்மதம் அளிக்கிறோம். அவரும் ஆபரேஷன் மூலம் கண்ணைச் சரி செய்கிறார். அது போலவே சிஷ்யனிடமுள்ள அகங்காரத்தை அகற்றுவதற்கு, குரு சொல்லும் வழிகளை



மலரும் வரை காத்திரு!

மாதா அமிர்தானந்தமயி

சிஷ்யன் சிரத்தையுடன் கடைப்பிடிக்க வேண்டும். அதுதான் சரணாகதி.

மனித வாழ்க்கையின் பலவிதமான சூழ்நிலைகளிலும் பல தரப்பட்ட சவால்களையும், பிரச்னைகளையும் எதிர்கொள்ள நேரிடும். அதுபோன்ற சமயங்களில் மனிதன் தனது மனவலிமையை இழந்துவிடக் கூடாது. அப்படிச் செயல்பட வேண்டுமெனில், மனதுக்குப் போதுமான பயிற்சி அவசியம். அதுவே கர்மயோகம்.

கர்மயோகம் ஒன்றுதான் நம்மை லட்சியத்தை நோக்கி அழைத்துச் செல்லும் என்று அம்மா சொல்லவில்லை. கர்மமும், ஞானமும், பக்தியும் அவசியம்தான். கர்மமும், பக்தியும் ஒரு பறவையின் இரண்டு சிறகுகள் என்றால், ஞானம் அதனுடைய வால் ஆகும். இவை அனைத்தும் இருந்தால் அல்லவா ஒரு பறவையால் மேல்நோக்கிப் பறக்க முடியும்?

ஒரு மலர் மொட்டாக இருக்கும்போது, அதன் மணத்தையும், அழகையும் நம்மால் அறிந்துகொள்ள முடியாது. அது மலர வேண்டும். அந்தச் செயல் இயற்கையாக நிகழ வேண்டிய ஒன்று. பொறுமை இழந்து, அந்த மலரின் இதழ்களை விரல்களால் பிரித்து பூவை மலரச் செய்ய முயன்

றால், பூ பாழாகுமேயொழிய வேறொரு பலனுமில்லை. மொட்டு தானாக மலரும் வரை பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். அப்போதுதான் மலரின் மணத்தையும், அழகையும் முழுமையாக அனுபவிக்க முடியும்.

ஒவ்வொரு கல்லிலும் ஒரு சிலை மறைந்திருக்கிறது. கல்லைப் பார்க்கிற போது அது நமக்குப் புலப்படுவதில்லை. சிற்பி அந்தக் கல்லில் உள்ள தேவையில்லாத பகுதிகளை நீக்குகிறபோது, அந்தக் கல்லிலிருந்து சிலை வெளிப்படுகிறது. அந்தக் கல், பல நாட்கள் அந்த சிற்பிக்கு முன்னால் பொறுமையைக் கடைப்பிடித்ததால்தான் அழகிய சிலையாக உருப்பெற்றது.

இதைப் பற்றி ஒரு சின்னக் கதை சொல்லுவார்கள். சபரிமலையில், பதினெட்டுப் படிகளுக்குக் கீழே உள்ள ஒரு கல், "நானும் கல்தான்; சன்னிதானத்தில் இருக்கும் ஐயப்பன் சிலையும் கல்தான். என்னை எல்லோரும் மிதித்துக் கொண்டு மேலே ஏறிச் செல்கிறார்கள். ஐயப்பன் சிலையை வணங்குகிறார்கள். இது எப்படி நியாயமாகும்?" என்று கேட்டதாம். இதைக் கேட்ட ஐயப்பன் சிலை, "இப்போது எல்லோரும் வணங்குவதை மட்டும்தான் நீ பார்க்கிறாய். ஆனால், இங்கே வருவதற்கு முன்னால், ஒரு சிற்பி உளியால் என் உடல் முழுவதும் லட்சக்கணக்கான முறைகள் கொத்தினான். அப்போது எல்லா வலியையும் பொறுமையோடு நான் தாங்கிக் கொண்டேன். அதன் பலனாகத்தான் இன்று என்னைக் கோடிக்கணக்கான பக்தர்கள் வணங்குகிறார்கள்'' என்று பதில் சொன்னதாம்.

(அன்பு பெருகும்)

அம்மா

இரவு நேரங்களில் தன்னுடைய வீட்டுக்கு அருகிலிருந்த கடற்கரைக்குப் போய் தியானம் செய்வதை சுதாமணி மிகவும் விரும்பினார். இலேசான வெளிச்சம், பரந்த நீலவானம், அதில் மின்னும் நட்சதிரங்கள், உடலைத் தழுவிச் செல்லும்போதே மனதுக்கும் இதமான கடற்காற்று இவையனைத்தும் தேவியின் தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்துவதாக அவருக்குத் தோன்றும். கடற்கரைக்குச் சென்று அமர்ந்த சில நிமிடங்களிலேயே, அவரது மனம் அமைதியாகி உள்முகமாகிவிடும்.

சுதாமணி அமைதியாக கடற்கரையில் தியானம் செய்துகொண்டிருக்க, அவருடைய வீட்டில் சுகுணானந்தர் தன் மகளைக் காணாமல் தவிப்புடன் தேடிக்கொண்டு கடற்கரைக்கு வருவார். அங்கே சுதாமணி ஒரு பாறையைப் போல அசையாமல் தியானத்தில் மூழ்கியிருப்பார்.



சுதாமணி இரவு நேரத்தில் தனியாகக் கடற்கரைக்குச் செல்வதற்கான உண்மையான காரணத்தை அறியாத ஊரார், அவரைப் பற்றி அவதூறாகப் பேசலானார்கள். இது சுகுணானந்தரையும், தமயந்தி அம்மாவையும் மனவருத்தமடையச் செய்தது. இதனால் சுகுணானந்தர் மிகவும் முயற்சி செய்து தன் மகள் இரவில் தியானம் செய்ய கடற்கரைக்குச் செல்வதைத் தடுத்துவிட்டார்.

- மௌலி

நீ...நான்...நிஜம்!

ஸ்வரமஞ்சரி

ஒரு ராட்சதப் பறவை தரையிறங்குவதைப் போல பேரிரைச்சல் கேட்டது. அரைத் தூக்கத்தை உதறிவிட்டு அந்த மாடியறையிலிருந்து வெளிப்பட்டு, பாத்ரூம் செல்லும் மாடிப்படியின் நாலைந்து படியிறங்கி கைப்பிடிச் சுவரைப் பற்றியபடி தென்னைமரத்தின் கிளைகள் மறைக்காத ஒரு கோணத்தில் நின்று கொண்டு பார்த்தான் அவன். மெதுவான வேகத்தில் ஊர்ந்து வந்தது அந்த விமானம். உயர்ந்த காம்பவுண்ட் சுவருக்கு வெளியிலிருந்து எட்டிப் பார்க்கும் குழந்தையின் குதூகலம் அவனுக்குள் தோன்றியது. ஒரு விமானத்தை இவ்வளவு அருகில் அவன் பார்த்ததேயில்லை.

இப்போது அவன் பார்வையிலிருந்து மறைந்து விட்டது அந்தப் பறவை.

எல்லாவற்றையும் ரசனையோடு பார்க்கத் தூண்டும் தனிமை. இந்தத் தனிமை இனிமையா? யார் சொன்னது?

தன் ஊரிலிருந்து முந்நூறு கிலோ மீட்டருக்கப்பால் இந்தத் திருவனந்தபுரத்தில் வந்து வேலை பார்க்க வேண்டிய சூழ்நிலை, நிர்ப்பந்தம் இதையெல்லாம் நினைக்கும்போது காதர் பாயின் மருமகன் யூசுப்பின் நினைவுதான் வருகிறது. அவன் முகத்தைக் கூட பார்த்ததில்லை. இருந்தாலும் காதர்பாய் பேசும்போது யூசுப்பின் முகமும் அதனூடே தெரிந்து மறையும் ஆயிரமாயிரம் எண்ண வோட்டங்களும் அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

"அண்ணாச்சி, என் மருமகன் இந்த வாரத்துல துபாய் போறார். அந்த விஷயமாத்தான் அலைஞ்சிட்டிருக்கேன்."

"அப்படியா பாய்... என்ன வேலையா போறார்?"

"போன ட்ரிப் போனபோது அங்க டிரைவர் வேலை கிடைச்சிருக்கு. ஆனா இந்தத் தடவை என்ன வேலை கிடைக்கும்னு தெரியாது. அங்க போய் கிடைக்கிற வேலையைப் பார்க்க வேண்டியதான்."

"எந்த வேலைன்னு உறுதியில்லாம எப்படிப் போறார்? எப்படி அனுப்புறீங்க?"

"எந்த வேலையாயிருந்தாலும் இங்க கிடைக்குற சம்பளத்தைவிட அதிகமாத்தான் கிடைக்கும். அங்க போயி சமாளிச்சுக்குவார்."

"அந்த வருமானத்துக்காக அவர் இழக்கும் விஷயங்கள் எத்தனை? வாழ்க்கையின் இனிமையான தருணங்கள் எத்தனை?"

"அதெல்லாம் பார்த்தா முடியாது. இங்க ஒரு ஆட்டோவை வாடகைக்கு எடுத்து ஓட்டிக்கிட்டிருந்தார். விடிய விடிய ஓட்டினாலும் வாடகை போக வீட்டுச் செலவுக்குத்தான் வரும்."

"அது போதாதா?"

"அது போதாது அண்ணாச்சி, போதாது. ஒவ்வொரு நாளும் நாளையைப் பற்றிய நம்பிக்கையில்லாமத்தான் நகருது. வருங்காலத்துக்குன்னு சேமிக்கணும்னு நினைக்கும்போது ஆசைகளையும் சுகங்களையும் ஓரமாத் தூக்கி வெச்சாத்தான் முடியும்."

"உங்க மருமகன் எப்படி ஃபீல் பண்றாரு?"

"என்ன ஃபீலிங்?"

அதுதானே... தன்னைப் போல் எல்லோரும் புலம்பிக் கொண்டிருப்பார்களா என்ன?


"ஒண்ணுமில்ல பாய்..."

"என்ன சொல்ல வர்றீங்க?"

"சொல்லிப் புரிய வைக்க முடியலே."

"ம்... நான்கூட கல்ஃப்ல அஞ்சு வருஷம் இருந்துட்டு வந்தவன்தான். காசை கைநிறைய பார்த்துட்டோம்னா மத்ததெல்லாம் மனசுல வராது. சரி, நான் என் மெஷினை ஓட்டப் போறேன்." அவர் சிரித்தபடி நகன்றார்.

அவனுக்கும் அவன் மெஷினில் வேலையிருந்தது.



[redacted]

இப்போதெல்லாம் அதிகாலையில் விழிப்பு வந்துவிடுகிறது அவனுக்கு. காலைக் கடன்களை முடித்துவிட்டு காலேஜ் ஸ்டாப்புக்குப் போய் ஒரு சாயா குடித்துவிட்டு வந்து குளிக்க வேண்டியது தான். வேறொன்றும் வேலையில்லை. பிரஸ்ஸிலிருந்து புறப்பட்டு சாயாக்கடை வரைதான் எத்தனை நண்பர்கள்... இருந் தாலும்...

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ப தெல்லாம் படிக்கும்போதுதான் சுகம்.

கீழே பிரஸ் திறக்கும் ஓசை கேட்டது. யாராயிருக்கும். அட... காதர் பாய். இவ்வளவு சீக்கிரம் வரும் பழக்கம் கிடை யாதே அவருக்கு. கீழே இறங்கிப் போனான் அவனும்.

"என்ன பாய்... இவ்வளவு சீக்கிரம். ஏதும் அவசர வேலையா?"

"இல்ல அண்ணாச்சி, ஒரு இடத் துக்குப் போக வேண்டியிருந்தது. போன விஷயம் முடிஞ்சது. அப்படியே இங்க வந்துட்டேன்."

என்ன விஷயமென்று அவர் முகம் பார்த்தான் அவன். அவர் முகத்தில் உற்சாகம் பிரகாசம் காட்டியது.

"மருமகன் கல்ஃப் போறாரில்லே, அதுக்கு டிக்கெட் செலவுக்கு பதினஞ் சாயிரம் ரூபா ஆகும். அதை நான்தான் புரட்டிக் கொடுக்க வேண்டியதாயிடுச்சு."

"அவர் சமாளிச்சுக்குவார்தானே!"

"அவங்க அண்ணன் தம்பிகிட்டே கடன் வாங்க முடியும்தான். இருந்தாலும் அந்தப் பணத்தை நாம கொடுத்தாத்தான் கௌரவமாயிருக்கும்னு என் மக சொல்லிடுச்சு. அது சொல்றதும் நியாயம் தானே. அதான் ஒரு நண்பர்கிட்டே வாங்கிக் கொடுத்துட்டேன்."

"அதுவும் சரிதான். உங்க மகளுக்கும் புகுந்த வீட்டுல நல்ல மதிப்பும் மரியா தையும் கிடைக்கும். ஆமா எப்பக் கிளம்பு றாரு?"

"வர்ற வியாழக்கிழமை காலை ஃப்ளைட்ல."

"ம்..."

"திருவனந்தபுரத்திலேருந்து துபாய்க்கு ஆறு அல்லது ஏழு மணி நேரமாகும். இங்கிருந்து காலையிலே ஆறு மணிக்குக் கிளம்பினா மதியம் லஞ்ச் டயத்துல வந்து சேர்ந்துட்டேன்னு போன் பண்ணிடுவார்னா பார்த்துக்குங்க."

தன் ஊரிலிருந்து திருவனந்தபுரம் வர ஆகும் நேரம் அது. மாதத்துக்கு ஒரு தடவை ஊருக்குப் போய் மனைவி, மக்களைப் பார்த்துவிட்டு வருவதற்காகும் நேரம்.

வீட்டோடு இருக்கும் சுகத்துக்கு ஈடு இணையில்லையென்றே தோன்றி விடுகிறது. யூசுப்புக்கு எப்படியிருக்கும்?

மகளின் சுகதுக்கங்களை எண்ணிப் பார்க்காமல் மருமகன் வெளிநாடு போவதைப் பற்றி எத்தனை உற்சாகமாகப் பேசுகிறார் காதர் பாய். அப்படித்தானிருப்பானோ யூசுப்பும். மகளுக்கு எல்.கே.ஜிக்குப் போகும் பையன் இருக்கிறான் என்று பாய் சொல்லியிருக்கிறார். யூசுப்பின் வயதை அவனால் ஊகிக்க முடிந்தது.

அன்று மாலை பணி முடிந்து பள்ளி வாசல் அருகிலிருந்த நாயர் கடைக்குப் போய் ஒரு சாயாவுக்கு ஆர்டர் செய்துவிட்டுக் காத்திருக்கும்போதுதான், காதர் பாய் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டு ஸ்கூட்டர்காரனுடன் பேசிக் கொண்டிருந்தார். அவன் அருகில் சென்றான்.

"என்ன பாய்... பஸ் இன்னும் வரலியா... வாங்க டீ சாப்பிடலாம்."

"அடடா வாங்க. இவர்தான் என் மருமகன்..." ஸ்கூட்டர்காரனை அறிமுகப்படுத்தினார். தான் கற்பனை செய்ததைவிட இளமையாக இருப்பதாகத் தோன்றியது அவனுக்கு.

"உங்கள் வெளிநாட்டுப் பயணம் சிறக்க என் வாழ்த்துக்கள்" என்றான் அவன் கைபற்றி. இவனுடைய தமிழ் புரியாவிட்டாலும் 'தேங்க்யூ' என்றான் பொதுப்படையாக. காதர் பாய் தான் மலையாளத்தில் புரியும்படியாக அவனையும் அவன் சொன்னதையும் மொழி பெயர்த்தார்.

"நீங்க இங்க வெயிட் பண்ணுங்க. நான் போய் சொல்லிட்டு வந்துடறேன்" என்று யூசுப் ஸ்கூட்டரைக் கிளப்பிக் கொண்டு போனான்.

யூசுப்பின் உற்சாகமும் முகத்தில் தோன்றிய பிரகாசமும் அவனுக்குள் மகிழ்ச்சியையும் குழப்பத்தையும் ஏற்படுத்துவதாக இருந்தன. பிரிவுத் துயரின் சுவடேயில்லாமல் எப்படியிருக்க முடிகிறது இவர்களால்?

"வாங்க டீ சாப்பிடலாம்."

இருவரும் நாயர் கடைக்கு வந்தார்கள்.

நாளைக்குக் காலையில் புறப்படுகிறார். ஃப்ளைட் டயத்துக்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னமே ஏர்போர்ட் வந்துடணும்.

"நானும் முடிஞ்சா ஏர்போர்ட் வர்றேன் பாய். ஏர்போர்ட்டுக்குள்ள இன்னும் பார்க்கலே."

"ஓ... வாங்களேன்..."

சங்குமுகத்தில் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். அதிகாலையில் வீசிய குளிர்ந்த கடற்காற்று மனதுக்கும் உடம்புக்கும் இதமாக இருந்தது. சில நாட்களுக்கு முன் கரையின் பல மீட்டர் தூரத்தை ஆக்கிரமித்து முன்னேறி வந்திருந்த கடல், இப்போது கொஞ்சம் பின்வாங்கியிருந்தாலும் அலைகளின் இரைச்சல் இங்குவரை கேட்ட வண்ணமிருந்தது.

அவர்கள் இவனுக்குச் சமீபமாய் வந்து டாக்ஸியை நிறுத்தினார்கள்.

"என்ன அண்ணாச்சி, வந்து ரொம்ப நேரமாச்சா? சும்மாதான் சொன்னீங்

"என் மனைவி பார்க்கறதுக்குத்தான் சாது மாதிரி இருப்பா... ஆனா கோபம் வந்து திட்ட ஆரம்பிச்சிட்டான்னா, காது கொடுத்து கேக்க முடியாது..."

"அப்போ 'சாது மிரண்டா 'காது' கொள்ளாது'ன்னு சொல்லு..."

- கே. ஆனந்தன்

கன்னு நினைச்சேன். நிஜமாவே வந்துட்டீங்க."

"ஆமா... வேற வேலையென்னயிருக்கு?"

அவனை ஏற்றிக்கொண்டு டாக்சி ஏர்போர்ட்டுக்கு விரைந்தது.

கோட், சூட் அணிந்து புது மாப்பிள்ளைபோல உற்சாகமாக ஃப்ளைட் பயணத்துக்குத் தயாராக இருந்தான் யூசுப். காதர்பாய், யூசுப் இவர்களுடன் யூசுப்பின் மனைவியும், மூன்று வயது மகனும், காதர்பாயின் மனைவி, இன்னும் நெருங்கிய உறவினர் போல மூன்று ஆண்களும் இருந்தார்கள்.

எல்லோரும் கலகலப்பாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். யூசுப்பின் மகன் அப்பாவின் மடியில் அமர்ந்து கொண்டு கண்ணாடிக்கு வெளியே தெரியும் காட்சிகளை ரசித்துக் கொண்டு கை நீட்டிக் காட்டிக் கொண்டே வந்தான்.

அவன் தன்னைப் பற்றி நினைத்துக் கொண்டான். ஊரிலிருந்து திருவனந்தபுரம் புறப்படும் ஒவ்வொரு தடவையும் மனதைப் பிசையும் ஒரு வித துக்கமும் அது வெளிப்படுத்தும் ஒரு அசாதாரண அமைதியும் அவனால் மறக்க முடியாது. அதிலிருந்து மீளவும் முடியாது அவனால். இங்கு வந்து இரண்டு நாட்களுக்காவது அந்த வெறுமையும் எதிலும் முழுமனதாய் ஈடுபட முடியாத மனநிலையும் அவனை அலைக்கழிக்கும்.

ஆனால் அதில் சிறிதளவுகூட யூசுப்பிடமோ, அவன் மனைவியிடமோ காணப்படாதது அவனுக்குப் புதுமையாக இருந்தது.

ஏர்போர்ட் சுத்தமாகவும் விசாலமாகவும் இருந்தது. கடற்காற்றின் குளுமை வேறு. தன்னுடைய மாடியறையிலிருந்து பார்ப்பதற்கும் இந்த லவுஞ்சில் நின்று பார்ப்பதற்கும் நிறைய வித்தியாசமிருப்பதாகத் தோன்றியது அவனுக்கு.

யூசுப் தன் லக்கேஜ்களை எடுத்துக் கொண்டு புறப்படத் தயாரானான்.

"உள்ளே பயணிகளைத் தவிர யாரையும் அனுமதிக்க மாட்டாங்க. கஸ்டம்ஸ் செக்கிங் அது இதுன்னு எல்லாம் முடிய ஒரு மணி நேரமாவது ஆகும்." காதர் பாய் பேசிக் கொண்டிருந்தார்.

யூசுப்பின் மனைவி கணவனிடம் இன்னும் ஏதோ கிசுகிசுத்துக் கொண்டிருந்தாள். சதா அவனோடு ஒட்டிக் கொண்டிருந்தாலும் அந்தப் பிரிவை அவளும் சந்தோஷமாய் எதிர்கொள்ளத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டதைப் போல இயல்பாய் இருந்தாள்.

யூசுப் தன்னிடமிருந்த மகனை மனைவியிடம் கொடுத்தான். அவனை விட்டுப் பிரிய மறுத்தான் சிறுவன்.

"நானும் உன்கூட வருவேன்."

"நான் போய்ட்டு நாளைக்கு வந்துடுவேன். உனக்குப் பொம்மையெல்லாம் வாங்கிட்டு வருவேன்."

"எனக்குப் பொம்மை வேண்டாம்.



நானும் வருவேன்."

"அழாதே கண்ணா. அப்பா வேலைக்குப் போகணுமில்லே. வா, நம்ம வீட்டுக்குப் போகலாம்."

"இவன் இப்படித்தான். நீங்க கிளம்புங்க" என்றாள் அவள்.

சிறுவன் கையைக் காலை உதறிக் கொண்டு பெருங்குரலில் அழ ஆரம்பித்தான்.

யூசுப் சிறிது தூரம் போய் திரும்பிப் பார்த்தான். எல்லோரும் அவனுக்குக் கையசைத்து டாட்டா சொல்லிக் கொண்டிருந்தார்கள். முகமூடிகள் தேவைப்படாத அந்தத் தனிமையான தருணத்தில் தன்னைக் கட்டுப்படுத்தவியலாமல் கண்கள் கலங்கியிருப்பது இவனுக்கு மட்டும் புரியும்படியாக இருந்தது. ●

வளம் தரும் வாஸ்து-7

பின்வாசல் வழியே

நம் வீட்டுக்குப் படிகள் அமைக்கும் விஷயத்தில் பலருக்குப் பல சந்தேகங்கள் இருக்கின்றன. வாசல்படிகளுக்கு என்றே பிரத்யேகமாக வாஸ்து சாஸ்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் வாசல்படிகள் வீட்டின் லாப நஷ்டங்களை நிர்ணயிக்கக் கூடியவை. அந்தப் படிகள் வாஸ்து பிரகாரம் அமையவில்லை என்றால் சிக்கல்கள் வருவதைத் தடுக்க முடியாது.

அந்த வாசல்படிகள் எப்படி அமைய வேண்டும் தெரியுமா? வீட்டுக்குள் செல்வதற்கு முன்சுவரின் நடுப்பகுதியில் நமக்குத் தேவையான அளவு கதவு அமைத்து நேராக உள்ளே செல்வது மிகவும் நல்லது. ஆனால் ஒரே பக்கத்தில் இரண்டு வாசல்கள் இருப்பது வாஸ்துபடி தவறு. முக்கியமாக வீட்டுக்கு உள்ளே செல்லும்போது படியில்லாமல் உள்ளே செல்வது பல விதத்தில் குறைபாடுகளை ஏற்படுத்தும்.

அடுத்த முக்கியமான விஷயம் படிகளின் எண்ணிக்கை. பொதுவாக வாசல்படிகள் 1,3,5,7,9 என ஒற்றைப் படை எண்ணிக்கையில் இருப்பது மிகவும் நல்லது. படிகளைப் பொறுத்த மட்டில் ஒற்றைப்படை படியை லாபப்படி என்றும், இரட்டைப்படை படியை நஷ்டப்படி என்றும் கணக்கிடுவது வழக்கம். சிலர் இரண்டே படிகள் வைத்து, லாபம் - நஷ்டம் என்றும், தரையை லாபம் என்றும் கணக்கிடுவார்கள். இது தவறு. படிக்கான வாஸ்து இதுவல்ல. மூன்று படிகள் அமைத்து, லாபம் - நஷ்டம்- லாபம் என்றுதான் வீட்டுக்குள் செல்ல வேண்டும். அதுதான் லாபத்தைத் தரும். லாபம் என்பது மகிழ்ச்சி, நிம்மதியைக் குறிக்கும்.

சில வீடுகளில் முன்புறம் வழி அமைப்பதுபோல பக்கவாட்டிலும் வழி அமைப்பார்கள். இதில் தவறு இல்லை.

ஆனால் அந்த வழியாக வீட்டுக்குள் நுழையும்போதும் கண்டிப்பாகப் படி அமைந்திருக்க வேண்டும். வடக்கு/கிழக்கு பார்த்த வீடுகளின் உள்ளே தேவைப்படுமானால் அதிக படிகள் வைத்துக்கொள்ளலாம். ஆனால் மேற்கு/தெற்கு பார்த்த வீடுகளில் குறைந்த அளவிலான படிகள் அமைத்துக் கொள்வது நல்லது. அனைத்துப் படிகளும் ஒரே அளவில், ஒரே அமைப்பில் இருக்க வேண்டும். படிகளின் அகலம் தாராளமாக, பாதம் முழுக்கப் பதியும்படி இருக்க வேண்டும். நுனிப்பாதத்தை வைத்துச் செல்வது மாதிரி அகலம் குறைவாக இருக்கக்கூடாது. மாடிப்படிகள் என்பது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கியும், வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும் செல்வதுபோல இருக்க வேண்டும். இந்த வாஸ்து விதிமுறை வீட்டுக்கு மட்டுமல்ல. கோயில், மருத்துவமனை, வர்த்தக ஸ்தலம் என்று எல்லாவற்றுக்கும் பொருந்தும்.

சில வீடுகளில் முன்பக்கத்தில் வாசல் வைப்பது போல, பக்கச் சுவரிலும் வழி அமைத்துக் கொள்வார்கள். இதில் சில வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். கிழக்கு/வடக்கு பகுதியில் தேவைப்பட்டால் மட்டுமே வழி அமைத்துக்கொள்ளலாம். அதுவே மேற்கு/தெற்கு பகுதியில், தெரு இருந்தால் மட்டுமே வழி அமைத்துக்கொள்ள வேண்டும். அதேபோல பின்புற மதில்சுவரில் வழி வைத்தால் அதற்கு நேராக, கண்டிப்பாக நிலைக்கதவு வைக்க வேண்டும். சிலருக்கு பின்பக்க வாசல்தான் பேருந்து நிலையத்துக்குச் செல்ல வசதியாக இருக்கிறது என்பது போல



காஞ்சி கிருஷ்ணா

கேளுங்கள் சொல்கிறேன்!

எனக்கு இரண்டு சந்தேகங்கள். ஒன்று, கன்னிமூலையின் தரைப்பகுதி உயர்ந்து இருக்க வேண்டுமா? அடுத்தது, வாயு மூலையில் ஜன்னல், கதவு இருக்கலாமா?

– ஆர்.எம்.சு. மலைநல்லான்பட்டி

கன்னிமூலை என்பது தென்மேற்கு பகுதியைக் குறிக்கும். அதில் தரைத்தளம் உயர்ந்து இருந்தால் மிகவும் சிறப்பைத் தரும். வாயு மூலையான வடமேற்குப் பகுதியில் ஜன்னல் மட்டும் அமைப்பது போதுமானது.

தாங்கள் வடக்குப்புறத்தில் அதிக மரங்கள் இருக்கக்கூடாது என்று எழுதியிருந்தீர்கள். எங்கள் வீட்டில் வடகிழக்கில் ஒரு பெரிய மாமரம் உள்ளது. என்ன செய்வது?

– அ. அன்பரசன், திருநெல்வேலி

காய்க்கும் நாட்கள் தவிர மற்ற சமயங்களில் தேவையில்லாத கிளைகளை வெட்டி எடுத்துவிட வேண்டும். மேலும் வடகிழக்குக்கு நேரெதிரே அசோகமரம், தேக்குமரம் போன்ற அதிக உயரம் வளரக்கூடிய மரங்களை நடுவது நல்லது.

சில காரணங்களைச் சொல்லி அதையே எதற்கெடுத்தாலும் பயன்படுத்துவார்கள். இது தவறு. எக்காரணம் கொண்டும், வீட்டுக்கு வரும்போதும், செல்லும்போதும் பின்வாசலைப் பயன்படுத்தவே கூடாது.


அடுத்தவாரம் படிகள் பற்றிய மேலும் சுவாரஸ்யமான விஷயங்களைத் தெரிந்துகொள்வோம்.


(பேசலாம்)

படம்: ஸ்ரீஹரி


வரலாமா?





"ஏண்டா... என் கல்யாணத்தில் நீ மட்டும் ஏன் தாலி கட்டும்போது கண்ணை மூடிக்கிட்டே?"
"நண்பனுக்கு ஒரு கஷ்டம்னா அதைக் காணச் சகிக்காது எனக்கு..."
- எம். அசோக்ராஜா


"மன்னா! வாயில் காவலனோட சம்பள பாக்கியைக் கொடுத்துத் தொலைங்க!"
"ஏன் அமைச்சரே?"
"நீங்க அரசவைக்கு வரும்போது, 'அராஜக ராஜ, ராஜ அக்கிரம... ராஜதண்ட'ன்னு கட்டியம் சொல்றான்!"
- ஞா. ஞானமுத்து

'ஜீன்ஸ் எங்கே வாங்கின?'


"என் பையன் எங்கே போனாலும் 'வம்பை விலை கொடுத்து' வாங்கிட்டு வந்து நிக்கறான் சார்!"
"ஊதாரித்தனமா இருக்கானே... இலவசமா கிடைச்சா மட்டும் வாங்கச் சொல்லுங்க!"
- கிரிஜா மணாளன்


"ஜீன்ஸ் புதுசா இருக்கே, எங்கே வாங்கினே?"
"எங்கேயும் வாங்கலேடா... எங்க வீட்டிலிருந்த பழைய ஜமுக்காளத்தில் தைச்சது!"
- ஞா.ஞானமுத்து

ரோஷிணி

விரிந்தோடுகிற வழியெங்கிலும்
விரவிக் கிடக்கின்றன
விக்ரமாதித்த சிம்மாசனங்கள்

வார்த்தைக்கும் வாழ்க்கைக்குமான
முரண்களாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன
மனித உறவுகள்

கொன்று தின்னும்
வார்த்தைகளால்தான்
தினமும் வெம்பி வேகிறது
நம் வாழ்க்கை

ஊமைக் காயங்களாய்
உள்ளிருந்து இம்சிப்பவை உன்
நாவின் அலட்சியப் பிரயோகங்களன்றி வேறென்ன?

எப்போதாவது வாய்த்திடும்
மௌனத்திலும்கூட
உறங்குவதில்லை மனக்குரங்கு
மீண்டும் மீண்டும்
சிலம்பம்
சொற்களோடும் உன்னோடும்

விரிந்தோடுகிற வழியெங்கும்
விரவிக் கிடக்கின்றன
விக்ரமாதித்த சிம்மாசனங்கள்

அவற்றில் கால் பதித்து மிச்சப்பொழுதில்
மௌனம் ஸ்பரிசிக்க
ஏக்கப்படாமல் கவனமாய்

சந்தச் சந்தடிகளாலான
புறவழிச் சமவெளிகளில்
தினமும் வார்த்தைகளால்
துக்கப்பட்டபடியே நாம்



மீண்டும் மீண்டும்...

நடக்குமென்பார்; நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்

28.5.2006 முதல் 3.6.2006 வரை



படம் : ஸ்ரீஹரி

மேஷம் : வெளியூர்ப் பிரயாணங்கள் செல்ல நேரிடும். திருமணக் காரியம் நடக்கும். தனம், வாக்கு, கல்வி மேலோங்கும். தேர்வில் அதிக மதிப்பெண்கள் வாங்குவீர்கள். பணக் கஷ்டம் இராது. குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் இடமாற்றம் ரெடி. குழந்தைகளால் சந்தோஷமான காரியங்கள் கைகூடும். சத்ரு தொல்லை விலகும். வீடு / மனை வாங்க நல்ல தருணம். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. நண்பர் / உறவினரால் அனுகூலம் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி காண்பிக்கும். ஆஞ்சநேயர் வழிபாடு செய்து வரவும்.

ரிஷபம் : வெற்றிவாகை சூடும் வாரம். உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். நெருங்கியவர்களைப் பிரிய நேரிடும். தன்னம்பிக்கை கைகூடும். குழந்தைகள் பற்றின மனக்கவலை தீரும். தொழில் துறையில் இருக்கும் பிரச்னை முடிவுக்கு வரும். வியாபாரத்தில் முற்போக்கான சூழ்நிலை தெரியும். சிலருக்கு வீடு மாற்றம் / வேலை மாற்றம் உண்டாகலாம். குடும்ப வாழ்வில் விட்டுக் கொடுத்துப் போவது நற்பலனை அளிக்கும். பூர்வீகச் சொத்து பாகப் பிரிவினை ஏற்படும். தேர்வில் அதிக மதிப்பெண்கள் கிடைக்கும். குரு / ராகு / கேது / வழிபாடு நற்பலனைத் தரும்.

மிதுனம் : மனதில் இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். நல்லவர் உதவி கிடைக்கும். வீடு / மனை வாங்க நல்ல காலம். உத்யோகஸ்தர்களுக்கு மேன்மை உண்டாகும். வாக்கு, நாணயம் காப்பாற்றப்படும். தாயாரின் உடல்நிலையில் கவனம் தேவை. தொழில் துறையில் நல்ல லாபம் காணும். உத்தியோகத்தில் பதவி உயர்வு, பண உயர்வு, இடமாற்றம், நீண்ட தூரப் பிரயாணம் செல்லுதல் போன்றவை ஏற்படும். திருமணக் காரியம் கைகூடும். உடல்நிலை பாதிக்காது. புதிய முயற்சி கைகூடும். கணவன் - மனைவி உறவு நற்பலனை அளிக்கும். குழந்தைப் பேறு கிட்டும். ராகு / கேது வழிபாடு நற்பலனை அளிக்கும்.

கடகம் : தெய்வ கடாட்சம் நிறைந்த வாரம். புண்ணிய ஸ்தலம் செல்லுவீர்கள். வீடு / வாசல் மாற்றம் உண்டாகும். தனம், கல்வி மேலோங்கும். தேர்வில் நல்ல மதிப்பெண்கள் கிட்டும். நண்பர் / உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்

கும். கணவன் - மனைவி உறவு நற்பலனைத் தரும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் நல்ல மாறுதல் ஏற்படும். திருமணக் காரியம் கைகூடும். குரு / சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

சிம்மம் : மிகவும் நிதானத்துடன் செயல்பட வேண்டும். குடும்ப வாழ்வில் விட்டுக் கொடுத்து அனுசரனையாக நடந்து கொள்ளவும். வண்டி வாகனங்களில் போகும்போது கவனம் தேவை. கைப்பொருள் மீது கவனம் செலுத்தவும். யாரிடமும் வாக்குவாதம் வேண்டாம். உணவுக் கட்டுப்பாடு அவசியம். குழந்தைகள் இடம் மாறிப் போவார்கள். வீடு மாற்றம் / தொழில் மாற்றம் ஏற்படும். சுபகாரிய முயற்சியில் தடங்கல் வந்து விலகும். மேல் அதிகாரிகளுடன் ஒத்துப் போகாது. வேலைக்குக் குந்தகம் வராமல் இருக்கும். சனி / ராகு / குரு / கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

கன்னி : சுபச் செலவு ரெடி. வீடு / மனை / வாங்க நல்ல காலம். தேர்வில் அதிக மதிப்பெண்கள் கிட்டும். தனம், வாக்கு மேலோங்கும். மனதுக்குப் பிடித்த சில விஷயங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நடக்கும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. கணவன் - மனைவி விட்டுக் கொடுத்துப் போவது நற்பலனை அளிக்கும். பணக்கஷ்டம் வராது. தொழில் துறையில் நல்ல லாபம் காணும். மாணவ / மாணவியர்க்கு பொன்னான காலம். எதிர்ப்பு, தொல்லை விலகும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். ராகு / கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

துலாம் : லட்சியங்கள் யாவும் ஈடேறும். வழக்குகள் முடிவுக்கு வரும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். புண்ணிய யாத்திரைகள் செல்ல நேரிடும். வீடு / மனை வாங்க நல்ல தருணம். சுபகாரியப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும். நண்பர் / உறவினர்கள் மூலம் ஆதாயம் உண்டு. உடல்நிலை பாதிக்காது. குழந்தைகள் வழியில் மகிழ்ச்சி ஏற்படும். மாணவ / மாணவியர் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று விரும்பிய கல்வியை அடைவார்கள். வியாபாரத்தில் சுறுசுறுப்பு ஏற்படும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். குரு / சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

விருச்சிகம் : தூரதேச அழைப்புகள் வரும். சுபகாரியம் கைகூடும். மன உளைச்சல் தீரும். நெருங்கிய நண்பர் / உறவினர் விலகிப் போவார்கள். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். புதிய தொழில்கள் கைகூடும். பணக் கஷ்டம் இருக்காது. குடும்ப வாழ்வு நற்பலனைத் தரும். பத்திரிகைகளில் பெயர் வரும். உத்தியோகத்தில் நல்ல பதவி கிட்டும். புதிய வேலைவாய்ப்பு தேடி வரும். கல்வியில் அதிக மதிப்பெண்கள் பெறுவீர்கள். குழந்தைகள் மூலம் சந்தோஷம் கிட்டும். மகான்கள் சந்திப்பு கிட்டும். ராகு / கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

தனுசு : சுபகாரிய நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நடக்கும். அயல்நாடு செல்லும் வாய்ப்பு வந்து சேரும். வாக்கு, தனம், கல்வி மேலோங்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். உத்தி

பரத்வாஜ்...

● எனது மகனுக்கு எப்போது திருமணம் நடக்கும்?

- சுகாஷ், பெங்களூர்

உங்களது பையன் இரட்டைக் குழந்தைகளில் ஒருவன் எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். இரட்டைக் குழந்தைகளுக்கு ஜாதகம் ஒன்றாக இருந்தாலும், ஒரு குழந்தைக்கு அதிக வேகமான பலனையும், மற்றொரு குழந்தைக்கு காலதாமதமான பலனையும் அளிக்கும் என்பது விதி. 2.9.2006க்குப் பிறகு திருமணம் நடக்கும். சர்ப்பதோஷம் உள்ள பெண்ணை வரனாகச் சேர்க்கவும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும்.

● எனது பெண்ணுக்கு எப்போது வேலை கிடைக்கும்?

- சுமன், பெங்களூர்

யோகத்தில் இடமாற்றம் ஏற்படும். வீடு / வாசல் வாங்க ஏற்ற காலம். கணவன் - மனைவி உறவு நற்பலனைத் தரும். குழந்தைப்பேறு ஏற்படும். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். தேர்வில் அதிக மதிப்பெண்கள் கிட்டும். புதிய தொழில் துவங்கலாம். செலவுகள் சுபமானதாக இருக்கும். தொல்லைகள் விலகும்.

தங்கள் பெண்ணுக்கு 1.8.2006க்குப் பிறகு நல்ல வேலைவாய்ப்பு கிடைக்கும். கவலைப்படத் தேவையில்லை. சுக்ரதசை குருபுத்தி நடக்கும்போது வேலை கிடைக்கும்.

● **எனது மகனுக்கு எப்போது திருமணம் நடக்கும்? பதவி உயர்வு கிடைக்குமா?**

- அரவிந்தன், காஞ்சிபுரம்

உங்கள் மகனுக்கு 34 வயதில் திருமணம் நடக்கும். சுக்ரதசை ராகுபுத்தி நடப்பதால் உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்பட்டு பதவி உயர்வு கிடைக்கும். பங்கு மார்க்கெட்டில் முதலீடு செய்யலாம்.

● **என் மகனுக்கு திருமணம் எப்போது?**

- வி.சுந்தரம், சென்னை

ஜாதகருக்கு 38 வயதில் திருமணம் நடக்கும். சர்ப்பதோஷம் உள்ள பெண்ணாகச் சேர்க்கவும்.

...பதில்கள்

வியாபாரத்தில் நற்பலனை அடையலாம். நண்பர் / உறவினர் மூலம் ஆதாயம் கிட்டும். ராகு / கேது / சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

மகரம் : எண்ணிய எண்ணங்கள் யாவும் ஈடேறும். தெய்வ பலம் நிறைந்த காலம். சுபச் செலவுகள் ஏற்படும். தனம், கல்வி, வாக்கு மேலோங்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். மகான் சந்திப்பு கிட்டும். வீடு / மனை வாங்க நல்ல தருணம். சத்ரு தொல்லை இருக்காது. ஆரோக்கியம் பாதிக்காது. புதிய தொழில் துவங்க ஏற்ற தருணம். தேர்வில் அதிக மதிப்பெண்கள் கிட்டும். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். பொருளாதாரக் கஷ்டம் இருக்காது. குரு / சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

கும்பம் : இடமாற்றம் ரெடி. சத்ரு தொல்லை விலகும். புதிய வேலை கிடைக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நற்பலனைத் தரும். வண்டி வாகனத்தில் செல்லும்போது பார்த்துப் போகவும். யாரிடமும் வாக்குவாதம் வேண்டாம். நீண்டகால எண்ணங்கள் ஈடேறும். செலவுகள் கட்டுப் பட்டு இருக்கும். புதிய ஆடம்பரப் பொருள் சேரும். வீடு / மனை வாங்க ஏற்ற காலம். தேர்வில் நல்ல மதிப்பெண்கள் கிட்டும். விரும்பிய கல்வி கற்க நேரிடும். ஜாமீன் போடக் கூடாது. எதிரிகள் சரண் அடைவார்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உணவுக் கட்டுப்பாடு அவசியம். நெருங்கிய நண்பனை விட்டு விலகிச் செல்வீர்கள். ராகு / கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

மீனம் : மனத்தில் சந்தோஷம் மிகுதியாகும். கல்வியில் அதிக மதிப்பெண்கள் பெறுவீர்கள். சுபகாரியப் பேச்சுவார்த்தை நற்பலனை அளிக்கும். டென்ஷன் விலகும். கணவன் - மனைவி உறவில் விட்டுக் கொடுத்து அனுசரித்துப் போவது நற்பலனைத் தரும். சத்ரு தொல்லை விலகும். செலவுகள் சுப மானதாக இருக்கும். வீடு / மனை வாங்க நல்ல தருணம். உத்தியோகத்தில் இருந்து வந்த பிரச்னைகள் தீரும். குழந்தைகளால் சந்தோஷம் ஏற்படும். உத்தியோகத்தில் மேன்மை ஏற்படும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வந்து அணுகும். வழக்கு வெற்றி அளிக்கும். திருமணக் காரியம் கைகூடும். குழந்தைகளால் சந்தோஷம் ஏற்படும். நண்பர் / உறவினர் மூலம் அனுகூலம் ஏற்படும். ராகு / கேது / குரு வழிபாடு உத்தமம்.

மூர்த்தியும் கீர்த்தியும்!



இன்றைய தின கம்ப்யூட்டர்களுக்கு திறமைகள் கொடுத்துக்கொண்டே போனால் இறுதியில் மனித மூளையை எட்ட முடியுமா என்ற கேள்வி பல வருடங்களாக இருந்து வருகிறது. மைக்ரோ எலக்ட்ரானிக்ஸின் நுட்பத்தையும் மூளையின் நுட்பத்தையும் ஒப்பிட முடியாது. மாலிக்யூலர் கம்ப்யூட்டர்களை மூளைக்கு ஒப்பாகச் சொல்ல முடியும். 1999-ல்தான் இந்த மாலிக்யூலர் கம்ப்யூட்டரின் சாத்தியம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு சில பரிசோதனைகளில் ஒரு மாலிக்யூல் என்னும் கூட்டணுவுக்கு கம்ப்யூட்டரின் முக்கிய செயல்களான அணைந்து ஏற்றும் ஸ்விட்ச் தன்மையும் ஒரு திசையில் மட்டும் மின்சாரத்தை அனுமதிக்கும் 'டையோடு' தன்மையும் ஒரு 'பிட்' செய்தித் துணுக்கை சேகரிக்கும் மெமோரி தன்மையும் அளிக்க முடியும் என்பதைக் கண்டு சொல்லியிருக்கிறார்கள். மாலிக்யூலர் நுட்பம் மூளையின் நுட்பத்துடன் ஒப்பிடக்கூடியது. ஆனால் மூளையையும் கம்ப்யூட்டர்களையும் வடிவமைப்பில் ஒப்பிட முடியாது. சம்பிரதாய கம்ப்யூட்டர்களின் ஃபான் நாய்மன் கட்டமைப்பின் சிபியு, மெமொரி, இன்புட், அவுட்புட் என்று எதுவும் மூளையின் அமைப்பில் இல்லை. ஆணைகளை வரிசையாக எழுதி வைத்து ஒன்றன்பின் ஒன்றாக மூளை செயல்படுத்துவதில்லை. ஓர் எண்ணம் தோன்றும்போது, இருட்டாக இருந்த ஒரு நகரத்தின் அத்தனை விளக்குகளும் சட்டென்று எரிவது போல நியூரான்கள் செயல்படுகின்றன. இந்த வடிவமைப்பை நாம் சரியாகப் புரிந்துகொள்ள முடிந்தால் மாலிக்யூலர் கம்ப்யூட்டர்களை வைத்துக்கொண்டு மூளை போல ஒன்றை வடிவமைக்கத் தடையில்லை.

அமெரிக்க கலிஃபோர்னியா யு.சி.எல்.ஏ. பல்கலைக்கழகத்தில் ரோட்டாக்ஸின் என்கிற கூட்டணுவைக் கொண்டு ஒரு ஸ்விட்சையும் கம்ப்யூட்டரின் ஆதார பாகமான அண்டு (AND) என்னும் லாஜிக் இணைப்பையும் செய்து காட்டியிருக்கிறார்கள். ரைஸ் பல்கலைக்கழகத்தில் நைட்ரோமைன் பென்ஸின் எத்தியால் என்னும் கூட்டணுவை ஒரு ஸ்விட்சாக மாற்றிக் காட்டியிருக்கிறார்கள். கம்ப்யூட்டரின் அடிக்கற்களான (ஸ்விட்ச்) மெமொரி போன்றவற்றை மாலிக்யூல் அளவில் செய்வது ஒரு சவால் எனில், அவற்றை நம் இஷ்டத்துக்கு இணைத்து ஒரு செயலாக்க சர்க்யூட்டாக மாற்றுவது அதைவிடப் பெரிய சவால். இந்த இயல் அதன் குழந்தைப் பருவத்தில்தான் இருக்கிறது. இதன் ஆதார ஆராய்ச்சிகள் எல்லாம் பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்கள், அவர்களின் மாணவர்கள் மூலம் நடைபெற்று வருகிறது. இவையெல்லாம் நடைமுறையில் சாத்தியமாகி மாலிக்யூல்களை இஷ்டப்படி கட்டமைக்கும் காலம்வரை ஒரு புரட்சிகரமான கண்டுபிடிப்போ, மாறுதலோ தேவைப்படுகிறது. புதிய நானோடெக் இயலின் மேல் அரசும் தனியார் நிறுவனங்களும் அதிக கவனம் செலுத்துவதற்கு முக்கியக் காரணம் மூரின் விதிப்படி (Moore's Law) சிலிக்கான் கம்ப்யூட்டர்கள் சிறிதாக்கத்



பதற்கு ஆகும் சாதன செலவு இரண்டாயிரம் கோடி டாலரைத் தாண்டும்போது முன்னேற்றம் ஓர் எல்லையைத் தொடும். அப்போது கட்டாயமாக அடுத்த கட்டமான மாலிக்யூலர் கம்ப்யூட்டர்கள் வயதுக்கு வந்துவிடும். இன்றைய மைக்ரோ கம்ப்யூட்டர்களிலேயே மிக அடர்த்தியானவற்றில் மற்றொரு சிக்கல் உஷ்ணம். இன்டெல் பெண்டியம் சிப்பைத் தொட்டால் 100 வாட் பல்பு போல கொதிக்கும். மாலிக்யூலர் கம்ப்யூட்டர்களில் அடர்த்தி பல்லாயிரம் மடங்கு அதிகம்; செயல்பாடும் அதிகம். அவற்றில் சூடு ஒரு பெரிய பிரச்னையாக இருக்கும். அதையும் நிவர்த்திக்க வேண்டும். க்வாண்டம் இயற்பியலின்



சுஜாதா

சாகஸம் ஆயிரம் 12

தில் ஓர் எல்லையை விரைவில் எட்டிக் கொண்டிருப்பதுதான். 'இன்றைய முன்னேற்ற வேகத்தில் இவை சுமார் 120 நானோ மீட்டர் வரை சுருங்கும்' என்கிறார்கள். இன்று சில சதுர சென்டிமீட்டரில் பத்து கோடி ட்ரான்சிஸ்டர்களை எழுத முடிகிறது.

மாலிக்யூலர் கம்ப்யூட்டர்களை சிலிக்கான் கம்ப்யூட்டர்களுடன் அளவில் ஒப்பிட்டுப் பார்க்கலாம். ஒரு சிலிக்கான் கம்ப்யூட்டர் சில்லை ஒரு புத்தக பக்க அளவுக்குப் பெரிசு பண்ணினால் மாலிக்யூலர் கம்ப்யூட்டர் ஒரு முற்றுப்புள்ளியின் அளவுக்கு வரும். 2015-ம் ஆண்டு வரை சிலிக்கான் கம்ப்யூட்டர்கள் 'மூர்த்தி சிறிதாகி கீர்த்தி பெரிதாகிக் கொண்டிருக்கும்' என்று சொல்கிறார்கள். அதன்பின் அவற்றைத் தயாரிப்

தற்செயலான விதிகளை ஒழுங்குபடுத்தி எதிர்பார்க்கக்கூடிய நடத்தையை அவற்றுக்குப் புகட்டுவதுதான் இந்த இயலின் அடிப்படை அறிவு. இன்று புதுப் புது மருந்துகள் தயாரிக்கும் ஃபார்மஸியூட்டிக்கல் ஆராய்ச்சியாளர்களிடம் இந்த ஞானம் உள்ளது. அவர்கள்தான் விதவிதமாக அணுக்கூட்டங்களை ஒட்டவைத்துப் பரிசோதித்துப் பார்க்கிறார்கள். இந்தத் திறமையின் திருத்தப்பட்ட வடிவமாக எதிர்காலத்தில் மருந்து தயாரிப்பதும் கம்ப்யூட்டர் தயாரிப்பதும் ஒரே பாதையில் செல்லக்கூடிய விந்தை நிகழலாம்.

(அடுத்த இதழில் முடியும்)

படம் : ஸ்ரீஹரி

படைப்பாளிகளே! வாசக எழுத்தாளர்களே! நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சிறுகதைப் போட்டி வந்தேவிட்டது!

முதல் பரிசு - ரூ. 10,000

இரண்டாம் பரிசு - ரூ. 7,500

மூன்றாம் பரிசு - ரூ. 5,000



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 2006

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ. **500** சன்மானம் பெறும்.

யார் வேண்டுமானாலும் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் எழுதலாம் என்றாலும் எழுதுபவர் முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராகவோ அல்லது அறிமுக எழுத்தாளராகவோ இருந்தால் சிறப்புப் பரிசு உண்டு. மற்ற நிபந்தனைகள் வழக்கமானவை.

விதிமுறைகள்:

- கல்கியில் 4 பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.
- சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்பட மாட்டா.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும், போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதிமொழி தர வேண்டும்.
- படைப்பாளி முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராக இருந்தால் அதற்கான ஏதாவதொரு அத்தாட்சி (பத்தாம் வகுப்பு டி.சி - ஜெராக்ஸ் போன்றவை) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
- முழு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
- தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- போட்டிக்கு அனுப்பும் கதையை, முடிவுகள் வெளியாகும்வரை வேறு இதழுக்கோ, இணையதளத்துக்கோ, போட்டிக்கோ அனுப்பக்கூடாது.
- பரிசுக்குரிய கதைகளை நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.
- முடிவு வெளியாகும்வரை, எவ்வித கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.
- 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 2006' என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கல்கி, கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

- கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி: **ஜூன் 15**
- போட்டி முடிவும் முதல் பரிசுக்கதையும் **ஆகஸ்ட் 6** ஆண்டு மலரில் வெளியாகும்.

படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.

- ஆசிரியர்

அருள்வாக்கு

பஞ்ச க்ருத்யம் - தமிழில் 'ஐந்தொழில்' - என்று சொல்லுவார்கள். எல்லாருக்கும் தெரிந்த ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்ற முத்தொழில்; ப்ரம்ம ஸ்வரூபத்தை மாயையால் மறைத்து இந்த முத்தொழிலுக்கும் இடம் உண்டாக்குவதான 'திரோதானம்' என்ற நாலாவது தொழில். 'திரோதானம்' என்றால் மறைப்பது. ப்ரம்ம ஸ்வரூபத்தை மறைத்து, ஜீவ-ஜகத்துக்களை உண்டாக்கி ஸ்ருஷ்டி-ஸ்திதி-லயத்துக்கு இடம் கொடுக்கிற ஜகத் வியாபாரமான மஹாகார்யத்தைச் செய்யும் மஹா மாயையே திரோதானம். ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் செய்யும் அதிகாரி தேவதைகளாக ப்ரம்ம, விஷ்ணு, ருத்ரர்கள் இருக்கிறதுபோல திரோதானத்துக்கு இருக்கும் அதிகாரிக்கே சைவ-சாக்த ஆகமங்களில் ஈச்வரன் என்று பெயர். மஹாமாயை என்றே சொல்லும்படியாக அகிலாண்டங்களையும் மாயையிலே கட்டிப் போட்டு ஆள்கிறதால் அந்த ஈச்வரனுக்கு 'மஹா' பட்டம் கொடுத்து மஹேச்வரன் என்பார்கள்.

சிவ ஸம்பந்தமில்லாத ப்ரம்ம-விஷ்ணுக்

ஐந்தொழில்!



களுக்கு ஐந்தில் இரண்டு தொழில்கள். பாக்கி மூன்றும் சிவனில் ஆவிர்பவித்த மூன்று பேர்களின் வசத்தில் இருக்கிறது. ஸம்ஹாரத் தொழில் ருத்ரன் என்ற சைவ மூர்த்தியின் வசம். திரோதானத் தொழில் ஈச்வரன் என்ற சைவ மூர்த்தி வசம்.

இன்னும் ஒன்று மிஞ்சுகிறது. ஐந்தாவதான அந்தத் தொழில்தான் உச்சமானது. அது என்ன என்றால் 'அநுக்ரஹம்' என்பது. தமிழிலே சொல்லும்போது ஆக்கல்-காத்தல்-அழித்தல்-மறைத்தல்-அருளல் என்று முடிக்கிற அருளல் தான் அநுக்ரஹம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

சாயலில் பூர்ணிமாவைப் போலவே இருக்கிறார் ஷரண்யா பாக்யராஜ். நீண்ட நாட்களுக்குப் பிறகு பாக்யராஜ் களமிறங்கும் 'பாரிஜாதம்' படத்தின் ஹீரோயின். அப்பாவின் அரசியல் பிரவேசம் உட்பட நிறைய விஷயங்கள் குறித்து நம்மிடம் மனம்திறந்து பேசினார்.

"**நா**ன் குட்டிப் பெண்ணா இருக்கும்போது அப்பாகிட்டே 'இனிமே நீங்க சிகரெட் பிடிச்சா நான் உங்க பக்கத்துலயே வரமாட்டேன். எனக்கு வீஸிங் ட்ரபுள் வருது'ன்னு சொல்லப்போய், யார் யாரோ சொல்லியும் நிறுத்தாத சிகரெட் பழக்கத்தை அடியோடு நிறுத்திட்டார்.

நான் படபடன்னு பேசிடுவேன். ஆனா அப்பா அடுத்தவங்ககிட்ட பேசவே ரொம்பக் கூச்சப்படுவாரு. எலெக்ஷன் மீட்டிங்ல வீராவேசமா பேசினாலும் பர்சனலா பேசறதுன்னா ரொம்ப யோசிப்பாரு. நான் பேசறதனால அடுத்தவங்களுக்கு ஏதாவது பாதிப்பு உண்டாகுமான்னு யோசிப்பாரு. அவரோட ஒவ்வொரு அடியும் அளந்துதான் இருக்கும். 'பாரிஜாதம்' படத்துக்காக நேரா என்னை ஹீரோயின் அரியணையில் உட்காரவிடலை. டெஸ்ட் எல்லாம் வைச்சு, கதை முழுதும் சொல்லி 'உனக்கு ஸ்க்ரிப்ட் பிடிச்சிருந்தா மட்டும் செய்'னு எனக்குச் சுதந்திரம் கொடுத்தாரு.

ஹீரோவா அன்னைக்கு அவர் பண்ணின புதுமைகளை இன்னைக்கு இருக்கிற ஹீரோக்கள் கூட செய்றது கிடையாது. தன்னையே கேலி செய்துக்கிட்டு படம் முழுக்க காமெடி பண்றதுதான் அப்பாவோட ட்ரேட்மார்க். நான் ஒரு விஸ்காம் ஸ்டூடண்டா சொல்றேன். அந்த ஏழு நாட்கள், டார்லிங் டார்லிங் டார்லிங், முந்தானை முடிச்சு போன்ற அவரோட படங்களோட திரைக்கதை யுக்தி இன்னைக்கும் ட்ரெண்ட் செட்டரா இருக்கு. ஒரு ஸீனை எப்படிச் செதுக்கலாம்னு அவரோட படங்களைப் பார்த்தே நிறைய கத்துக்கலாம். அப்பாவுக்குக் கதை எழுதுறதுல அலாதிப் ப்ரியம். வாழ்க்கையில தான் சந்திக்கிற அசாதாரண நிகழ்வுகளைச் சமயம் பாத்து கதையோடு கோத்துடுவாரு. பேச்சாலயே அடுத்தவங்களை மெஸ்மரிஸம் பண்றதுல கில்லாடி. சமீபத்துல அப்பா பிரசாரக் கூட்டங்கள்ல பேசினப்போ நான் ஆர்வம் தாங்காம அவர் செல்போனை ஆன் பண்ணி ஸ்பீக்கர் முன்னாடி வைக்கச் சொல்லி லைவ்வா அவர் பேச்சைக் கேட்டேன்" என்று ஆர்வத்தோடு பேசியவர் முக்கியமான டாபிக்குக்குள் நுழைந்தார்.

"**ச**மீபத்துல ஒரு நாள் அப்பா என்கிட்ட வந்து, 'கண்ணு, நான் அரசியல்ல நுழையலாம்னு இருக்கேன். என்ன பண்ணலாம்'னு கேட்டாரு. அவரோட இந்த அணுகுமுறை பிடிச்சிருந்தது. அவர் யோசிக்காம நிச்சயம் இந்த முடிவை எடுத்திருக்க மாட்டார்னு தெரியும். 'உங்க இஷ்டம்பா'ன்னு சொல்லிட்டேன்.



அப்பாவுக்கு தேவைய

ஆனாலும் இவ்வளவு நாள் இல்லாம, இப்போ ஏன் திடீர்னு அரசியலுக்குள்ள நுழையணும், அப்பாவுக்கு அரசியல் தேவையா? பிரசாரத்துக்காக ஊர் ஊரா அலையணுமே, உடல்நிலை பாதிப்

படையுமேன்னு வீட்ல ஆளாளுக்கு ஆதங்கப்பட்டோம். எங்களுக்குத் தெரிஞ்சவங்க கூட 'தி.மு.க. தோற்கப் போகிற கட்சியாச்சே... ஏன் அதுல சேர்றீங்க?'ன்னு கேட்டாங்க.. இதுக்கெல்லாம் அப்பா கொடுத்த விளக்கம் - 'நான் சமூகத்துக்கு ஏதாவது செய்ய நினைக்கறேன். வெறுமனே ஆட்சியாளர்கள் மேலே குற்றம் சுமத்துறதைவிட நாம களத்துல இறங்கி அழுக்குகளைக் களையணும். நான் தி.மு.க.வுல சேர்ந்தா நான் நினைக்கற தெல்லாம் நடத்திக் காட்ட முடியும்ங்கிற நம்பிக்கை இருக்கு'ன்னு தெளிவா பதில் சொன்னாரு. அப்பாவாச்சே, சும்மாவா ஒரு கட்சியில சேருவாரு. அவர் கணிப்புப் படியே இன்னைக்கு தி.மு.க. ஜெயிச்சு ஆட்சியில் உட்கார்ந்திருச்சு. என்னதான் அவர் அரசியல்ல ஆர்வமா இருந்தாலும் அவர் சினிமாவுல இன்னும் சாதிக்கணும்ங்கிறதுதான் என் ஆசை."

- சநகன்



குட்டிச்சாத்தான்



அமரர் கல்கி

ஒரு நாள் நானும் எனது நண்பர் ஸ்ரீமான் அவர்களும் ஸல்லாபம் செய்து கொண்டிருந்தோம். ரவீந்திரநாத தாகூரின் சிறுகதைகளைப் பற்றிப் பேச்சு வந்தது. பாரதியாரும் வ.வே.சு. அய்யரும் சேர்ந்து அச்சிறுகதைகளில் சிலவற்றை அற்புத மான தமிழ்நடையில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார்களல்லவா? அந்தப் புத்தகத்தில் வெளியாகியிருக்கும் கதை களைப் பற்றிப் பேசினோம். அவற்றில் ஒன்றை 'எல்லாவற்றிலும் சிறந்தது' என்று நான் குறிப்பிட்டேன். அவர் வேறொரு கதையைப் பற்றி அத்தகைய அபிப் பிரா யத்தைத் தெரிவித்தார். நாங்கள் விவாத மிட்டுக் கொண்டிருக்கையில் அந்த ஸ்ரீமா னுடைய தர்மபத்தினி அங்கு வந்தார். விவாதம் இன்னதென்று அந்த ஸ்ரீமதி அறிந்ததும் என்ன சொன்னா ரென்று நினைக்கிறீர்களா? "நீங்கள் சொல்லும் இரண்டு கதைகளும் அந்தப் புத்தகத்தில் இல்லையே!" என்றுதான்.

எனக்குச் சிரிப்பு வந்தது. ஏனெனில், முதல் நாளிரவுதான் மேற்படி புத்த கத்தை எடுத்துப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந் தேன். ஆகையால் ஸ்ரீமதி சொல்வது தவறு என்பதை நன்கு அறிவேன்.

"ரொம்ப நன்றாயிருக்கிறது! கதைகளே இல்லையா?" என்றேன்.

"வெகு அழகு! எங்களை என்ன வென்று நினைத்தாய்?" என்றார் ஸ்ரீமான்.

நாங்கள் எவ்வளவு சொல்லியும் அந்த ஸ்ரீமதி கேட்க வேண்டுமே? கிடையாது. திரும்பத் திரும்பப் பிடிவாதமாய் "அந்தப் புத்தகத்தில் இந்தக் கதைகள் இல்லை" என்றே சொல்லிக் கொண்டிருந்தார்.

கடைசியாகப் புத்தகம் வந்தது. ஏடு களைப் புரட்டினேன். ஏககாலத்தில் ஆறு கண்கள் புத்தகத்தை உற்று நோக்கின. குறிப்பிட்ட கதைகள் அதில் இல்லை!

என்னால் நம்பவே முடியவில்லை. நேற்றிரவு பார்த்த கதைகள் இன்று எப்படி இல்லாமற்போகும்? ஸ்ரீமதிக்கு ஏதேனும் குட்டிச்சாத்தான் வித்தை தெரிந்திருக் குமோ என்று எண்ணலானேன். கடைசி யாக ஆராய்ந்து பார்த்ததில் விஷயம் தெரிந்தது.

முதல் நாளிரவு நான் படித்தது அப் புத்தகத்தின் அழகிய விரிவான முன்னு ரையை. இந்த முன்னுரையில் தாகூர் கதை களின் அழகைத் தனித் தனியாக எடுத்துக் காட்டியிருந்தது. நாங்கள் குறிப்பிட்டுப் பேசிய இரண்டு கதைகளைப் பற்றியும் அதில் பிரஸ்தாபம் இருந்தது. ஆனால் எக்காரணத்தினாலோ புத்தகத்தில் அவை விடப்பட்டிருந்தன. ஒருவேளை பக்கங்கள் அதிகமாகி விட்டபடியால் இரண் டாம் பாகத்தில் சேர்க்கலாம் என்று விடப்பட்டிருக்கலாம்.

நாங்கள் முன்னுரையை மேலெழுந்த வாரியாய்ப் படித்துவிட்டு, இங்கிலீஷில் கதைகள் படித்த ஞாபகத்தை வைத்துக் கொண்டு வாதம் செய்தோம். அந்த ஸ்ரீமதியோ ஆங்கிலத்தில் தாகூர் கதைகள் படித்ததில்லையாதலால், முன்னுரையில் கண்ட கதைகள் புத்தகத்தில் விடப்பட்டிருந் தன என்பதைக் கவனித்திருந்தார்.

பெண்ணாய்ப் பிறந்தவர்களோடு விவாதம் செய்யக்கூடாதென நான் சொல் வது ஏனென்று இப்போது தெரிகிற தல்லவா?

எங்கள் அடுத்த வீட்டில் வசிக்கும் இராகவனும் மைதிலியும் வெகு அன்னி யோன்ய தம்பதிகள். ஆனால் என்ன பிரயோஜனம்? அவர்களுடைய இல் வாழ்க்கையை ஒரு நெடிய முடிவில்லாத விவாதமென்றே சொல்லலாம்.

அற்ப விஷயம் : சலவைக்குப் போட்ட துணிகள் வருகின்றன. இராகவன் கணக் கெண்ணிவிட்டு "பதினெட்டுத் துணி போட்டோம்; பதினெட்டும் வந்து விட்



வித்தை!

டன" என்கிறான். மைதிலி "பத்தொன்பதல்லவா போட்டோம்; ஒன்று குறைகிறதே?" என்கிறாள். "மகா - ராஜ-ராஜ-ஸ்ரீ வண்ணாரச் சின்னான் அவர்கள் கணக்கில் தப்புவாரா?" என்று இராகவன் கேட்கிறான். "நீங்களே தப்பும்போது அவர் தப்ப மாட்டாரா?" என்கிறாள் மைதிலி. இவ்வாறு முக்கால் மணி நேரம் விவாதம் நடக்கிறது.

இத்துடன் போயிற்று என்கிறீர்களா? மறுநாள் இராகவன் "என்னுடைய நீலக் கரை வேஷ்டியைக் காணோமே?" என்று கேட்கும்போது, "நேற்றைக்கே சலவைத் துணி ஒன்று குறைவு என்றேனே, கேட்டீர்களா?" என்று மறுபடியும் விவாதம் தொடங்குகிறாள்.

விவாதம் செய்யும் விஷயத்தில் ஆண்மக்களுக்குக் கிட்டக்கூடாததான ஒரு சாதனம் பெண்மணிகளுக்கு உண்டென்பதையும் மறந்துவிடக் கூடாது. மேற்சொன்ன தாகூர் கதை விவாதத்தையே கவனிக்கலாம். அந்த ஸ்ரீமதிக்குத் தாம் சொன்னதில் அவ்வளவு நிச்சயமின்றிக் கொஞ்சம் சந்தேகமாயிருந்தது என்று வைத்துக் கொள்வோம். நாங்கள் புத்தகத்தை எடுத்து வர ஆள்விட எத்தனிக்கையில், அவர் "நான் சொல்கிறேன்; நீங்கள் ஒப்புக்கொள்ள மாட்டோமென்கிறீர்களே" என்பதாகச் சொல்லிக் கண்ணைக் கசக்க ஆரம்பித்திருந்தால், அதற்குப் பதிலாக நாங்கள் என்ன செய்ய முடியும்? பேசாமல் "அம்மணி! அந்தக் கதைகள் இந்தப் புத்தகத்தில் இல்லையென்று ஒப்புக்கொண்டு விடுகிறோம். அது மட்டுமா? அந்தப் புத்தகமே கிடையாது. ரவீந்திரநாத தாகூர் என்பவரே இல்லை என்று தாங்கள் சொன்னாலும் ஒப்புக்கொள்ளத் தயாராயிருக்கிறோம்!" என்றுதானே சொல்ல வேண்டும்.

- வானதி பதிப்பகத்தின் 'பெண் தெய்வங்கள்' நூலிலிருந்து...



ஜே.ஜே ஆஸ்பத்திரியின் ஐ.சி.யூ வார்டுக்கு வெளியே இருந்தார்கள். உள்ளே பார்ப்பதற்கெனப் பொருத்தியிருந்த கண்ணாடி வழியே சில நிமிடங்களுக்கொருமுறை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான் சத்யா. நளினி ஒரு நாற்காலியில் துவண்டிருந்தாள். எதையும் சிந்திக்க அறிவு மறுத்தது; எதையும் நம்பவோ கற்பனை செய்யவோ மனம் அறவே மறுத்தது. காத்திருப்பு மட்டுமே விதிக்கப்பட்ட ஒரு மிக நீண்ட கணமாக வாழ்க்கை மாறிவிட்டிருந்தது. எந்த நெம்புகோலாலும் பிடித்துத் தள்ள முடியாத வகையில் காலம் உறைந்து விட்டதாகத் தோன்றியது அவளுக்கு.

சத்யா அவ்வப்போது கண்ணாடி ஜன்னலருகிலிருந்து அகன்று வந்து அவள் தோளை அழுத்துவதும் கையைப் பற்றுவதுமாக இருந்தான். மொபைல் போனின் எழுத்துக்களை அடிக்கடி அழுத்திக் கொண்டிருந்தான்.

மூர்த்தியின் அலுவலக சகாக்கள் நான்கு பேர் ராணுவப் படையினர் போல் காத்து நின்றார்கள்.

நளினி நீண்டதொரு பெருமூச்செறிந்தாள். மீண்டும் மூச்சை உள்ளே இழுத்த போது... 'இதென்ன செண்பகப் பூ வாசம்...?'

மெல்ல தலையை நிமித்திப் பார்வையைச் சுழல விட்டாள். 'பிரமையோ....?'

இல்லை! அதோ சத்யாவுக்கு மிக அருகே ஒரு பெண். நுனிக்காலில் எம்பி நின்று அவன் தோளுக்கு மேலாக ஐ.சி.யு. அறையின் கண்ணாடி ஜன்னலுக்குள் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். சுட்டு விரல் நீட்டி சத்யா அவளுக்கு ஏதோ விளக்கிக் கொண்டிருந்தான். இழுத்துக் கட்டிய அவள் குட்டை முடியின் உச்சியில் செம்மஞ்சள் செண்பகச் சென்டொன்று சிரித்தது.

மரத்துக் கிடந்த நளினியின் உணர்வுகளுக்கு மீண்டும் ரத்தம் பாய ஆரம்பித்தது. சத்யாவின் பேரில் கொண்ட சந்தேகம் ஊர்ஜிதமானதைக் காட்டிலும் இனி அந்தச் சந்தேகத்துக்கு அவசியமில்லை என்கிற மிகப்பெரிய ஆறுதல் அந்த இக்கட்டிலும் அவளுக்கு அலாதியான நிம்மதியைத் தந்தது.

சத்யாவும் அந்தப் பெண்ணும் அவளை நோக்கி வந்தார்கள். மிக அழகாய் இருந்தாள். நேர்த்தியாகவும் எளிமையாகவும் உடுத்தியிருந்தாள். முகத்தில் அறிவுக் களை ததும்பியது. தெளிந்த விழிகளில் ஆழ்ந்த கவலை தெரிந்தது.

"அம்மா, இது கிதா - என் கூட வேலை பார்க்கறான்னு சொல்லியிருக்கேனே..."



செண்பகம்

நான்கு வாரத் தொடர்

அருகிலிருந்த காலி நாற்காலியில் அமர்ந்த கீதா அவள் கையைப் பற்றிக் கொண்டாள்.

"அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக்னு சத்யா போன் பண்ணினப்புறம் என்னால இங்க வராம இருக்க முடியலை... நான் இருக்கேன். எதெதுக்கு வேணுமோ எப்பப்போ வேணுமோ கூப்பிடலாம். யோசிக்க வேண்டாம்..." என்றாள் கையை விடாமல். அவள் நளினமான கரங்களிலிருந்து ஒரு புது பலம் பாய்வதாகத் தோன்றியது நளினிக்கு.

"சத்யா, இங்க வா... இப்படி அம்மா பக்கத்துல உட்காரு..." என்று உரிமையுடன் அதட்டினாள் அவள். "நித்யா எங்கே...?"

"போன் வரும்போது அவ தன் ஃப்ரெண்ட் வீட்டுக்குப் போயிருந்தா... ரமேஷ் மாமா போயிருக்கார் அழைச்சுட்டு வர..." என்றாள் தன் அம்மாவின் அருகில் அமர்ந்தபடி.

வீட்டுக்குள் நுழையாமலே அதன் இண்டு இடுக்குகளை கீதா பரிச்சயப்படுத்திக் கொண்டிருப்பது புரிந்தது நளினிக்கு.

"என்னதான் சொல்றாங்க டாக்டர்கள்?" சத்யாவிடம் மீண்டும் கேட்டாள் கீதா.

"இருபத்து நாலு மணி நேரம் ஆகணும்ன்றாங்க. ஹார்ட் அட்டாக் இல்லியா...?"

"ம்... அவருக்கு எதுவும் ஹிஸ்டரி இருந்ததாக நீ சொன்னதில்லையே சத்யா..."

"எதுவுமே இல்லே... திடீர்னு இப்படி..."

மூன்றாவது

மாடியிலிருந்தது ஐ.சி.யூ. தடதடவென்று படிக்கட்டில் ஓடி வரும் சப்தம் கேட்டது. நித்யா! அவள் பின்னால் அதே வேகத்தில் ரமேஷ். முகத்தில் கவலை அப்பிக்கிடந்தது.

"அம்மா!" என்று அலறிக் கொண்டு வந்து அவள் காலடியில் உட்கார்ந்தாள் நித்யா. நளினியின் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டு தேம்பினாள்.

"ஷ்...! ஒண்ணுமில்லே... அழாதே..." அவளைச் சமாதானம் செய்யவேண்டியிருந்தது. "அப்பா செத்துப் போய்டு



நான்கு

சீதா ரவி



''அவர் தன் மனைவி பத்மா மேலே கொள்ளைப் பிரியம் வைத்திருக்கிறார் என்று எப்படிச் சொல்கிறீர்கள்?''

''ஆசனம் செய்தால் கூட 'பத்மா'சனம் மட்டும்தான் செய்வார் என்றால் பாருங்களேன்!''

- முகவை முத்துசாமி

வாராம்மா... எனக்குப் பயமா இருக்கு...'' நளினிக்கு மலைப்பாக இருந்தது. உணர்ச்சிக் குவியலாக மடியில் கிடந்த மகளின் தலையைக் கோதிவிட்டபடி மௌனமாக இருந்தாள்.

"நித்யா!" அவளை மெதுவாக அகற்ற முயன்று கொண்டிருந்தாள் கீதா. "இதோ பாரு..."

'யார் நீ?' என்பதாக அவளை நித்யா ஒரு பார்வை பார்க்க, சத்யா சங்கடத்துடன் நின்று கொண்டிருந்தான்.

நளினி குறுக்கிட்டு மகளை மடியிலிருந்து எழுப்பிச் சொன்னாள் "அண்ணாவோட ஃப்ரெண்டும்மா. பேரு கீதா, எழுந்திரு... அவங்க இரண்டு பேர் கூட போய் ஏதாவது சாப்பிட்டுட்டு வா."

"நான் உன்னை விட்டுட்டுப்போக மாட்டேன்..." தேம்பினாள் நித்யா.

"போய்ட்டு வா கண்ணு... ரமேஷ் மாமா இங்க இருப்பார். உஷா ஆன்டிக்கும் போன் பண்ணிச் சொல்லியிருக்கேன். இப்போ வந்துடுவாங்க..."

"நீயும் சாப்பிடணுமே..."

"நீங்க போய்ட்டுத் திரும்பி வாங்க. அப்புறம் நாங்க போறோம்..."

கீதாவைச் சற்றே சந்தேகத்துடன் நோக்கியபடி அவர்களுடன் போனாள் நித்யா.

"என்ன இப்படி...?" ரமேஷ் ஆழ்ந்த கவலையுடன் கேட்டான்.

"ப்ச்... எதுக்காவது காரண காரியம் கண்டுபிடிச்சு சொல்ல முடியுதா வாழ்க்கைல..."

''மூர்த்தி எதையாவது மனசுல போட்டு உழப்பிக்கிட்டிருந்தானா...?''

உதட்டைப் பிதுக்கித் தலையை அசைத்து மௌனமாய் இருந்தாள்.

''பிரார்த்தனை பண்ணிக்கோங்க ரமேஷ்...''

"நிச்சயமா! கோயிலுக்குப் போய் பிரசாதம் கொண்டு வரட்டுமா...?"

"இப்போ போகாதீங்க. டாக்டர்ஸ் வந்து என்ன சொல்றாங்கன்னு சரியா தெரிஞ்சுக்கிட்டுப் போகலாம்... இந்தப் பொண்ணு வேற இன்னிக்குப் புதுசா வந்திருக்கு..."

"ஆமாம்... யாரது? சத்யாகூட வேலை பார்க்கற பொண்ணா...?"

"இங்க வர்றதுக்கு முன்னாடிதானே சொன்னேன்... சத்யா ஒண்ணும் குழந்தை இல்லேன்னு..."

"ஓ!"

''கொஞ்சம் நாளாவே இதப்பத்தி எனக்குச் சந்தேகம்... அவளுக்கு நம்ம குடும்பத்தைப் பத்தி எல்லாமே தெரிஞ்சிருக்கு...''

''ஆனா இதுவரைக்கும் வீட்டுக்கு வந்ததில்லே... இல்லையா?''

''ஊஹூம் வந்ததில்லே. இந்த நிலைமைல மூர்த்திகிட்டே இதைப் பத்தி எப்படிப் பேசறது...?''

"இப்போ பேச வேண்டாம்... அவன் நல்லபடியா வீட்டுக்கு வரட்டும் பேசிக்கலாம்."

"அந்தப் பொண்ணை ஆஸ்பத்திரிக்கு வராதேன்னு சொல்றதா...?"

"மெதுவா, புண்படாத வகையில நான் சொல்றேன் சத்யாகிட்டே..."

"தேங்க்ஸ் ரமேஷ்... இவ்வளவு டென்ஷன்லயும் எனக்கொரு ஆறுதல் என்ன தெரியுமா...?"

"என்ன...?"

"இனிமே நான் சத்யா போல சந்தேகப்பட வேண்டாம்... நேசிக்கறவங்களையும் ஆராதிக்கறவங்களையும் சந்தேகத்துக்குட்படுத்தறதப்போல ஒரு சோகம் வேறெதுவும் கிடையாது ரமேஷ்."

"வேண்டாமே! இப்போ ஏன் மனசை மேலும் பளுவாக்கிக்கறீங்க... அமைதியா இருங்க..."

அப்போதுதான் நளினி அழ ஆரம்பித்தாள்.

லிஃப்டை விட்டு இறங்கிய உஷா, நளினி அழுவதையும் ரமேஷ் அவளைச் சமாதானம் செய்யும் வகையறியாது தவித்து நிற்பதையும் கண்டாள். விரைந்து நளினியருகே வந்து அமர்ந்து, "எங்க, குழந்தைங்க இல்லையா...?" என்றாள் ரமேஷைப் பார்த்து.

"சாப்பிடப் போயிருக்காங்க... அவங்க போகிற வரைக்கும் காத்திருந்த மாதிரி இப்போ அழறாங்க இவங்க... கொஞ்சம் ஆறுதல் சொல்லுங்க... ப்ளீஸ்..."

"நளினி... இங்க பாரு கற்பகாம்பாள் பிரசாதம் கொண்டு வந்திருக்கேன்" என்று அவள் முகத்தை நிமிர்த்தி, கண்களைத் துடைத்து, திருநீறு – குங்குமம் இட்டாள் உஷா.

"அவருக்கு ஒண்ணும் ஆகாது. நல்ல படியா வீடு திரும்பப் போறார் பாரு. ஏதாவது அதிக பளு இல்லாத வேலையா பார்த்து மாத்திக்கச் சொல்லு. இல்லாட்டி வீட்டிலேயே இருந்துக்கிட்டு கன்ஸல்டன்ஸி மாதிரி ஏதாவது..."

"மிஸஸ் நளினி" - ஐ.சி.யூ அறையிலிருந்து வெளிப்பட்ட டாக்டர் அழைத்தார்...

கலங்கிய விழிகளுடன் எழுந்து போனாள் நளினி.

"உங்க கணவர் உங்களைப் பார்க்கணும்ன்றார். இரண்டு நிமிஷம்தான்... ஓ.கே....? கண்ணைத் துடைச்சுக்கிட்டு வாங்க உள்ளே... அங்க வந்து அழக்கூடாது..."

உஷா அவள் தோளை ஓர் அழுத்து அழுத்தி கைக்குட்டையை நீட்டினாள். தம்ப்ஸ் அப் காட்டிச் சிரித்தான் ரமேஷ்.

ஆக்ஸிஜன் முகமூடிக்குள் இருந்த மூர்த்தியைக் காண மிகுந்த வேதனையாய் இருந்தது. இதயத்தில் பொருத்திய உபகரணத்தின் ஒயர்கள், இடது கையில் செருகிய ஊசி மூலம் சென்ற டிரிப்... கண்கள் இலேசாகத் திறந்திருந்தன. அவன் வலக் கரத்தை மெதுவாகத் தடவினாள். "நளினி... நளினி..." என்றான் எழ இயலாத குரலில்.

"ஓயாம உங்க பேரைத்தான் சொல்லிக்கிட்டிருக்கார்... நீங்க அவங்க ஒய்ஃபா?" என்றாள் ஒரு நர்ஸ்.

"நான் இங்கதான் இருக்கேன்... நீங்க தூங்குங்க... அமைதியா... சீக்கிரம் வீட்டுக்குப் போயிடலாம்" என்றாள் அவன் கையைப் பற்றி.

"இப்போ என்ன டைம்...?"


"ராத்திரி பத்து மணி..."

"நீ இங்கயே என்கூட இருப்பே இல்ல...?"

"இருப்பேன்... இங்கதான் வெளியில..."

மீண்டும் அவன் முகத்தைப் பார்த்தாள். தாயிடம் ஒண்டிய கைக்குழந்தையின் பாவம். அவன் கை அவளுடைய தற்குள் தஞ்சமடைந்திருந்தது. அமைதியாக உறங்க ஆரம்பித்தான். இத்தனை வருடங்களாக அவனோடு அனுபவித்த சுக-துக்கங்கள் அனைத்தும் அமைதிப்பட்டு உறங்குவதாகத் தோன்றியது.

மெதுவாகத் தன் கையை விடுவித்துக் கொண்டாள் நளினி. மூடிய அவன்



- சாயம் வெ. ராஜாராமன்

கண்களிலிருந்து நீர் மல்கிப் பெருகியது.

பேராயிரம் பரவி வானோர் ஏத்தும்
பெம்மானை
பிரிவிலா அடியார்க்கு என்றும்
வாராத செல்வங்கள்
வருவிப்பானை
மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி
தீராநோய் தீர்த்தருள வல்லான்
தன்னை...

பதிகத்தை மனத்துக்குள் உச்சரித்தபடி நின்றாள். உள்ளுக்குள் மண்டிக் கிடந்த நிராகரிப்பும் தடைகளும், மனத்தில் அடம்பிடித்து நின்ற கிலேசங்களும் வறட்சியும் அவள் கண்ணீரில் கரைந்து மறைந்தன. 'அநித்யமான வாழ்வில் அன்பைத் தவிர வேறெதற்குத்தான் அர்த்தமிருக்கிறது....? மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி ஈசன் தன் நோயையும் அல்லவா தீர்த்திருக்கிறான்.' அவள் இதய தீபத்தின் சுடர்கள் மீண்டும் முத்து முத்தாக ஒளிர்ந்தன.

வெளியே வந்தபோது குழந்தைகள் திரும்பியிருந்தார்கள். சீதாவைக் குறுகுறுப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள் உஷா.

"அப்பா சரியா இருக்கார்... நீங்க எல்லாரும் வீட்டுக்குப் போங்க... உஷாவும் நானும் மட்டும் ராத்திரி இங்கே இருப்போம். சத்யா, நீ நாளைக்கு பெங்களூர் போகணுமில்லையா...?"

"கான்ஸல் பண்ணிக்கலாம்..."

"சரி... போய் அதுக்கு ஏற்பாடு பண்ணு. நித்யா, தனியா தூங்க வேண்டாம். அண்ணா ரூம்ல படுத்துக்கோ..."

மூர்த்தியின் சகாக்களுக்கும் விடை கொடுத்தாள்.

"காலைல உங்களுக்குக் காபி எடுத்துட்டு வரேன்...



வாரியார் அமுதம்!

பிரமனிடம் செய்த பாவம் விஷ்ணுவிடத்தில் கழுவாய் (பிராயசித்தம்) செய்தால் அழிந்துவிடும். விஷ்ணுவிடம் செய்த பாவம் பரமசிவனிடம் அழியும். பரமசிவத்திடம் செய்த பாவம் குருநாதன் கருணையினால் அழியும். ஆனால், குருநாதனிடம் செய்த பாவம் வஜ்ரம்போல் எப்போதும் அழியாது நிற்கும். ஆகவே, குருவிடம் குற்றம் புரியாதே. குரு துரோகம் கொடியது.

அதுவரைக்கும் இதை வைச்சுக்கங்க..." தனது செல் போனை அவளிடம் தந்தான் ரமேஷ்.

"தேங்க்ஸ் ரமேஷ்."

விடைபெறுமுன் சீதா அவளை அணைத்துக் கொண்டாள்.

"உனக்கு செண்பகப்பூ ரொம்ப பிடிக்குமா சீதா?" என்றாள் நளினி அவள் தலையை முகர்ந்து பார்த்து... அதன் தெய்வீக மணம் தெம்பூட்டியது.

"பிடிக்கும்... வீட்டுல பூக்குது. சென்னைல அம்மா தினமும் கட்டி வைச்சுடுவாங்க. அடுத்த முறை வரும்போது உங்களுக்கும் எடுத்துட்டு வரேன்..."

"மறக்காம கொண்டுவா..." என்றாள் நளினி.

(நிறைந்தது)

சேனல்

எல்லோரும் கேக்குற கேள்வி!

"பாதியிலதான் கோலங்கள்ல வந்தேன். ஆனா இப்ப என்னையும் என் காதலையும் சுத்தி கதை நடக்கறது சந்தோஷமா இருக்கு" என்று பூரிக்கும் தீபாவுக்கு 'இது ஒரு காதல் கதை'யிலும் அடம்பிடித்துக் காதல் பண்ணும் கேரக்டர்தான். 'நிஜத்துல காதலிக்கிற ஐடியா இருக்கா?' என்று கேட்டால், "காதலிச்சுட்டுத்தான் இருக்கேன்... என் கணவரை" என்று குண்டைத் தூக்கிப் போடுகிறார்.

"உங்களுக்குக் கல்யாணமாயிடுச்சா?" என்றால்,

"இதையேதான் பலரும் என்னைப் பார்த்துக் கேட்கறாங்க. ஏன், என்னைப் பார்த்தா ரொம்ப சின்னப் பொண்ணா தெரியுதா? என் கணவர் நரேந்திராவும் கோலங்கள்ல நடிக்கிறார். என்னை மாதிரியே அவரும் ஒரு டான்சர்தான். நாங்க ஆதர்ச தம்பதிங்க. எனக்கு ஒண்ணுன்னா அவரால தாங்கிக்க முடியாது. அவருக்கு ஏதாவதுன்னா என்னாலயும்... என்னோட பொழுதுபோக்கே அவரோட டைம் ஸ்பெண்ட் பண்றதுதான். என் சீக்ரெட் ஆஃப் எனர்ஜியே என் கணவர்தான்" என்று உருகியவரிடம் 'எப்படிக் கிடைச்சுது சீரியல் வாய்ப்பு?' என்றோம்.



"காலேஜ் படிக்கும்போது ஜெயா டி.வி தொகுப்பாளினியா 'இனிய இல்லம்' நிகழ்ச்சிக்குள்ள காலடி எடுத்து வச்சேன். அந்த நேரத்துலதான் 'இது ஒரு காதல் கதை', 'கோலங்கள்'னு வாய்ப்பு வரவே, நேயர்கள் ஆதரவோட நடிச்சுட்டிருக்கேன். சினிமாவுக்குப் போறது என் கனவோ, முயற்சியோ இல்ல. வாய்ப்பு வந்தா பண்ணுவேன். 'கண்ட நாள் முதல்' படத்துல நடிச்சது அப்படித்தான்" என்றவர்,

"என்னோட எல்லா வெற்றிக்கும் பின்னணியில மூணு பேர் இருக்காங்க. ஏ.பி.ராஜேந்திரன், திருச்செல்வம், பாம்பே சாணக்யாதான் அவங்க. இவங்க இல்லன்னா நான் இல்ல!" என்றார்.

- மனோ சௌந்தர்

படம்: பொள்ளாச்சி சுந்தரம்

"என் ரகசிய சிநேகிதன்...!"

"நான் அவரை முதல் முதலா பாம்பே ஏர் ஃபோட்லதான் பார்த்தேன்..." என்று ஜாலியாகப் பேச ஆரம்பிக்கிறார் அஸின். "யாரு, சஞ்சய் ராமசாமியா? மறுபடியுமா..." என்று கேட்டால் தலையாட்டுகிறார். "எந்தா, நான் சொன்னது டான் பிரவுனை. டாவின்சி கோட் புக்கை எழுதினாரில்லையா அவராக்கும்" என்கிறார். இதர நடிகைகள் போலில்லாமல் புத்தகம் படிக்கும் நேரம் போக எஞ்சிய நேரத்தில் ஷூட்டிங்கில் கலந்து கொள்பவர் அஸின் (நிஜமாவா?). அவ்வளவு புத்தகப் புழு. புத்தகம் மீதான தமது மோகத்தை இங்கே ஒவ்வொரு பக்கமாக விரித்து விவரிக்கிறார்.

முதல் பக்கம்

கொச்சின்ல இருக்கிற வீட்ல அப்பா ஒரு நூலகமே உருவாக்கியிருந்தாரு. மர அலமாரியில வெவ்வெறு புத்தகங்கள் குவிந்து கிடக்கும். நாவல்ஸ், ஃபேரி டேல்ஸ், காமிக்ஸ் போன்ற ஒல்லி புத்தகங்களும், வாழ்க்கை வரலாறு, தத்துவப் புத்தகங்கள், கவிதைகள் போன்ற குண்டு புத்தகங்களும் விதவிதமா கிடக்கும். நான் குட்டிப் பொண்ணா இருக்கும்போது அங்கே போய் ஒவ்வொரு புக்ஸையும் தொட்டுப் பார்ப்பேன். என் பாடப் புத்தகங்களைக்கூட அங்கே வைச்சுத்தான் படிப்பேன். இப்படி மெல்ல மெல்ல வளர்ந்ததுதான் புத்தகம் படிக்கிற பழக்கம்.

அப்புறம் என் வாழ்க்கையோட நாலு பக்கங்களும் புத்தகங்களால சூழ்ந்திடுச்சு. நான் தனிமை விரும்பி. இப்பவும் பொழுதுபோக்குக்காக டிஸ்கோத்தே, பார்ட்டி எல்லாம் போகமாட்டேன். புத்தகமே என் ரகசிய சிநேகிதன். நாளடைவுல காமிக்ஸ், ஃபேரி டேல்ஸ், எனிட் ப்ளைடன், அஸிமோ ரோபோ கதைகள்னு அப்பாவுக்குச் சமமா நானும் புக்ஸ் கலெக்ஷன் ஆரம்பிச்சுட்டேன்.

சொர்க்கம்

கொச்சின்ல இருக்கிற அபார்ட்மெண்ட்ல பத்தாவது மாடியிலுள்ள எங்க வீட்டுல ஒரு ரூம் முழுக்க க்ளாஸால கட்டப்பட்டிருக்கும். அங்கே ஜன்னலைத் திறந்தா அரேபியக் கடல் காத்து சில்லுன்னு முகத்துல அடிக்கும். இந்த ரூம்ல மழை பெய்யும்போது கிடைக்குற சுகத்துக்கு ஈடு இணையே இந்த உலகத்துல இல்லை. அதுபோல 'ஃபேரி டேல்ஸ் படிக்க ஆரம்பிச்சா சிறகு முளைச்சு நான் தேவதையா மாறி பறக்க ஆரம்பிச்சுடுவேன். அந்த நேரத்துல நான்தான் சிண்ட்ரல்லா, நான்தான் ஸ்லீப்பிங் பியூட்டி.

கண்டேன் டான் பிரவுனை

'கஜினி' படத்தில் வேணும்னா பாம்பே ஏர்



போர்ட்டில் நான் பார்த்தது சஞ்சய் ராமசாமியா இருக்கலாம். ஆனா நிஜத்துல நான் ஏர்ஃபோர்ட்ல முதன்முதலா பார்த்தது டான்பிரவுனை. ஊரெல்லாம் அவரோட டாவின்சி கோட் புத்தகத்தை ஆஹா ஓஹோன்னு புகழ்றாங்களேன்னு சும்மா வாங்கிப் பார்த்தேன். வீட்டுக்கு எடுத்து வந்து படிக்க ஆரம்பிக்கறேன். மைகாட்... படிக்கப் படிக்க அப்படியே மிதக்கற மாதிரி இருக்கு. உண்மையையும் கற்பனையையும் கலந்துகட்டி கதை சும்மா ஜிவ்வுனு போகுது. ஒரு ராத்திரி முழுக்க கண் விழிச்சுப் படிச்சேன். அன்னைலேர்ந்து டான் பிரவுன் நம்மாளு ஆயிட்டாரு. அப்புறம் விடுவேனா ஓடிப்போய் நம்ம தானைத்தலைவரோட கலெக்ஷனையெல்லாம் ஒண்ணு விடாம வாங்கிக் குவிச்சுட்டேன். என்னதான் 'டாவின்சி கோட்' இன்னைக்குப் படமா வந்தாலும் புக்ல இருக்கிற த்ரில் அதுல இருக்குமானு தெரியலை.



ஆதர்ச எழுத்தாளர்கள்

ஷேக்ஸ்பியர் நாடகங்கள் - கவிதைகள்; டான் பிரவுன் (அவர் பெயரில எந்த புக் வந்தாலும்).

புக் ஸ்பாட்

ஏர்ஃபோர்ட்தான். அதுவும் குறிப்பா நம்ம மீனம்பாக்கம். அங்கே உள்ளே நுழைஞ்சவுடன் நேரா புக் ஸ்டாலுக்குத்தான் ஓடுவேன். எந்தப் புது புத்தகங்கள் வந்தாலும் அஸினுக்குனு தனியா எடுத்து வைச்சிருவாங்க.

- ச.ந.கண்ணன்

அட்டை, படம்:
சங்கர் சத்யமூர்த்தி



ஆங்கரை பைரவி

அந்த கூரை வீடு எங்கும் ஈரம் கலந்த நசநசப்பு இருந்தது. ஆங்காங்கே கூரை ஒழுகும் இடங்களுக்கு நேராய் சின்னச் சின்னப் பாத்திரங்களை வைத்திருந்தாள் வெள்ளையம்மாள்.

இந்தத் தொடர் மழைக்கு ஊருக்குள் தெருவுக்கு ஒரு சாவு என்று விழுந்தவண்ணமாய் இருக்கிறது. கருப்புசாமிக்கு ஓய்வு ஒழிச்சலே இல்லை. மழை கொட்டும் சப்தம் ஒருபுறம்



என்றால், சாவுக்கு தப்புக் கொட்டும் சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கிறது. முதல் நாள் ஒரு தெருவில் என்றால், மறுநாள் இன்னொரு தெருவில் பெரிய காரியம்.

கருப்புசாமிக்கு இந்த மழை ஒப்புக் கொள்ளவில்லை. ஆஸ்துமாகாரன் வேறு. அடித்து அடித்து பெய்த மழை அவனுக்குள் கிடந்த ஆஸ்துமாவைத் தட்டி எழுப்பி விட்டுவிட்டது. இருமிக் கொண்டே ஒரு மூலையில் கிடக்கிறான். கசக்கி எறிந்த காகிதம் போல.

வாங்கி வந்த சொதந்திர கூலி எல்லாம் மருந்துக்கும் மாத்திரைக்கும் சரியாக இருந்தது. கொஞ்சம் சுக்குக் காபி குடித்தால் இருமல் மட்டுப்படும் என்று யாரோ சொல்லவும், வெள்ளையம்மாள் அதைத் தயாரிக்கும் முயற்சியில் இறங்கி இருக்கிறாள்.

அடுப்படியில் ஈரவிறகோடு போராடிக் கொண்டிருக்கிறாள். வரவர கண் பார்வை மங்கலாகிக் கொண்டு வருகிறது. அடுப்பு ஊதி ஊதியே கண்ணில் கோளாறு ஏற்பட்டு விட்டது. இலவசக் கண் சிகிச்சை முகாமில் அறுவை சிகிச்சை செய்துகொள்ள அவளுக்கும் ஆசைதான். செய்து கொண்டு விட்டால் இரண்டு மூன்று மாதத்துக்கு குனிந்து நிமிர்ந்து எந்த வேலையும் செய்யக் கூடாது. முக்கியமாய் அடுப்படி பக்கம் போகக்கூடாது. போகாமல் இருந்தால் மகனுக்கும், மகளுக்கும், புருஷனுக்கும் எப்படிப் பொங்கிப் போடுவது?

வறுமையும், வேதனையும் வீடு முழுவதும் நிறைந்து இருந்தது. எல்லாவற்றையும் சுத்தமாய்ப் பெருக்கி வெளியே போடுவான் என்று மகனை நம்பி இருக்கிறாள்.

மகனின் பெயர் கார்த்திகேயன். ஒரு கல்லூரியில் பி.ஏ. பொருளாதாரம் படிக்கிறான். இப்போது மூன்றாவது ஆண்டு. இந்த வருடத்தோடு படிப்பு முடிகிறது. நாளையில் இருந்து தேர்வு ஆரம்பம். மூன்றாம் வருடம் கவனமாய்ப் படிக்க வேண்டும்.

இப்போது கூட திண்ணையில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருக்கிறான். திண்ணையும் மழைக்கு ஈரம் கோத்து இருக்கிறது. இவன் படிப்புக்காக வட்டிக்குக் கடன் கொடுத்தவர்களில் யாரேனும் ஒருவன் வந்து கோபத்தில் எட்டி உதைத்தால் அவ்வளவுதான்... திண்ணை அப்படியே இடிந்துவிடும். இல்லையென்றால் திண்ணையே தெருவுக்கு நகர்ந்து விடும். அத்தனை ஈரமுடன் கிடக்கிறது திண்ணை.

இந்த மண் வீடு கூட இப்போதைக்கு இவன் படிப்பிற்கான கடனில் இருக்கிறது. ஊர்ப் பண்ணையாரிடம்தான் அடமானம் இருக்கிறது. கடன் கொடுத்த காரணத்தை வைத்துக்கொண்டே, பல நாட்கள் கூலி தராமல் வேலையை மட்டும் வாங்கிக் கொள்வார்.

கொஞ்சம் முரண்டு பிடித்தால் கடனைக் கேட்டு நெருக்குவார். வட்டிக்கு ஒரு வட்டி போடுவார். இந்த வம்பு எதற்கு? உடல் உழைப்புதானே என்று எல்லாக் கசப்புகளையும் மாத்திரையாய் உள்ளேயே விழுங்கி இருக்கிறான் கார்த்திகேயன்.

கருப்புசாமியை விட கார்த்திகேயன் அருமையாய் தப்பு அடிப்பான். கூட்டமே வேடிக்கை பார்க்கும். திருவிழா என்றால் இவனுடைய தப்படிக்கு எட்டு ஊரும் நின்று கேட்கும்.

ஆனாலும், கார்த்திகேயனின் லட்சியமெல்லாம் படித்துவிட்டு ஒரு நல்ல வேலைக்குப் போக வேண்டும். இந்த வீட்டை மீட்க வேண்டும். இதே ஊரில் மாடி வீடு கட்டி சிறக்க வாழ வேண்டும் என்பதுதான். தன்னை நம்பித்தான் குடும்பம் இருக்கிறது என்பதை நன்கு உணர்ந்தவனாய் படிப்பிலேயே கவனமாய் இருந்தான்.

வெளியே கொட்டும் மழையைப் பார்த்தபடி நாளைய தேர்வுக்குப் படித்துக் கொண்டு இருக்கிறான். அம்மா அடுப்படியில் புகைந்து கொண்டு இருக்கிறாள். அப்பாவின் இருமல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. வீட்டின் சூழ்நிலை புரியாமல் கண்ணம்மா தப்பை எடுத்துத் தட்டிக் கொண்டிருந்தாள்.

சாவுக்கொட்டு. தாளகதியைப் பிசகாமல் தட்டினாள். கார்த்திகேயனுக்குக் கோபம் வந்து விட்டது. எழுந்து உள்ளே வந்தான்.

"ஏய்... சனியனே...! இப்ப இங்கே யாரு செத்துப் போயிட்டாங்கன்னு சாவுக் கொட்டு கொட்டுறே...? நிறுத்துடி முதல்ல..."


கோபத்தில் மூக்கு விடைத்தது கார்த்திகேயனுக்கு.

கண்ணம்மா



பறை!

கண்ணம்மா என்று பிரியமாய் இருக்கும் அண்ணன் கத்தவும் அவளின் முகம் தொட்டாச் சிணுங்கியாய் மாறிப் போனது. கார்த்திகேயனுக்கு ஒரு வயது இளையவள். வாயாடி. படிப்புதான்





ஏறவில்லை. இரண்டாம் வகுப்போடு சரி. அம்மாவோடு களை எடுக்க, நாத்து பறிக்கப் போவாள். இவளுடைய சம்பாத்தியமும் கார்த்திகேயனுக்கு ஒரு பக்கபலம்.

"ஏன்... நான் தப்பு கொட்டினா... என்ன?" எகிறலில் கோபம் தெறித்தது.

"பொம்பளை எல்லாம் தப்படிக்கக் கூடாதுடி..." அம்மா மிரட்டினாள்.

"யார் சொன்னா உனக்கு? சொன்ன ஆளைக் கொண்டு வந்து முன்னாடி நிறுத்து. பளார்னு அறையறேன். பொம்பளை கார் ஓட்டலாம். ஆனா, தப்படிக்கக் கூடாதுன்னா எந்த ஊரு நியாயம்? அண்ணனுக்குப் பொறாமை. நான் நல்லா அடிக்கிறேன்னு. வெவ் வெவ்வே..." பழிப்புக் காட்டினாள்.

அவள் பழிப்புக் காட்டும்விதம் கண்டு வீடு சிரித்தது. அந்த நேரத்தில் வீடு முழுவதும் ஒரு மலர்ச்சி படர்ந்தது. கருப்புசாமியும் சிரித்தான். சிரிப்பைத் தொடர்ந்து இருமல் தொடர்ந்தது. அந்த இருமல் கார்த்திகேயனுக்கு மிகுந்த கவலையைக் கொடுத்தது.

கருப்புசாமியை நெருங்கினான். அவனது மார்பை நீவிவிட கைவைத்தான். உடம்பு அனலாய்க் கொதித்தது. ஒரு மாத்திரை போட்டால் சரியாகுமா என்று நினைத்தவன் தனது சட்டைப் பையைப் பார்த்தான். புரிந்து கொண்டவளாய் தனது சேலை முந்தானையில் முடிந்து வைத்திருந்த ஐந்து ரூபாயை எடுத்து நீட்டினாள் அம்மா. வாங்கிக் கொண்டான்.

"நான் போய் செட்டியார் கடையில மாத்திரை வாங்கிட்டு வரேம்மா..." குடையை எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தான். அங்கே யாரோ வந்து நிற்பது தெரிந்தது.

"வாங்கண்ணே.... என்ன இந்த நேரத்துல...?" இவன் அழைப்பை, வந்தவன் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

"எங்கேடா... உங்க அப்பன்...?"

"உடம்பு சரியில்ல. உள்ளாற படுத்து இருக்காரு..."

"கூப்புடு அவனை..."

"யப்போவ்... உன்னையக் கூப்புடுறாங்க. இங்க வா..." தட்டுத் தடுமாறி எழுந்து வந்தான் கருப்புசாமி. இருமல் நிற்காமல் தொடர்ந்தது. மார்பை நீவி விட்டுக் கொண்டான்.

"யாரது...?" குரல் தடுமாறியது. செருமிக் கொண்டான்.

"நான்தாண்டா மாணிக்கம். பண்ணையாரு அம்மா செத்துப் போச்சு. காலையில மாரிமுத்தோட வந்துடு. அவனுக்கும் சொல்லிட்டேன். இந்தா..."

வெற்றிலை பாக்கில் ஒண்ணே கால் ரூபாய் வைத்து இடதுகையால் நீட்டினான். இறங்கி வந்து இரு கைகளையும் நீட்டி வாங்கிக் கொண்டான் கருப்புசாமி.

மறுநாள்.

ஒரு பக்கம் விடியக்கூட இல்லை. அரை போதையில் வந்து நின்றான் மாரிமுத்து. கருப்புசாமியுடன் தொழில் செய்கிறான். நல்ல அனுபவசாலி. வயசாளி. கருப்புசாமிக்கு உதவியாய் இருப்பான். தப்பு அடிப்பதில் சற்று கணக்கம் இருக்கும். அதற்கு வயோதிகமும் ஒரு காரணம். ஆள் இல்லாத ஊரில் இவனுக்கும் வேலை இருக்கவே செய்தது.

"ஏய் கருப்புசாமி...! இன்னும் வூட்டுக்குள்ள என்னடா பண்றே...? நேரமாச்சுடா வா..." மாரிமுத்து குரல் கேட்டு வெள்ளையம்மாள் வெளியே

ஓடி வந்தாள். திண்ணையில் கார்த்திகேயன் தேர்வுக்குப் படித்துக் கொண்டிருந்தான்.

"மாமா.. ராத்திரி பூரா பொட்டுத் தூக்கமில்ல உங்க மகனுக்கு. இப்பத்தான் செத்த கண் அசந்துருக்கு. உடம்பு வேற அனலா கொதிக்குது. என்னா பண்றது...?" கவலை குரலில் இழையோடியது. கார்த்திகேயனைப் பார்த்தாள். அவனுக்குப் புரிந்து போயிற்று.

"அம்மா... எனக்கு இன்னிக்கு பரீட்சை இருக்கும்மா. இது மூணாவது வருஷம். இதை விட்டேன்னா மூணு வருஷப் படிப்பு வீணாப் போயிடும்மா..."

பரிதாபமாய்ப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.

"இல்லடா தம்பி. நீ போய்க் கொஞ்ச நேரம் தப்படிச்சுக்கிட்டு இரு. ஒரு எட்டு மணி வாக்குல உங்கப்பனை எழுப்பி ஒரு மாத்திரை போட்டு அனுப்பி வைக்கிறேன்."

புத்தகத்தை மூடி வைத்தான். தப்பை எடுத்துக் கொண்டு மாரிமுத்துவோடு நடக்க ஆரம்பித்தான். அப்பாவின் தோள் துண்டால் தலையில் முண்டாசு கட்டியிருந்தான். நடையில் ஒரு கோபம் இருந்தது.

பண்ணையார் வீடு. நேரமாகிக் கொண்டிருந்தது. பல் கூடத் தேய்க்காமல் வந்த கார்த்திகேயனுக்குப் பசிக்க ஆரம்பித்தது. கூண்டில் சிக்கிய பறவையாய்த் தவித்தான்.

'கடவுளே...! என்னோட படிப்பு அம்புட்டுதானா...? எங்க தலையெழுத்து மாறாதா? இன்னிக்குப் போகலேன்னா வாழ்க்கையே பாழாப் போயிடுமே. அப்பாவை இன்னும் காணோம். உடம்புக்கு ரொம்ப முடியாமப் போயிடுச்சோ...? கடவுளே...! நான் என்னா செய்வேன்...?'

தப்படித்துக் கொண்டே உள்ளூரக் கலங்கினான். அடிக்கடி தெருவையே திரும்பிப் பார்த்தான். முகமே இருண்டு போய்க் கிடந்தது. மனது முழுவதும் கவலை சுமந்தான். கண்கள் கலங்கின. சடக்கென்று வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். துடைத்துக் கொண்டதை மாரிமுத்து பார்த்து விட்டான்.

"ஏலேய் பேராண்டி நீ ஏன் அழுவறே...? என்ன ஆச்சு உனக்கு...?" பதற்றம் கலந்த குரலில் கேட்டதுதான் தாமதம். குரலில் பிசிறு தட்ட ஆரம்பித்தது கார்த்திகேயனுக்கு.

"இல்ல தாத்தா. காலேஜ் போகணும். பரீட்சைக்கு நேரமாச்சு. அப்பாவையும் இன்னும் காணோம். இன்னிக்குப் போகலேன்னா... அவ்வளவுதான் தாத்தா..."


"டேய் என்னடா தப்படிக்கயில பேச்சு வேண்டிக்கிடக்கு. அடியில சொரத்தே இல்ல. தப்பை நல்லாக் காய்ச்சி அடிங்கடா..."

காரியத்துக்கு வந்த கூட்டத்தில் ஒருவன் கத்தினான். அடிப்பதை நிறுத்தி விட்டு பக்கத்தில் கிடந்த வைக்கோலால் நெருப்பு உண்டாக்கினான் கார்த்திகேயன். அடித்த அடிக்கு கைவலித்தது. அப்பா இன்னும் வராத கவலையில் மனசு வலித்தது. தப்பை நெருப்பில் காட்டியபடி இந்த முறை தெருவைத் திரும்பிப் பார்த்தான். தூரத்தில் கண்ணம்மா வந்து கொண்டிருந்தாள்.

"என்னோட எக்ஸ்ரே காப்பி எல்லாம் பார்த்தீங்களே... என்ன டாக்டர் தெரியுது...?"

"உங்க மூலமா எப்படியும் எனக்கு ஒரு லட்ச ரூபா கிடைக்கப் போகுதுன்னு தெரியுது..."

- கே.ஆனந்தன்



புதிய அமைச்சரவையில் அமைச்சராகப் பதவியேற்ற ஒருவார காலத்துக்குள் மறைந்துவிட்டார் பி.டி.ஆர். முன்னாள் சபாநாயகரும் சக அமைச்சருமான பி.டி.ஆர். பழனிவேல்ராஜனைப் பற்றி நினைவு கூர்கிறார் செய்தித்துறை அமைச்சரான பரிதி இளம்வழுதி.

"இலக்கியங்களில் சொல்லப்படும் 'அடையா நெடுங்கதவு'க்கு உதாரணம்

"அவர் அப்பா

மதுரை சொக்கிகுளத்திலுள்ள பாளையம் ஹவுஸ். இரவு, பகல் என்று எந்நேரமும் ஆட்கள் வந்து போய்க் கொண்டிருப்பார்கள். வீட்டின் எஜமானர் பி.டி.ஆர். கொஞ்சம் கூட முகம் சுளிக்காமல், புன்னகையுடன் வருபவர்களை விருந்தோம்பலில் திணற வைத்து விடுவார். அந்த வீட்டில் அணையா அடுப்புதான். சாதாரணமாக வருபவர்களைத் தவிர, நள்ளிரவு, விடியற் காலையில் அவரது ஊரான உத்தமபாளையம் பகுதியிலிருந்து உடல் நலமில்லாமல் இருப்பவர்களைத் தூக்கிக்கொண்டு வருவார்கள். உடனே ஆட்களை அனுப்பி, சேர்க்க வேண்டிய ஆஸ்பத்திரியில் சேர்த்து சிகிச்சை முடியும் வரை உதவி தொடரும்.

மதுரையில் இருந்தால் மீனாட்சி அம்மன் கோயில் விஸிட் தவறாது. அந்தக் கோயிலின் திருப்பணிகளுக்கு பி.டி.ஆர். குடும்பம் ஏகமாகவே செய்திருக்கிறது. தனது ஆத்திக மனப்பாங்கை மறைக்கும் போலித்தனம் அவரிடம் சிறிதும் கிடையாது.

மதுரையை மிகச் சிறந்த நகரமாக உருவாக்க வேண்டும் என்ற கனவு அவருக்கு இருந்தது. அதனால்தான் 1996 - 2001 காலகட்டத்தில் அவர் மதுரைக்கு நிறைய செய்தார். இன்று பிரம்மாண்டமாக இருக்கும் மாட்டுத் தாவணி பஸ் ஸ்டாண்ட், போக்குவரத்து நெரிசலைக் குறைக்க புறவழிச்சாலை என்று கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிலான திட்டங்களை நிறைவேற்றியதில் பி.டி.ஆரின் பங்களிப்பு மிக அதிகம். இப்போதும் நிறையச் செய்ய வேண்டும் என்று பல திட்டங்களைப் போட்டிருந்தார்.

அவர் ஐந்தாண்டுகள் சபாநாயகராக இருந்த காலம் தமிழக சட்டமன்றத்தின்

பொற்காலம். அவருடன் இணைந்து துணை சபாநாயகராகச் செயல்பட்டது எனக்குக் கிடைத்த பெரிய வாய்ப்பு. என்னை 'இணைச் சபாநாயகர்' என்றுதான் குறிப்பிடுவார். அலுவல் ஆய்வுக் குழு கூட்டங்களில் அவருக்குப் பக்கத்தில் சரிசமானமாக உட்கார வைப்பார். எதிர்கட்சிகளுக்கு பேச நிறைய வாய்ப்புக் கொடுப்பார்.

தனிப்பட்ட முறையில் பார்த்தால், அவர் எனக்கு அப்பா மாதிரி. 'டேய்... நாளைக்கு எங்கேயும் போய்டாதே... உன் தம்பி வர்றான்'என்று வெளிநாட்டிலிருந்து அவர் மகன் வருவதைச் சொல்லுவார். அவர் வெளிநாடு சென்று வரும்போது என் மகன் தீபனுக்கு டென்னிஸ் மட்டை, சாக்லெட் என்று பல

மாதிரி!''



பொருட்களை வாங்கி வருவார். அது மட்டுமில்லாமல் என் மகன் அவருடன் தினசரி டென்னிஸ் ஆட வேண்டும். வராவிட்டால் 'எங்கே பையனைக் காணும்' என்று கார் அனுப்பி வரவழைத்து விடுவார். ஒருமுறை மதுரையில் அவரது வீட்டுக்குச் சென்றிருந்தேன். வழக்கம் போல விருந்தெல்லாம் ஏற்பாடு செய்திருந்தார்கள். நான் அசைவப் பிரியன் என்று அவருக்குத் தெரியும். சாப்பிடுவதற்கு சிறிது நேரத்துக்கு முன்னால், 'டேய் இன்னிக்கு நன்றாக வெளுத்துக் கட்டு. உங்கம்மா உனக்காக வெளியில் இருந்து அசைவ பதார்த்தங்களும் வாங்கி வைத்திருக்கிறார்' என்றார். பி.டி.ஆர். குடும்பம் சுத்த சைவம். அங்கே அசைவக் காற்றே வீசக் கூடாது. அவர் சொன்னவுடன் என் கண்கள் கலங்கிவிட்டன. பாளையம் ஹவுஸில் முதன் முதலாக அசைவம் எட்டிப் பார்த்தது அப்போதுதான்."

- தில்லப்பா

"கதை விடாதீங்க...

இயல் இசை நாடக மன்றத் தலைவராக பிரபல இயக்குநர் இராம.நாராயணன் நியமிக்கப்பட்டுள்ளார். அவரைச் சந்தித்து வயிற்றெரிச்சலுடன் வாழ்த்துச் சொல்ல டி.ஆர். செல்கிறார்.

டி.ஆர்.: வணக்கம் இராமநாராயணன்! உங்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் பதவி கிடைச்சிருக்கு அதுக்கு என்னோட வாழ்த்துகள்.

இ.நா. : டி.ஆர். கொஞ்சம்



உங்க முடியை ஒதுக்கிட்டுத் திரும்பிப் பாருங்க, நான் பின்னால இருக்கேன்.

டி.ஆர். : (கண்களை மறைக்கும் முடியை ஒதுக்கிக்கொண்டு திரும்புகிறார்) மன்னிச்சிடுங்க நாராயணன். முடி மறைச்சிருச்சி கண்களை! அதனால பாக்க முடியல உங்களை!

இ.நா : முடிதான் கண்ணை மறைக்குதில்ல கட் பண்ணிட வேண்டியதுதானே?

டி.ஆர். : நாராயணன், இதைக் கட் பண்ணிட்டா தமிழ்நாட்டு மக்கள் மத்தியில என் அடையாளமே கட்டாயிடும்.

இ.நா. : இப்படியே விட்டா முடியை மட்டும் பாத்துப் பாத்து தமிழ்நாட்டோட மக்கள் அடையாளமே உங்களுக்கு கட்டாயிடுமே?

டி.ஆர். : முடி விஷயத்தை இத்தோட கட் பண்ணிக்குவோம். விஷயத்துக்கு வருவோம். நாராயணன், இந்த வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்க என்ன காரணமா இருக்கும்னு நீங்க நினைக்கறீங்க?

இ.நா : டி.ஆர். என்னோட படங்களைப் பாத்தீங்கன்னா மேடையில்லா மேடை நாடகம் மாதிரியே இருக்கும். புரொடியூசருங்க ஒரு பாட்டை எடுத்துக்கச் சொல்லி முந்நூற்றைம் பது ரூபாய் கொடுத்தா, அதுல அம்பதை மட்டும் செலவு செஞ்சிட்டு மீதி முந்நூறை அப்படியே திருப்பிக் கொடுத்துடுவேன்.

டி.ஆர். : 'நான் மட்டும் என்ன தாம்தூம் பார்ட்டியா... ஸ்கூல் பக்கம் குச்சி ஐஸ் விக்கறவனை ப்ரீயா கதாநாயகனா போட்டு கதை, திரைக்கதைன்னு தொடங்கி லைட் பாய் வேலை வரைக்கு அத்தனையும் நானே பாத்து எவ்வளவு மிச்சம் பண்றேன். என்னவோ உங்களோட படம் மட்டும்தான் மேடையில்லா மேடை நாடகம் மாதிரி பீலா விட நீங்களே... இசையும் நாடகமும் ஓ.கே.! இயல்ல உங்களுக்கு என்ன திறமை இருக்கு?

இ.நா : படத்துக்குக் கதை எழுதறேனே!

டி.ஆர். : கதை விடாதீங்க. வீணா உதை படாதீங்க. உங்க படத்துல கதையா?

இ.நா.: உங்க படத்துல மட்டும் என்ன... பதினைஞ்சு ரீல்ல பத்துப் பாட்டு, ஏழு ஃபைட்டுன்னுதான் நீங்களும் கோடம்பாக்கத்துல குப்பை கொட்டிட்

உதை படாதீங்க..."



டிருந்திங்க.

டி.ஆர். : (சமாளித்தபடி) சரி... சரி... படத்துக்குக் கதை எழுதறது எப்படிங்க 'இயல்' ஆகும்?

இ.நா. : டி.ஆர். என்னோட படங்களைத் தொடர்ந்து பாத்தா உங்களுக்கே புரியும். ஹீரோயின் பக்திப் பழமா இருப்பா. அவளுக்கு ஹெல்ப் பண்ண ஏதோ ஒரு மிருகம் இருக்கும். அவளைக் கொடுமை பண்ணி கொலை செய்ய ஒரு மாமியார், அவளுக்கு ஒரு தம்பி, குடிகார புருஷன், அப்புறம் ரெண்டு மூணு மந்திரவாதிங்க இருப்பாங்க. இவங்களால செத்துப் போற ஹீரோயின், அம்மனோட உதவியால திரும்ப வந்து செகண்ட் ஆஃப்ல பழி வாங்குவா அவங்களை! கதை என்னவோ இதேதான். இதையே வெச்சி ஆக்டர்ஸை மாத்தி, கடவுளை மாத்தி, கதையை லைட்டா மாத்தி மாசத்துக்கு மூணு படம் எடுத்து விட்டுடுவேன். இப்படி ஸ்பின்னிங் மில் ரேஞ்சுக்கு 'நூல்' விடறதால 'இயல்' தகுதி எனக்கு ஏகப்பட்டதா இருக்குல்ல.

டி.ஆர். : எப்படியோ 'இயல் இசை நாடக' தகுதிகள் இருக்கிறதை நிரூபிச்சிட்டீங்க. உங்க கிட்ட இருக்கிற தகுதிகள்ல எந்த விதத்துலயும் என் தகுதிகள் குறைஞ்சிடல... இருந்தாலும் ஏனோ, என்னை கலைஞர் மன்றத்தோட துணைத் தலைவரா கூட போடலை (பெருமூச்சு விட்டபடி). ஓ.கே. நாராயணன். மன்ற வளர்ச்சிக்கு என்ன செய்யப் போறீங்க?

இ.நா.: நம்ம நெப்போலியனைக் காலி செஞ்ச எஸ்.வி.சேகரை ஒழிக்கறதுக்காக காமெடி நாடகங்களைத் தடை செய்யப் போறேன்.

டி.ஆர். : அட! உங்க முதல் கையெழுத்தே அமோகமா இருக்கும் போலிருக்கே. அப்புறம்?

இ.நா. : மேடை நாடகங்கள்ல கிராஃபிக்ஸ் முறையைப் பயன்படுத்தி டைனோசர், ராட்சஷ தேள், நண்டு, வண்டு, செவ்வாய்க் கிரக ஜந்து இவற்றையெல்லாம் காட்டணும்ங்கிறதை கட்டாயமாக்கப் போறேன். திறமைகளை ஊர் உலகத்துக்குக் காட்டப் போறேன். 'வேப்பிலை', 'மாரியாத்தா', 'குண்டம்', 'தீச்சட்டி', 'சூலம்' இவற்றை மையப்படுத்திய நூல்களை அரசாங்கம் சார்பில் வெளியிட நடவடிக்கை எடுக்கப் போறேன்.

டி.ஆர். : இதெல்லாம் நடக்குமா?

இ.நா. : ஏன் நடக்காம! சிலைகளையே எழுந்து நடக்க வெச்ச தென்னக ஸ்பீல்பெர்க்கே நான்தாய்யா!

(மேலே எதுவும் பேச முடியாமல் வாயடைத்துப் போகிறார் டி.ஆர்.)

கற்பனை : **வீ.விஷ்ணுகுமார்**

குறையொன்றுமில்லை

எட்டாம் பாகம் 21

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

பொய்ந் நின்ற ஞானமும், பொல்லா
ஒழுக்கும், அழுக்கு உடம்பும்,
இந் நின்ற நீர்மை இனி யாம் உறாமை
- உயிர் அளிப்பான்
எந் நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்;
இமையோர் தலைவா
மெய்ந் நின்று கேட்டருளாய்,
அடியேன் செய்யும் விண்ணப்பமே.

- என்கிறார் நம்மாழ்வார்.

முன்னுரைத்த திருவிருத்தம் நூறு பாட்டும்
முறையில் வரும் ஆசிரியம் ஏழு பாட்டும்
மன்னிய நற்பொருள் திருவந்தாதி மறவாத
எண்பத்தேழு பாட்டும்
பின்னுரைத்ததோர் திருவாய்மொழி
ஆயிரத்து நூற்றிரண்டு பாட்டும்
இந்நிலத்தில் வைகாசி விசாகம் தன்னில்
எழில் குருகை வருமாரா இரங்கு நீயே

- என்று வைகாசி விசாக நக்ஷத்திரத்திலே ஆவிர்பவித்தவர் நம்மாழ்வார். அப்படிப்பட்ட நம்மாழ்வார் குறித்து போற்றி! நான்கு திவ்ய பிரபந்தங்களை அருளியுள்ளார் அவர். அவை நான்கும் நான்கு வேதங்கள். திருவிருத்தம் என்கிற நூறு வேதங்களைத் தமிழ் மறையாக்கி, எல்லோருக்கும் சுலபமாய்ப் புரிய வேண்டும் என்பதற்காகக் காட்டிக் கொடுத்தார். அதில் திருவிருத்தம் என்ற ரிக் வேத ஸாரத்தில் வருகிற முதல் பாசுரத்திலேயே நுட்பமான ஞானத்துடன் கூறியிருக்கிறார் :

"பொல்லா ஒழுக்கு, துர்கந்த சரீரம், அழுக்கு உடம்பு, இதையெல்லாம் நாம் அடையாமல் இருப்பதற்காக, பகவான் 'எந்நின்ற யோனியுமாய்' வந்து பிறக்கிறான். பூலோகத்தில் பலபடியாய் வந்து அவதரிக்கிறான்" என்கிறார்.

"ஹே இமையோர் தலைவா! தேவா! தேவாதிராஜனே! பிறவியே அற்றவனான நீ, வந்து பிறக்கிறாயே! எதற்காகப் பிறக்கிறாய்?..." என்று கேட்கிறார்.

பாசுரங்கள் இருக்கின்றனவே, அவை மொத்தம் ரிக் வேதத்தைத் தன்னுள்ளே கொண்டவை.

அடுத்தது திருவாசிரியம் என்ற ஏழு பாசுரம்... யஜுர் வேதத்தின் ஏழு காண்டங்களையும் அதில் அப்படியே காட்டினார்.

பெரிய திருவந்தாதி என்கிற 87 பாசுரத்திலே அதர்வண வேதத்தின் பொருளை அப்படியே காட்டினார்.

1001 சாகைகள் கொண்ட ஸாம வேதத்தை, 1102 பாசுரங்களிலே - தமது திருவாய்மொழி என்கிற பிரபந்தத்திலே காட்டினார்.

நம் பிறப்பை அறுப்பதற்காகவே பகவான் வந்து பிறக்கிறான் என்கிற அவனுடைய அவதார ரகசியம் நன்கு உணரப்பட வேண்டும்.

'இந்த அவதார ரகசிய ஞானமே நமக்கு மோக்ஷத்தை வாங்கிக் கொடுத்துவிடுமா..? அவதார ரகசிய ஞானம் மோக்ஷத்துக்கு ஓர் உபாயமா?' என்ற கேள்வி வரும். அதை ஆசார்யர்கள் நன்கு




"பகவான் எங்கும்
நிறைந்திருக்கிறான் என்கிறாயே... அவன்
இந்தத் தூணில் இருப்பானா?"

விளக்குகிறார்கள்.

அவதார ரகசிய ஞானம் ஏற்பட்டால், பகவத் சரணாரவிந்தத்திலே திடமான பக்தி ஏற்படும். அந்த பக்தி ஏற்பட்டால் அவன் திருவடியிலே ஆத்ம சமர்ப்பணம் பண்ணும்படியான எண்ணம் வருகிறது. 'இந்த ஆத்மா அவனுடையது' என்று அவனுடைய திருவடியிலேயே சரணாகதி பண்ணுகிறோம். ஆகையினாலே, அவதார ரகசிய ஞானம் ஏற்பட்டால் மோக்ஷம் நமக்குச் சித்தம்.

கிரமம் கிரமமாக பகவானிடத்திலே நம்மைச் சேர்த்து வைக்கிறது அவதார ரகசிய ஞானம். ஆகையினாலே நித்யமே அந்த எம்பெருமானுடைய அவதார ரகசியத்தை ஒரு தடவை மனத்திலே நினைத்துப் பார்க்கவேண்டும்.



"டாக்டர்! எனக்கு இடது கண்ணுலதான் கட்டி இருந்தது. நீங்க வலது கண்ணுல ஆபரேஷன் பண்ணிட்டீங்களே?"

"ஹி...ஹி... எல்லாம் வாஸ்துபடி பார்த்து செஞ்சதுதான். கவலைப்படாதீங்க. சரியாயிடும்..."

- அ.ப.ஜெ. சசிகலா

அப்படிப்பட்ட அவதாரங்கள் எண்ணற்றவை. எத்தனையோ இருந்தாலும், நரசிம்ஹாவதாரத்துக்கு ஈடு, இணையே கிடையாது. இந்த அவதாரம் பரமதயை நிரம்பிய அவதாரம். மற்ற அவதாரங்களை இது ஒரு படி விஞ்சி நிற்கிறது.

ராமாவதாரத்தை எடுத்துக் கொள்ளுங்கள்... முப்பத்து முக்கோடி தேவர்கள் சென்று பிரார்த்தித்தார்கள் பகவானை. அவனும் நான்காகத் தன்னைப் பிரித்துக் கொண்டு ராம-லக்ஷ்மண பரத - சத்ருக்னர்களாக வந்து பிறந்தான்.

கிருஷ்ணாவதாரத்திலோ, எல்லா தேவர்களும் பிரார்த்திக்க, பூமாதா பிரார்த்திக்க, பலராம கிருஷ்ணர்களாக இரண்டு ரூபத்திலே வந்தான்.

நரசிம்ஹ அவதாரத்தில், ஒரு அசுரக் குழந்தை பிரார்த்திக்க, பல ரூபத்தில் - பல வடிவத்தில் - எல்லா இடத்திலேயும் பகவான் நிறைந்து காணப்பட்டான்.

பிற அவதாரங்களில் நான்கு இரண்டு என்று எண்ணிக்கை வரையறைக்குட்பட்டுத் தோன்றினான். ஆனால் நரசிம்ஹாவதாரத்தில் அவன் எங்கும் நிறைந்தான்!

வரதராஜ பஞ்சாசதி என்கிற சுலோகத்திலே, சுவாமி தேசிகன் அந்த காஞ்சிபுரம் தேவாதி ராஜனைப் பார்த்து,

"ஹே கரீசா! வரதராஜா! நீ பண்ணிய ஒரு அவதாரம் இருக்கே... அது எவ்வளவு உயர்ந்த அவதாரம் என்பது தெரிகிறது. ஏனென்றால், 'பகவான் எங்கும் நிறைந்திருக்கிறான் என்கிறாயே... அவன் இந்தத் தூணில் இருப்பானா?' என்று ஹிரண்ய கசிபு கோபப்பட்டபோது அந்தத் தூணிலிருந்தே வெளிப்பட்டாயே!"

அப்படி வெளிப்படுவதற்காக அன்று எங்கும் நிறைந்த எம்பெருமான், இன்றளவும் அப்படியே இருந்து கொண்டிருக்கிறான்!

அவன் வந்தது ஒரு தூணிலிருந்துதான். மீதி சராசரங்கள் அத்தனையும் இன்னும் பிரசவிக்கவேயில்லை. கர்ப்பமாகவே இருக்கின்றன. நரசிம்ஹனை தன்னுள்ளே கொண்டு இருக்கின்றன.

எங்கு தொட்டாலும் நரசிம்ஹமயம் தான். அவன் இல்லாத இடம் என்பது இல்லை. இப்போதுகூட திரைலோக்யமும் நரசிம்ஹனைத் தன்னுள்ளே கொண்டு விளங்குகிறது. நரசிம்ஹன் இல்லாத இடம் என்பது ஒன்று உண்டோ..? ஸர்வ வியாபியாக அவன் இருக்கிறான் என்பது இதன் மூலம் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது.

அந்த சின்னக் குழந்தை எந்த இடத்தைக் காட்டுமோ என்ற சந்தேகத்தில் பரமாத்மா எங்கும் நிறைந்தானே... அந்த தயைக்கு ஈடு - இணை உண்டா...? விசேஷ தயை உடையவன் அவன் என்பதை அவதார காலத்திலே காட்டினான்.

ஹிரண்ய கசிபுவை சம்ஹாரம் பண்ணுகிறபோது கூட எவ்வளவு தயை பாருங்கள் :

உளந்தொட்டு இரணியன்
ஒண்மார்பகலம்

பிளந்திட்ட கைகளால்... என்பதற்கேற்ப அந்த ஹிரண்ய கசிபுவை மடியிலே இறுத்திக்கொண்டு, உடனே அவன் மார்பைப் பிளக்க வேண்டியதுதானே...? அவ்வளவு உக்ர ரூபியாக அவதரித்த எம்பெருமான், மஹா கோபத்தோடு இருக்கிறவன், பரீக்ஷை பண்ணுகிறான்! ஹிரண்ய கசிபுவினுடைய ஹ்ருதயத்தை அப்படித் தொட்டுப் பிடித்துப் பார்த்தானாம்! 'அவன் இத்தனை நாள் நம்மை வைத்து, ஏசினது, தூற்றினது எல்லாம் வாயளவிலா? ஹ்ருதயத்தளவிலா?' என்று தொட்டுப் பார்த்தானாம்! 'வாயளவில் என்றால் விட்டு விடுவோம் இவனை. ஹ்ருதயத்தளவில் என்றால் பிளப்போம்!' என்று பரீக்ஷை பண்ணுகிறான்.

ஹ்ருதயத்தளவும் அவனுக்கு துவேஷம் இருந்ததனால்தான் அவனை முடித்தான் பகவான். இல்லையானால் அவனை விட்டு விட்டிருப்பான் பரமாத்மா!

நிக்ரஹம் பண்ணவேண்டும் என்கிறபோது ஹ்ருதயத்தையும் தொட்டுப் பார்க்கிறவன், அனுக்ரஹம் பண்ண வேண்டுமென்றால் 'வாயளவே' போதும் என்கிறான். 'என் பெயரைச் சொன்னாய், என் ஊரைச் சொன்னாய்' என்று அதற்காகவே பக்தர்களை ஏற்று அனுக்ரஹம் பண்ணுகிறான். தேடித் தேடி காரணங்கள் கண்டுபிடித்து ரக்ஷிக்கிறான்.

ஒருவர் கோயிலுக்கே போய் அறியாதவர். அவர் வீட்டிலே இருக்கிற கன்றுக்குட்டி, தும்பை அறுத்துக் கொண்டு கோயிலுக்குள்ளே போய்விட்டது. அதைப் பிடித்துக் கொண்டுவர இவர் கோயிலுக்குப் போனார். பின் பக்கமாகக் கோயிலுக்குள் நுழைந்த கன்றுக்குட்டி, அங்கேயிருந்து முன் பக்கம் துவஜஸ்தம்பத்திடம் வந்தது. மறுபடியும் பின்னால் போயிற்று. கன்றுக்குட்டியைப் பிடிக்க கூடவே ஓடியவர், நான்கு சுற்று சுற்றிவிட்டார் கோயிலை! கன்றுக்குட்டியைப் பிடித்துக் கொண்டு போய்க் கொட்டகையில் கட்டிவிட்டு மறுபடியும் வாசல் திண்ணையிலே போய் உட்கார்ந்து கொண்டார்!

இவருக்குக் கன்றுக்குட்டி கிடைத்ததே என்ற ஒரு எண்ணம்தானே தவிர 'கோயிலுக்குள் போனோம், பிராகாரத்தைச் சுற்றினோம்' என்ற கவனமெல்லாம் இல்லவே இல்லை. ஆனால், பகவான் இவற்றையெல்லாம் கவனித்து வைத்திருக்கிறான். அவன் பண்ணிய நான்கு பிரதக்ஷணங்களைக் கணக்கில் வைத்துக் கொள்கிறான் அனுக்கிரஹத்தை வாரித் தருவதற்காக!

(வளரும்)



"உறவுக்காரங்க எல்லாரையும் வரவழைக்கச் சொல்றீங்களே, அந்த பேஷண்ட் பிழைக்க மாட்டாரா டாக்டர்?"

"ஊஹூம், அவங்க முன்னாடியாவது கௌரவமா பில் தொகை முழுவதையும் செட்டில் பண்ணிடுவாரான்னு பார்க்கத்தான்."

- ச. தமிழ்ச்செல்வி

கோடம்பாக்கத்தில் கலிவர்!



அனிதா

உலகப் புகழ் பெற்ற குழந்தைகள் கதையான கலிவரின் பயணம், முப்பரிமாண அனிமேஷன் திரைப்படமாக எடுக்கப்பட்டுள்ளது. இருபத்தைந்து கோடி ரூபாய் செலவில் பென்டா மீடியா குழுமத்தின் அங்கமான மாயாஜால் எண்டர்டெயின்மெண்ட் நிறுவனம் தயாரித்துள்ள இந்தப் படத்தை இயக்கி இருப்பவர் அனிதா உதீப். இவர் அமெரிக்காவில் அனிமேஷன் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பம் படித்தவர். ஏற்கெனவே ஒரு ஆங்கிலப் படத்தை இயக்கியவர். பென்டா மீடியா குழுமத்தின் தலைவரான சந்திரசேகரின் மகள். 'கலிவரின் பயணம்' அனிமேஷன் படம் எடுத்த அனுபவம் பற்றிச் சொல்கிறார் அனிதா :

“அமெரிக்காவில்தான் அனிமேஷன் படங்களுக்கு பெரும் வரவேற்பு உள்ளது. உலகின் மற்ற பகுதிகள் அனைத்திலுமாகச் சேர்ந்து ஒரு அனிமேஷன் படம் எவ்வளவு பணம் சம்பாதித்துக் கொடுக்கிறதோ, அதே அளவுக்கு அமெரிக்காவில் மட்டும் பணம் சம்பாதிக்க முடியும் என்றால், அமெரிக்க அனிமேஷன் பட வியாபாரத்தின் பரிமாணத்தை நீங்களே கற்பனை செய்து கொள்ளலாம். எனவேதான் அமெரிக்க ரசிகர்களை மனதில் வைத்துக்கொண்டு உலகப் புகழ்பெற்ற கலிவரின் பயணம் கதையைத் தேர்ந்தெடுத்தோம். அனைவருக்கும் தெரிந்த கதைதான் என்றாலும், அதில் தற்கால குழந்தைகளுக்கு ஏற்ப நகைச்சுவை, சண்டைக் காட்சிகள், பிரிந்த காதலர்கள் ஒன்றுசேர்வது என்று சில மசாலா அம்சங்களையும் சேர்த்திருக்கிறார் எழுத்தாளர் சுஜாதா.

அமெரிக்காவில் உள்ள டிஸ்னி, ட்ரீம் ஒர்க்ஸ் போன்ற உலகின் முன்னணி நிறுவனங்களின் தயாரிப்பு அளவுக்கு இந்தப் படம் இருப்பதாக ஹாலிவுட்காரர்களே படத்தைப் பார்த்துவிட்டுப் பாராட்டினார்கள். 'கலிவரின் பயணம்', ஆஸ்கார் விருதுக்கு அனிமேஷன் படப் பிரிவில் அனுப்பப்பட்டுள்ளது.

அகில உலக அளவில் ரசிகர்களைக் கவர, கலிவரது கப்பல் சுமத்ரா தீவுப் பகுதியில் உடைவது போல கதையை அமைத்து சில சீன, இந்திய, ஜப்பானிய கதாபாத்திரங்களையும் சேர்த்திருக்கிறோம். தற்போது உலகெங்கும் ஆங்கிலத்தில் வெளியாகியுள்ள இந்தப் படம், விரைவில் தமிழிலும், இந்தியிலும் மொழி மாற்றம் செய்யப்பட்டு வெளியிடப்படவுள்ளது.

• எஸ்.சந்திரமௌலி





டாக்டர் ஜெயராணி

குழந்தையின்மைக்கான நவீன சிகிச்சைகள்!

குழந்தையின்மை இன்றைக்குத் தம்பதியரிடையே பெரிய பிரச்னையாக உருவெடுத்து வருகிறது. மருத்துவத்தில் இதற்கான தீர்வு என்ன, நவீன சிகிச்சை முறைகள் என்னென்ன என்பது குறித்து குழந்தையின்மை சிகிச்சை நிபுணரும், சென்னை வடபழனியிலுள்ள ஆகாஷ் குழந்தையின்மை சிகிச்சை மையத்தின் நிர்வாக இயக்குநருமான டாக்டர் ஜெயராணி காமராஜிடம் பேசினோம்...

"திருமணமான மூன்றே மாதங்களில் குழந்தைக்கான எதிர்பார்ப்பு தொடங்கி விடுகிறது. இது இயற்கை. ஆனால் இந்த எதிர்பார்ப்பு பொய்த்துப் போனால்? சந்தேகம்; பயம், குழப்பம், மன உளைச்சல். முடிவில் மூன்றாம் உலகப்போர். இனி குழந்தை பிறக்குமா, பிறக்காதா என்ற கேள்வி தம்பதியரை துரத்தித் துரத்தி அடிக்கிறது. விளைவு? அரச மரத்தில் தொடங்கி ஆஸ்பத்திரி வரை சுற்றிச் சுற்றி வருகிறார்கள்.

குழந்தை பிறக்காதது ஏன் என்பது மருத்துவர்கள் மட்டுமே தெரிந்து கொள்ள வேண்டிய சங்கதி கிடையாது. நாமும் தெரிந்து கொள்ளலாம். குழந்தையின்மை என்பது ஒரு குறைபாடு மட்டுமே. திருமணமான தம்பதியரில் 20 சதவிகிதத்தினர் குழந்தைப் பேறு இல்லாமல் தவிக்கின்றனர். குழந்தை இல்லாததற்கு கணவன், மனைவி அல்லது இருவருமே கூட காரணமாக இருக்கலாம். ஆண்கள் 40 சதவிகிதமும் பெண்கள் 40 சதவிகிதமும் இதற்குக் காரணமாக உள்ளனர். மற்ற காரணங்கள் 20 சதவிகிதம் தான்.

முதலில் பெண்களை எடுத்துக் கொள்வோம். ஒரு பெண் கருத்

தரிக்காமல் போவதற்கு என்னென்ன காரணங்களைச் சொல்லலாம்? ஆரம்ப கட்டமாக கரு உருவாவதில் சில பிரச்னைகள் ஏற்படுகின்றன. ஆணின் உயிரணுவை அந்நிய அணு என்ற நினைத்து அமிலச் சுரப்பி பல சமயங்களில் அழித்து விடுகின்றது. இதனால் கருவுறாமல் போவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

இந்த நிலையைக் கடந்துவிட்டால் மற்றொரு சவால். கருப்பை வாயில் உள்ள சளிச் சுரப்பியில் உயிரணு சிக்கிக் கொள்கிறது. இதையும் தாண்டி முட்டையை அடைந்துவிட்டால், அதைத் துளைத்துச் செல்ல முடியாமல் போகிறது. அதற்குக் காரணம் கருக்குழாயில் ஏற்பட்டுள்ள அடைப்பு. இதையும் அந்த உயிரணு கடந்து செல்ல வேண்டும். அதற்கு பிறகு மேலும் இரண்டு சவால்கள். முட்டை உதிர்ந்து வெளிவராமை மற்றும் கருக்குழாய் அடைப்பு. இத்தனை சவால்களையும் முறியடித்துவிட்டு 'நான் ஜெயித்து விட்டேன்' என்று அந்த உயிரணு அறிவிக்கும்போது உயிர் தோன்றுகிறது.

இந்தச் சவால்களில் ஒன்றில் வெற்றி பெற முடியாவிட்டாலும் பிரச்னைதான். சரி, பிரச்னை என்று எப்படித் தெரிந்து கொள்வது? திருமணம் முடிந்து ஆறு மாதம் வரை கருத்தரிக்காவிட்டால் கவலை வேண்டாம். முப்பது வயதுக்குட்பட்ட பெண்கள் இரண்டு ஆண்டுகள் வரை கருத்தரிப்புக்காகக் காத்திருக்கலாம். முப்பது வயதைக் கடந்தும் கருத்தரிக்காவிட்டால் பரிசோதனைகள் செய்து கொள்ள வேண்டும்.

திருமணமானவுடன் குழந்தைப் பிறப்பை அதிக ஆண்டுகள் தள்ளிப் போடுவது நல்லதல்ல. ஒரு வருஷம் வரை காத்திருக்கலாம். அதற்கு மேல் நீடிப்பது சரியல்ல. ஏன்? பெண்ணின் இனப்பெருக்க உறுப்புகள் முப்பது வயது தொடங்கி நாற்பது வயதுக்கு மேல் முதிர்ச்சியடையத் தொடங்குகின்றன. சில சமயங்களில் நடுத்தர வயதிலேயே மாத விலக்கு முற்றுப் பெறுதல் வந்து கருத்தரிப்பதற்கான ஒரு முற்றுப்புள்ளியை வைத்து விடுகிறது.



ஒரு பெண்ணின் வயதைப் பொறுத்து அவளது கரு முட்டைகளும் பாதிப்படைகின்றன. உடல் ரீதியாக கருப்பை முதிர்ந்துவிடும் நிலை ஏற்படுகிறது. தாய்மையை ஏற்க விரும்பும் பெண்கள் கருத்தரிக்க ஏற்ற வயது இருபது முதல் முப்பது தான். முப்பது முதல் முப்பத்தைந்து வயதுக்கு இடையில் கருத்தரிக்கும் வாய்ப்பு அதற்கு முன்னதாக கருத்தரிப்பதில் இருக்கும் வாய்ப்பைவிட இரு மடங்கு தள்ளிப் போகிறது.

சரி, ஆண்களுக்கு ஏற்படும் குறைபாடுகள் என்னென்ன? உயிரணுக் குறைபாடுகள், விதைப் பையில் உயிரணுக்கள் உருவாகாத நிலை, விந்து நாள அடைப்பு போன்றவை. இதில் எதுவொன்றையும் இன்றைய நவீன மருத்துவ முறையால் குணப்படுத்த முடியும்.

குழந்தையின்மைக்கு நவீன மருத்துவத்தில் நிறைய தீர்வுகள் இருக்கின்றன. விந்தணு உற்பத்தி இல்லாத ஆண்களுக்கு இக்ஸி சிகிச்சை முறை பயன்படுத்தப்படுகிறது. அது என்ன இக்ஸி? விந்துப் பையிலிருந்து ஆணின் ஒரு நல்ல உயிரணுவை எடுத்துப் பெண்ணின் சினை முட்டையுடன் சேர்த்து கருத்தரிக்கச் செய்வதே இக்ஸி. ஒரு மெல்லிய கருவியால் பிடித்துக் கொண்டு கருமுட்டையில் துளையிட்டு அதனுள் ஊசி மூலம் உயிரணுவைச் செலுத்தி குழந்தையை உருவாக்குவது தான் இக்ஸி.

இதற்கு அடுத்தபடியாக லேசர் சிகிச்சை முறை. சோதனைக் குழாய் முயற்சி தோல்வியைத் தழுவும் பட்சத்தில் இந்த சிகிச்சை முறை உதவிக்கு வருகிறது. பொதுவாக சோதனைக் குழாய் முறையின்போது விந்தணுவை சினைமுட்டைக்குள் செலுத்தி கரு உருவாக வழி செய்யப்படும். இவ்வாறு

விந்தணு உள் செலுத்தப்பட்ட சினை முட்டை, பெண்ணின் கர்ப்பப் பைக்குள் வைக்கப்படும். கர்ப்பப் பைக்குள் சினை முட்டை வெடித்து கரு வெளியாகி அங்கேயே பதிந்து வளர்வது இதன் மூலம் சாத்தியமாகும்.

இதில் ஒரு பிரச்னை. சில பெண்களுக்கு இவ்வாறு கர்ப்பப்பைக்குள் வைக்கப்படும் சினைமுட்டை வெடிக்காமல் போய்விடும். இதனால் கரு உருவாகாத சூழல் ஏற்படும். இதற்குக் காரணம் சினை முட்டையின் தடித்த சுவர் அமைப்பு. இதுபோன்றவர்களுக்கு லேசர் மூலம் சினை முட்டையில் சோதனைக் கூடத்திலேயே சிறு கீறல் ஏற்படுத்தப்படும். பின்னர் சினை முட்டை கர்ப்பப் பையில் வைக்கப்படும். லேசர் மூலம் சிறு கீறல் ஏற்படுத்தப்பட்டிருப்பதால் முட்டை வெடிப்பதில் பிரச்னை இருக்காது. இவ்வாறு முட்டையிலிருந்து கரு வெளியாகி கர்ப்பப்பையில் பதிந்து வளர லேசர் உதவுகிறது.

சரி, சோதனைக் குழாய் குழந்தைக்கும் செயற்கை முறை கருவூட்டலுக்கும் வித்தியாசம் இருக்கிறதா? இருக்கிறது. உடலுக்கு வெளியே மனைவியின் கரு முட்டையையும் ஆணின் உயிரணுவையும் இணைத்து கருவுறச் செய்து மீண்டும் கருப்பைக்குள் செலுத்துவது ஐ.வி.எஃப். எனப்படும் சோதனைக் குழாய் முயற்சி. கணவனின் விந்தணுக்கள் நல்ல நிலையில் இருந்தும் கூட, உறவு கொள்வதில் சிக்கல் ஏற்படும் நிலையில் அவரது விந்தணுவைச் சேகரித்து சிரிஞ்சு முறையில் செலுத்தி கருக்குழாயில் கருத்தரிப்பை உருவாக்குவது செயற்கை முறை கருவூட்டல்.

சோதனைக் குழாய் முறையில்கூட தற்போது பல நவீன முறைகள் வந்துவிட்டன. மனைவியின் சினை முட்டையையும் கணவனின் உயிரணுவையும் வெளியே இணைத்து கருவை உருவாக்கிய பிறகு, அதை கருக்குழாய்க்குள் கொண்டு சென்று கருவை வளர்த்தல், கர்ப்பப்பையில் பதிய வைக்க லாப்ராஸ்கோப்பியைப் பயன்படுத்துதல் எனப் பல்வேறு சிகிச்சை முறைகள் நடைமுறையில் வந்துள்ளன.

இயற்கையும் அறிவியலும் ஒன்றிணைந்து விட்டன. இனி அற்புதங்களுக்கு பஞ்சமிருக்காது என்று எதிர்பார்க்கலாம்" என்கிறார் டாக்டர் ஜெயராணி

- மருதன்

ஒன்றல்ல இரண்டல்ல... முப்பது லட்ச ரூபாய். நாளை தருகிறேன் என்று வாங்கிப் போனவர் போனவர்தான். வழியில் பார்த்தால்கூட முகத்தைத் திருப்பிக்கொண்டு போயே போய்விடுகிறார். என்ன செய்வது? கொடுத்தவருக்குத் தெரிந்துவிட்டது. இனி அவ்வளவுதான். விரக்தியின் உச்ச கட்டத்தில் மிராஸிஸ் சொலூஷன்ஸ் அலுவலகத்துக்குள் நுழைகிறார். அவரை வரவேற்றுப் பேசியவர் நெடுமாறன், நிறுவனத்தின் மேலாளர்.

வந்தவரின் மன உளைச்சலுக்கான காரணத்தைக் கேட்டறிந்த நெடுமாறன், அவரிடம் ஒரே ஒரு கேள்வியைத்தான் கேட்டார். "கொடுத்த முப்பது லட்சம் திரும்ப வராததால் நீங்கள் மனம் தளர்ந்திருக்கிறீர்கள். உங்கள் நிலைமை எங்களுக்கு புரிகிறது. சற்று யோசித்துப் பாருங்கள். இதேபோல் நீங்கள் யாருக்காவது கொடுக்காமல் விட்ட பணம் ஏதாவது இருக்கிறதா? உங்களைப் போல் வேறு யாராவது இந்த மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கிறார்களா? அதற்கு நீங்கள் காரணமாக இருந்திருக்கிறீர்களா?"

இந்தச் சமயத்தில் இதை ஏன் கேட்கிறார் என்று விழித்தார் வந்தவர். இருந்தாலும் ஏதோ சொல்கிறாரே என்பதற்காக யோசித்துப் பார்த்திருக்கிறார். உண்மைதான், ஒருமுறை அவரது ஆபீஸ் பியூன் தமக்கு வரவேண்டிய சம்பளப் பணத்தைக் கேட்டிருக்கிறார். ஆனால் பியூன் செய்த தவறொன்றால் கோபமாக இருந்தவர், சம்பளம் இல்லையென்று கூறிவிட்டிருக்கிறார். மிராஸிஸ் சுட்டிக்காட்டிய பிறகு பியூனுக்குச் சம்பளம் கொடுக்காதது தவறென்று உணர்ந்து, மறுநாள் கொடுக்கத் தீர்மானிக்க, அடுத்த நாள் காலையில் அந்த ஆச்சர்யம் நடந்தது. ஆம்... ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியில் அவரது கணக்கில் முப்பது லட்ச ரூபாய் சேர்ந்திருந்தது. வருமா, வராதா என்று ஏங்கித் தவித்த பணம் வந்தே விட்டது.

"மேலோட்டமாகப் பார்க்கும்போது இந்த இரு விஷயங்களும் தொடர்பற்றவையாகத்தான் தெரியும். ஆனால் இதில் தொடர்பு இருக்கிறது" என்கிறார் நெடுமாறன். "ஒரு தனிப்பட்ட ஆளாக இருந்தாலும் சரி, ஒரு நிறுவனமாக இருந்தாலும் சரி... அடிப்படைப் பிரச்னைகள் ஒன்றுதான்; அடிப்படை உணர்ச்சிகள் ஒன்றுதான்; அடிப்படைத் தீர்வுகள் ஒன்றுதான்" என்கிறார். இவர்கள் அளிக்கும் சக்சஸ் ஃபார்முலா ஒன்றும் கம்பசூத்திரம்


• நெடுமாறன்

விலகி நிற்கும் வெற்றி!


அல்ல. ஆனால் அதை நாம்தான் அடிக்கடி மறந்து விடுகிறோம். "நம் அனைவரிடமும் உண்மை இருக்கிறது, சத்தியம் இருக்கிறது. அந்த சத்தியத்தை இனம் கண்டு ஆத்மசக்தியுடன் நடந்து கொண்டால் வெற்றி நிச்சயம்" என்கிறது மிராஸிஸ்.

ஒரு சார்ட்டட் அக்கவுண்டண்டாக தமது வாழ்க்கையைத் தொடங்கிய நெடுமாறன், மிராஸிஸ் மூலம் பலரின் கனவுகளை மெய்ப்பித்து வருகிறார். தொழில் தொடங்க நினைப்பவர்களுக்கும், தொழிலில் நலிவடைந்தவர்களுக்கும் வெற்றிக்கான சூட்சுமங்களை கற்றுத் தந்து, அவர்கள்தம் வாழ்வில் ஒளியேற்றி வருகிறார்.

''நிறுவனங்களுடன் கைகோத்துக் கொண்டு அவர்களது பிரச்னைகளின் மூலவேர்களை இனம் காண்பதுதான் எங்களது முதல் கட்டம். பிறகு அவர்களுடன் அமர்ந்து பேசி, விவாதித்து மூலவேரைக் களைவதற்கான வழிமுறைகளை முன்வைக்கிறோம்.

நலிவடைந்த தொழில்களை லாபகரமாக மாற்றுவது மட்டுமல்ல, நலிவடையக் கூடாது என்று நினைக்கும் தொழில்களை சரியான திசையில் செலுத்துவதும் எங்களுடைய வேலைதான்'' என்கிறார் நெடுமாறன்.

"ஒரு ஸ்தாபனம் சரியான வழியில் நடத்தப்பட வேண்டும் என்றால் என்னென்ன செய்ய வேண்டும், என்னென்ன செய்யக்கூடாது என்று சில திட்டவட்டமான நெறிமுறைகள் உள்ளன. அவற்றைக் கடைப்பிடிக்கத் தவறும்போதுதான் சரிவு தொடங்குகிறது. சரியான நேரத்தில் இந்தச் சரிவைக் கண்டறிந்து விட்டால் வெற்றி கைக்கெட்டும் தூரம்தான். சர்வதேச தரம் வாய்ந்த நிறுவனங்கள் பெற்ற வெற்றிகளின் அனுபவ அறிவைக் கொண்டு எங்களது கொள்கைகளை வகுத்துள்ளதால், எங்களை நாடுபவர்கள் மிக எளிதாக வெற்றியின் ருசியைச் சுவைக்கச் சொல்லிக் கொடுக்கிறோம்'' என்கிறார் நம்பிக்கையுடன்.



"ஒரு தொழில் தொடங்குவதற்குப் பணம் மட்டும் இருந்தால் போதாது. தெளிவான திட்டம் வேண்டும், தெளிவான சிந்தனைகள் வேண்டும். தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ளத் தெரிந்திருக்க வேண்டும். அடிப்படை ஒழுக்கம், அடிப்படை குணநலன்கள் வேண்டும். பண்புகளை மதிக்க வேண்டும்.

தனி மனித ஒழுக்கத்தை, தனிமனித உணர்வுகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு எந்தவொரு வர்த்தகத்தையும் தொடர்ந்து லாபகரமாக நடத்திவிட முடியாது" எனும் நெடுமாறன், ''இந்த உலகத்தில் தோல்வி என்பதே இல்லை. தோல்விக்கு இன்னொரு பெயர் இருக்கிறது. அதுதான் விலகி நிற்கும் வெற்றி. வெற்றி விலகி நிற்கும்போது, அதை இழுத்துப் பிடித்து உங்கள் முன் நிறுத்துவதே எங்கள் நிறுவனத்தின் நோக்கம்" என்கிறார் புன்னகையுடன்.

- கங்கா

சக்சஸ் ஸ்டோரி

கூட்டுறவுக் கடன் ரத்து



ஒரு ஊரில் இரண்டு விவசாயிகள் இருந்தார்கள். இரண்டு பேரும் விவசாயத்துக்காகக் கடன் வாங்கி இருந்தார்கள். ஒருவர் திருப்பிச் செலுத்தவில்லை. "திருப்பிக் கட்டாத கடன் நமக்கு லாபம்" என்பது அவரது எண்ணம். இன்னொருவரோ கடனை ஒழுங்காகத் திருப்பிக் கட்டி விட்டு இன்னும் அதிக கடன் கேட்டார். அதையும் ஒழுங்காகக் கட்டினார். வங்கியின் நம்பிக்கையைப் பெற்றார்.

இருவரையும் ஊர்ப் பிரமுகர் ஒருவரது வீட்டுத் திருமணத்தில் வங்கி மேனேஜர் சந்தித்தார். "இரண்டு பேரும்தான் ஒரே சமயத்தில் வங்கியில் பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்கினீர்கள். வாங்கின கடனைத் திரும்பக் கட்டாமல் புத்திசாலித்தனமாக நடந்துகொண்டதாக உங்களில் ஒருவரும் கடனைத் திருப்பிச் செலுத்தி இன்னமும் கடன் வாங்கி தொழிலை அபிவிருத்தி செய்வதுதான் புத்திசாலித்தனம் என்று மற்றொருவரும் நினைத்தீர்கள். உங்களில் யார் உண்மையான புத்திசாலி?" என்று கேட்டார் மேனேஜர்.

நபார்டு வங்கியின் உழவர் மன்றக் கூட்டங்களில் இந்தக் கதையை கிராம மக்களிடம் சொல்லி 'நீங்கள் சிந்தித்துப் பதில் சொல்லுங்கள். இரண்டு பேரில் யார் புத்திசாலி?" என்று கேட்பார்கள்.

தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறை பல ஆண்டுகளாகவே சீர்கெட்டுக் கிடக்கிறது. இயற்கைச் சீற்றங்கள், வறட்சி போன்ற காரணங்களால் விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போனால், குறுகிய கால விவசாயக் கடன்களை மத்திய காலக் கடன்களாகவும், மத்திய காலக் கடன்களை நீண்டகாலக் கடன்களாகவும் மாற்றி அமைத்த சம்பவங்கள் பலமுறை நாடெங்கும் நடந்துள்ளன. மேலும் கடன்களுக்கான வட்டி, அபராத வட்டி ஆகியவற்றை தமிழ்நாட்டின் முந்தைய ஆட்சியாளர்கள் தள்ளுபடி செய்துள்ளனர். (வி.பி.சிங் ஆட்சியின்போது நாடெங்கும் அதிகபட்சமாக பத்தாயிரம் ரூபாய் வரை விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டன). ஆனால், வரலாறு காணாத வகையில் இப்போதுதான் அசல் வட்டி, அபராத வட்டி என்று ஒட்டுமொத்த தள்ளுபடி மேளா நடந்துள்ளது.

இதற்கு முன்னால் கருணாநிதி 96-ல் முதலமைச்சராக இருந்தபோது, கடன்களுக்கு அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ததுடன் கடனை ஒழுங்காகக் கட்டிய விவசாயிகளுக்கு 7 சதவீதம் வட்டியில் சலுகை அளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கடன் வாங்கிவிட்டு திருப்பிச் செலுத்தாதவர்களுக்குச் சலுகை, ஒழுங்காகக் கட்டியவர்களுக்கு சலுகை எதுவுமில்லை என்றால், இனிமேல் வாங்கிய கடன்களை யார் ஒழுங்காகத் திருப்பிச் செலுத்துவார்கள்?

இலவச மின்சாரம் அளிக்க ஆரம்பித்துவிட்டு அதை ரத்து செய்ய முடியாமல் தவிப்பது போல, இனிமேல் தமிழ்நாட்டில் ஆட்சியாளர்களும், ஆட்சிக்கு வரத் துடிப்பவர்களும் கடன் தள்ளுபடியை அறிவிக்கும் போக்கு அதிகரிக்குமே ஒழிய, அதிலிருந்து யாராலும் இனி பின் வாங்க முடியாது என்பதுதான் யதார்த்தம்.

இது ஒருபக்கம் என்றால், மக்கள் முன்னிலையில் ஒரு கையெழுத்தைப் போட்டு ஆறாயிரத்து எண்ணூறு கோடி விவசாயக் கடனை ரத்து செய்துவிட்டார் முதல்வர். ஆனால், திடீரென்று இத்தனை பெரும் தொகையைப் புரட்டி கூட்டுறவு அமைப்புகளுக்கு உடனடியாக வழங்குவது என்பது நடவாத காரியம். தவணைகளில் வழங்கப்படலாம். ஆனால் மேட்டூர் அணை திறந்து, பருவம்

ஆரம்பித்துவிட்டால், விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கியாக வேண்டும். அதற்கு கூட்டுறவுக் கடன் கிடைக்காவிட்டால், விவசாயிகள் நிலைமை என்னவாகும்? தனியாரிடமிருந்து அதிக வட்டிக்குக் கடன் வாங்கிப் பயிர் செய்து, வாங்கிய கடனுக்கு வட்டி கட்டிமாளாமல், ஆந்திரா மாதிரி விவசாயிகள் தற்கொலைகள் நிகழ ஆரம்பிக்கும்.

இலவசங்கள் தருவதனால், அரசாங்கத்துக்கு நிதிச் சுமை அதிகமாகும் என்பது உண்மைதான். ஆனால், கடன் ரத்து நடவடிக்கையால், இனி வாங்கிய கடனை திருப்பித் தர வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் போகும் அபாயமேற்படும். இது கூட்டுறவு என்ற தத்துவத்துக்கே சாவுமணியாக அமைந்துவிடும்.

தேர்தல் பிரசாரத்தின்போது கருணாநிதி கடன் ரத்து என்று சொன்னவுடன் வைகோ அதற்கு நபார்டு வங்கி ஒப்புதல் அளிக்குமா என்று கேள்வி எழுப்பினார். ஆனால் ஜெயலலிதாவோ, நபார்டு வங்கி அனுமதித்தாலும், அனுமதிக்காவிட்டாலும் கடன் ரத்து என்று அதிரடி அறிவிப்பு செய்து விட்டார். இதுகுறித்து ஓய்வு பெற்ற நபார்டு உயர் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, "கொள்கை அளவில் கடன் ரத்துகளுக்கு நபார்டு ஒருபோதும் சம்மதிக்காது. அப்படி ரத்து செய்தால், அதற்குண்டான மொத்த நிதியையும் அரசாங்கம் கூட்டுறவு அமைப்புகளுக்கு ஈடுசெய்ய வேண்டும். இப்போதுள்ள சூழ்நிலையில் அது சாத்தியமில்லை என்று தெரிகிறது. ஆகவே கூட்டுறவு அமைப்புகள், கடன் ரத்து காரணமாக ஏற்பட்டுள்ள நஷ்டத்தைத் தங்களுடைய நிதி நிலை அறிக்கையில் அரசாங்கத்திடமிருந்து வர வேண்டியதாக கணக்கில் காட்டுவார்கள். இது வெறும் புக் அட்ஜெஸ்ட்மென்ட்தான். அதனை நபார்டு ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது. அரசின் கடன் ரத்து நடவடிக்கையினைக் கண்டித்து நபார்டு தமிழ்நாட்டின் கூட்டுறவு அமைப்புகளுக்கும், தமிழ்நாட்டு அரசுக்கும் வழங்கி வருகிற அனைத்து ரகமான நிதி உதவிகளையும் நிறுத்தும் அளவுக்கு நபார்டுக்கு அதிகாரம் உண்டு. ஆனால், மத்திய கூட்டணி அரசிலும், மாநிலத்திலும் தி.மு.க இடம் பெற்றிருக்கும் இன்றைய சூழ்நிலையில் அப்படி நடக்குமா என்பதற்கு நான் பதில் சொல்ல முடியாது" என்றார்.

- நமது நிருபர்

சரியா... தவறா?



21

யார் அந்த முகமூடி?



வெடிச் சத்தம் கேட்டதும் மக்கள் ஆரவாரமாகக் கைதட்டினார்கள். நாடகம் தொடங்கி விட்டது என்று அர்த்தம். நாங்கள் உடையப்பத் தேவரிடம் விடை பெற்றுக்கொண்டு நாடக ஸ்டேஜுக்கு முன்னால் போய் உட்கார்ந்தோம்.

பபூன் நடிகர் வேகமாக உள்ளே வந்து,

'வாங்க வாங்க உட்காருங்க
வந்த காலுல நிக்காதீங்க'

என்று பாடி கேலியும், கிண்டலுமாக நாடகத்தைத் தொடங்கி வைத்தார். நாடகத்தின் உச்சகட்ட காட்சியில் தன் நாட்டை இழந்து, மனைவி மக்களைப் பிரிந்து சுடுகாட்டில் பிணம் எரிக்கின்ற வேலையைப் பார்க்கும் அரிச்சந்திரனாக வந்த உடையப்பா, காளிதேவியிடத்தில் ஒரு உருக்கமான வசனத்தைப் பேசினார்.

'ஏ காளி! உலக மாதா! நீ என்னுடைய கனவில் அடிக்கடி வந்து தரிசனம் தருபவள். எத்தனையோ முறை என்னிடத்தில் பேசியிருக்கிறாய். ஆனால் ஒரு நாள் கூட சொல்லவில்லையே அம்மா! 'சக்கரவர்த்தியாகச் செங்கோல் பிடித்த நீ, பிணம் எரிக்கும் சுடுகோலையும் பிடிப்பாய்' என்று. சத்தியத்துக்கு நேர்ந்த கதி இதுதானா?' என்று அவர் கலங்கிக் கண்ணீர்விட்டு நடித்தபோது, பார்த்துக் கொண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களும், இந்தக் காலத்தில் மெகா சீரியல் பார்க்கும் வீட்டுப் பெண்கள் போல மாலை மாலையாகக் கண்ணீர் விட்டார்கள்.

பின்னர் சோதனைகள் முடிந்து, சிவபெருமான் தோன்றி அரிச்சந்திரனுக்கு ராஜ்யத்தை மீட்டுக் கொடுத்தபோது விடிந்து விட்டது. நாங்கள் ஏறிவந்த டிராக்டர் தேங்காயோடு வர, அதற்கு மேல் நாங்கள் ஏறி உட்கார்ந்துகொண்டு அலுங்காமல் குலுங்காமல் வீடு வந்து சேர்ந்தோம்.

எங்களின் நாடகத்தில் யார் யார் நடிக்க வேண்டும், ரிகர்சலை (ஒத்திகையை) எங்கே வைத்துக்கொள்ள வேண்டும், நாடக மேடை எங்கு போடப்பட வேண்டும் என்று திட்டங்கள் போட்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினோம்.

அந்த நாடகம் சாதாரண சமூக நாடகமாதலால் அதற்கான ஒப்பனையைத் தானே செய்வதாக முத்துராக்கு வாக்குக் கொடுத்தார். நாடகத்தில் பெண்கள் இருந்தால் வீணான சிக்கலும், கிசுகிசுக்களும் வருமென்று நாங்களே யூகித்து ஆண்களே பெண் வேடம் போடுவதாகத் தீர்மானம் செய்தோம்.

நாங்கள் போடுகிற நாடகத்துக்கு நான்தான் கதை, வசனம் என்பது

முடிவான பிறகுதான் எனக்குச் சோதனை ஆரம்பமாயிற்று. நான் சிறுவயதில் எழுதிய மர்மக்கதை ஒன்று ஞாபகத்துக்கு வந்தது. அதில் ஒரு முகமூடி வருவான். பல திருட்டுகளைச் செய்வான். கடைசியில் அந்த முகமூடியைக் கிழித்து அவன் யாரென்று பார்த்தபோது.... தொடரும் என்று போட்டிருந்தேன். இன்றுவரை அந்த முகமூடிக்குள் இருந்தவன் யாரென்று சத்தியமாக எனக்குத் தெரியாது. இப்போது கூட என்னைச் சந்திக்கும் பழைய நண்பர்கள் விடாமல் 'அந்த முகமூடி யார்?' என்று கேட்பார்கள்.

நான் மர்மமாய்ச் சிரிப்பேன் (தெரிந்தால்தானே?). பிரபல கதாசிரியர்கள் தாங்கள் எழுதுவதற்கு முன் என்னென்ன செய்வார்கள் என்பதையெல்லாம் படித்துப் பார்த்து அது மாதிரியெல்லாம் செய்யத் தொடங்கினேன்.

இரவு 12 மணிக்கு மேல் எழுதத் தொடங்குவது... காலார நடப்பது... (அப்படியென்றால் என்ன)... வறுத்த




குடி. ஞானசம்பந்தன்

மசாலாக் கடலை வாங்கிக் கொறிப்பது... புல்வெளியில் பனித்துளி காலில்பட நடந்து சிலிர்ப்பது...

எல்லாம் செய்து பார்த்தேன்... ஜலதோஷம் பிடித்து வீட்டில் பலரிடம் திட்டு வாங்கியதுதான் மிச்சம். கதை மட்டும் கிடைக்கவில்லை.

ஆனால் விசாரிக்கிற நண்பர்கள் இடத்திலெல்லாம் 'மூணுகாட்சி எழுதியாச்சு', 'க்ளைமாக்ஸ் காட்சிதான் மிச்சம்', 'அடுத்த வாரம் முடிஞ்சுபோகும்' என்றெல்லாம் கதைவிட்டுக் கொண்டிருந்தேன்.

அதற்குள் சினிமாமணி ஏதோ ஒரு பழைய நாடகத்தைக் கொண்டுவந்து கொடுக்க, அதைப் பல்வேறு வகைகளில் 'உல்டா' பண்ணி, அந்த நாடகத்தை எழுதியவரே பார்த்தால் கூடப் புதிதாகத் தெரியும்படி இரவு பகலாக எழுதி 'திருடாத திருடர்கள்' என்ற பெயரையும் வைத்து முடித்தேன்.



"என்னதான் பேரப்பிள்ளையை இங்கிலீஷ் ஸ்கூல்ல சேர்த்துப் படிக்க வெச்சாலும் இப்படியா!"
"என்ன?"
"குழந்தைக்கு அ, ஆ, இ, ஈ தெரியுமான்னு கேட்டா, 'எது? தமிழ் ஏ பி சீ டி'யான்னு கேட்கறா?"
- பம்மல் நாகராஜன்

நாடக ரிகர்சலை எங்கள் தெருவில் பலகாலமாகப் பூட்டிக் கிடந்த ஒரு வீட்டில் வைத்துக்கொண்டோம். இரவு ஒன்பது மணிக்கு மேல் அந்த வீட்டில் பேய் ஒன்று வந்து போகும் என்பது எங்கள் தெருவுக்கே தெரியும். நாங்கள் அதுபற்றிக் கவலைப்படவில்லை. அப்படியே 'அது' வந்தால் அதற்கும் ஒரு பாத்திரம் கொடுத்து நடிக்க வைக்க முடிவு செய்தோம்.

நாடகத்தில் நடிக்கும் நடிகர்களான என் நண்பர்கள், இயக்குநர் சினிமாமணி, ஒப்பனையாளர் முத்துராக்கு அனைவரும் வந்து அமர, நான் நாடகக் கதை வசனத்தை வாசிக்கத் தொடங்கினேன்.

"தம்பி மொத்தம் எத்தனை பாட்டு இதுல?" என்றார் முத்துராக்கு.

"ஒரு பாட்டுதான். அது கடவுள் வாழ்த்து... பேசாம இருங்க... டேய் நீ படிடா" என்றான் மணி.

கதைச் சுருக்கம் இதுதான்... ஒரு அரசியல்வாதியின் அல்லது மந்திரியின் மகளை நான்கு திருடர்கள் கடத்திச் செல்கிறார்கள். அந்த மகளும் திருடர்களோடு சேர்ந்து தன் அப்பாவை எப்படிப் பயமுறுத்திப் பணம் கேட்க வேண்டும் என்று சொல்லித் தருகிறாள். ஆனால் அரசியல்வாதியோ, அவர்களை வரவழைத்து, திருடி, ஆளைக் கடத்திப் பணம் பிடுங்குவதால் தொடர்ந்து பணம் கிடைக்காது... என்று விளக்கி, தம் கட்சியில் அந்தத் திருடர்களைச் சேர்த்து தேர்தலில் ஜெயிக்க வைத்து மந்திரியாக்குகிறார்... அவர்களும் நாடும் சுபிட்சமாக இருக்கிறார்கள். இதுதான் நாடகக் கதை


(குறிப்பு: இந்தக் கதையைப் படித்தவர்கள் யாராவது இதைச் சினிமா எடுப்பதற்காக முயற்சி செய்தால் அதில் நானும் நடிப்பேன்.)

நாடக ஒத்திகை தொடங்கிய முதல் நாள், எங்கள் சக நடிகன் சிங்கமுத்துவின் அப்பத்தா உள்ளே ஓடிவந்து அவனை அடிஅடியென்று அடித்து, எங்களை எல்லாம் நாசமாய்ப் போகச் சொல்லி ஆசிர்வாதம் செய்துவிட்டு அவனை இழுத்துக்கொண்டு போனார்.

மறுநாள் சிங்கமுத்து பாத்திரத்தைத் தங்கமுத்து நடித்தான். நாடக ஒத்திகை சூடுபிடிக்கத் தொடங்கியது.

(ரீல் சுற்றும்)

படம் : **புதூர் சரவணன்**



சிவாய நம :

ஸ்ரீ ஸர்வாங்கஸுந்தரீ உடனுறை ஸ்ரீ ஸற்குணேச்வரஸ்வாமி திருக்கோயில்

(ஸற்குணேச்வரபுரம், கருவேலி - 609 501)
திருவாரூர் மாவட்டம். போன் : 04366-273900

லக்ஷதீபப் பெருவிழா

10.06.2006 முதல் **14.06.2006** வரை

அன்புடையீர்!

அடியவர்கள்பால் கொண்ட கருணையால் கயிலை துறந்து கருவிலிக் குடிகொண்டு அருள்பாலித்து வருகிற **இறைவனுக்கும், இறைவிக்கும் ராஜகோபுரங்கள் மற்றும் ஸ்ரீ சுப்ரமண்யர், கஜலக்ஷ்மி முதலிய ஸந்நிதிகள் திருப்பணி** வைகாசி மாதம் 31-ஆம் நாள் (14.06.2006) புதன் கிழமை அன்று அதிகாலையில் 5 மணியிலிருந்து 6.30க்குள் துவங்கப்பட இருக்கிறது. இது தொடர்பாக **10.06.2006** சனிக்கிழமை அனுஷ நட்சத்திரமும், பௌர்ணமி திதியும் கூடிய நன்நாளில் துவங்கி **14.06.2006** புதன் கிழமை முடிய ஐந்து தினங்கள் திருக்கோயில் வளாகத்தில் **லக்ஷதீபம்** ஏற்றி வழிபாடு நடக்கிறது. இன்று நாட்டில் நிலவி வரும் அமைதியின்மை, இயற்கையின் சீற்றங்கள் போன்ற பல தீமைகளிலிருந்து மக்களைக் காக்கும் பொருட்டு **லக்ஷதீபப்** பெருவிழா நடைபெறுகிறது. இறைவனுக்குரிய வழிபாடுகளில் தீபம் ஏற்றி வழிபடுதல் முக்கியமானதும், முதன்மையானதும் ஆகும்.

தனி நபரால் நடத்தப்பட முடியாத **லக்ஷதீபம்** போன்ற பெருவிழாக்களை பலர் இணைந்து நடத்தும்போது, லக்ஷதீபம் ஏற்றுவதன் பயனை ஒவ்வொருவரும் அடைவர். **10.06.2006** முதல் **14.06.2006** வரையில் தினசரி மாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி முடிய **லக்ஷதீப வழிபாடு** திருக்கோயில் வளாகத்தில் நடைபெறும். அன்பர்கள் அனைவரும் குடும்பத்துடனும், நண்பர்களுடனும் இயன்ற நாட்களில் கலந்து கொண்டு இறையருளுக்குப் பாத்திரர்களாகும்படிக் கேட்டுக் கொள்கிறோம். என்றும் இறைபணியில்,

Dr.V.கிருஷ்ணமூர்த்தி
பரம்பரை அறங்காவலர்

பொன்.சிவசங்கரன் M.A.
நிர்வாக அதிகாரி

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா
மற்றும் **கிராமவாசிகள்**

பி.கு. : 100 தீபங்கள் ஏற்ற ஆகும் செலவு (அன்னதானம் உட்பட) ரூபாய் 100/-

---

குழந்தை பாக்கியம் இன்மை, வெள்ளைப்படுதல், மாதவிடாய் கோளாறு, மலட்டுத் தன்மை போன்றவைகளுக்கு தெய்வீக மூலிகை மருத்துவம்

பத்தியம் இல்லை! **பக்கவிளைவு இல்லை!**



கருத்தரிக்காமைக்கு காரணம்!

ரசாயணப் பொருட்கள் கலந்த உணவை உண்பதாலும், வீரியமுள்ள ரசாயண கலவை மாத்திரைகளாலும், மாமிச உணவுகளாலும் கர்ப்பப்பையில் புண் ஏற்பட்டு, அது சுருங்கி விரியும் தன்மை இழந்து, அதனால், முறையான மாதவிடாய் இல்லாமல் வெள்ளைப்படுதலாலும், கருத்தரிக்கும் வாய்ப்பு கடினமாகி மலட்டுத் தன்மை ஏற்படுகிறது. மேலும் கர்ப்பப்பை குழாய் அமைப்பு வளர்ச்சியின்மை, முட்டையகத்தில் (ஓவரி) குறைபாடு ஆகியன கருத்தரிக்காமைக்கு காரணம் ஆகும். இக்குறைபாடுகளையெல்லாம் தெய்வீக மூலிகை மருத்துவம் மூலமாக குணப்படுத்தலாம்.

Dr. M.குருபரன் & Dr. M.சபாபதி S/o Dr. M.மாணிக்கவாசகம்

CKM தெய்வீக மூலிகை மையம்

தலைமை முகவரி : PB No.30, 1, திருநாத முதலி நகர் (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர், வேலூர்-635 601
✆ 04179-222769 செல் : 94441 61670, 94444 07638

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை-600 010.
✆ 044-26424285, 26427638, செல் : 94440 01447

டாக்டரை முகாமில் நேரில் சந்திக்க ஒவ்வொரு மாதமும் 2ந் தேதி - வேலூர், காஞ்சிபுரம், 4ந் தேதி - கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, 7, 8ந் தேதி - மும்பை, 9ந் தேதி - பெங்களூர், 12ந் தேதி - சேலம், ஈரோடு, திருப்பூர், 13ந் தேதி - கோவை, உடுமலைபேட்டை, 14ந் தேதி - மதுரை, திருநெல்வேலி, 15ந் தேதி - விருதுநகர், தஞ்சாவூர், 16ந் தேதி - திருச்சி, கரூர், 20, 21ந் தேதி - புதுடெல்லி, 26ந் தேதி - சிதம்பரம்.

சவாலே சமாளி

அரசின் முக்கிய துறைகளில் ஒன்று மீன்வளம். 'என்ன செஞ்சிட்டுப் போனீங்க?'' என்றால், படபடவென பொரிய ஆரம்பித்தார் கடந்த அ.தி.மு.க ஆட்சியில் மீன் வளத் துறை அமைச்சராக இருந்த எம்.ராதாகிருஷ்ணன்.

“அம்மா ஆட்சியில் மீனவர் துயர் துடைக்க ஏராளமான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் மாதம் 75 ரூபாய் வீதம், 'சேமிப்பு-நிவாரணம்' திட்டப்படி எட்டு மாதம் வசூல் செய்து வருடத்தில் இரண்டு மாத காலம் தொழில் இல்லாதபோது அன்றாட வாழ்க்கைச் செலவுகளுக்குக் கொடுத்து வந்தோம். கடற்கரையோர மீனவர்களுக்கு வருடத்துக்கு 3,500 வீடுகளும் உள்நாட்டு மீனவர்களுக்கு 500 வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டன. மீனவர்களுக்கு முக்கியத் தேவை டீஸல். விற்பனை வரி இல்லாமல் வருடத்துக்கு 10,000 லிட்டர் டீஸல் மீனவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இதனால் ஒரு மீனவருக்கு ரூபாய் 50,000 வரை செலவு மிச்சம். இவையெல்லாவற்றையும்விட சுனாமி மீனவர்களைத் தாக்கியபோது நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை விரைவாக மேற்கொண்டோம். தொழில் செய்யும்போது விபத்து போன்றவற்றால் மரணமடையும் மீனவருக்கு காப்பீடு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டன. ஆனால் புதிய மீன்வளத் துறை அமைச்சர் கே.பி.பி.சாமி சேது சமுத்திர திட்டத்தால் பாதிக்கப்படப் போகும் ஆயிரக்கணக்கான மீனவர்களுக்கு எப்படி மறுவாழ்வு தரப் போகிறார், தமிழக அரசு என்ன செய்யப் போகிறது?'' என்று சவால் விட்டார் ராதாகிருஷ்ணன்.

தி.மு.க. அரசில் மீன்வளத்துறை அமைச்சராகப் பொறுப்போற்றிருக்கும் கே.பி.பி.சாமி, சென்னை திருவொற்றியூர்க்காரர். சவாலைச் சமாளிப்பாரா? அவரிடமே கேட்டோம்.

“அ.தி.மு.க. அரசு சுனாமிக்குப் பின் முறையான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பதுதான் உண்மை. நடந்திருக்கும் சிறிதளவு நிவாரணம் மற்றும் புனரமைப்பு பணிகள்கூட தொண்டு நிறுவனங்கள் செய்ததுதான். நாங்கள் முழுமையான மறுவாழ்வுத் திட்டங்களை மீனவர்களுக்குச் செயல்படுத்தப் போகிறோம். அதேபோல் ராயபுரத்தைத் தாண்டி, திருவொற்றியூர் - எண்ணூர் நடுவில் மற்றொரு மீன்பிடித் துறைமுகம் வர இருக்கிறது. பழவேற்காடு பகுதியில் மீனவர் குப்ப மக்களின் வசதிக்காக மேம்பாலம் கட்டப் போகிறோம். இது அவர்களது நீண்டநாள் கோரிக்கை.

டீஸல் பயன்படுத்தும் மீனவர்களுக்கு மானியம் உண்டு. அந்த மான்யத்தை வாங்குவதில் உள்ள சிரமங்களைக் குறைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மீனவர் வீடு கட்டும் திட்டத்தின்படி பட்டா நிலங்களில்தான் வீடு கட்டிக் கொடுக்க முடியும். இந்த நிபந்தனை காரணமாகச் சென்ற ஆட்சியில் திட்டமிட்டபடி வீடுகள் கட்டித் தரவில்லை என்பதுதான்

உண்மை. எனவே, புறம்போக்கு மற்றும் அரசு நிலங்களில் கூட வீடுகள் கட்டிக் கொடுக்கலாம் என்று விதிகளைத் தளர்த்தியிருக்கிறோம். மீனவர் காப்பீடு திட்டத்துக்கு அவர்களுக்கான பிரீமியத் தொகையை அரசே கட்டலாமா என்றும் யோசித்துக் கொண்டிருக்கிறோம். சேது சமுத்திர திட்டத்தால் மீன் வளம் பாதிக்காது என்று சுற்றுச்சூழல் அறிக்கைகள் மிகவும் உறுதியாகச் சொல்கின்றன. எனவே ராமேஸ்வரம் பகுதியில் தொழில் நடத்தும்



* கே.பி.பி. சாமி

மறுவாழ்வு தருமா தமிழக அரசு?


* ராதாகிருஷ்ணன்



மீனவர்கள் கவலைப்படத் தேவையில்லை. மேலும் திட்டம் செயல்படத் துவங்கும்போது ஏராளமான வேலை வாய்ப்புகள் உருவாகும். அவற்றை மீனவர் குடும்பங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கூடிய விரைவில் மீனவர் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் பல நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட இருக்கின்றன'' என்று மீசை முறுக்காத குறையாகச் சொல்கிறார் சாமி. ம்... பார்ப்போம்.

- கௌசி

படங்கள் : ராஜன்



அன்று மீண்டும் அந்தக் கட்டை விரல் உயர்ந்து லிஃப்ட் கேட்டது. சிறிய புத்தக மூட்டையுடன் பதினான்கு வயது மதிக்கத்தக்க சிறுவன். பள்ளத்தைத் தவிர்த்து பக்கவாட்டில் திருப்பி நிறுத்தினேன். 'போலாம் சார்' என்று அவன் கூறியவுடன் கிளம்பினேன். அவனுக்குத்தான் எத்தனை உரிமை! இருட்டிலும் எப்படியோ என் பைக்கைச் சரியாய் அடையாளம் கண்டுகொண்டு கைகாட்டி நிறுத்தி உரிமையாய் ஏறிக்கொண்டான். வண்டி நின்றவுடன் இறங்கி 'தேங்க்ஸ் சார்' என்று சொல்லிவிட்டு திரும்பிப் பார்க்காமல் விரைந்தான்.

இந்தக்காலப் பிள்ளைகளுக்குத்தான் எத்தனை சாமர்த்தியம். வாயுள்ள பிள்ளை பிழைக்கும் என்பது சரிதான். முதல்முறை இரக்கப்பட்டு அவனை ஏற்றிக்கொண்டேன்.

முதல்நாள் அவன் ஏறிய அன்று "எங்கே போற தம்பி?" என்று வினவினேன்.

"டியூஷன் போய்ட்டு வரேன் சார். மேலூர் பாலத்துக்கிட்ட இறங்கிக்கறேன்" என்றபடி என் உத்தரவின்றி ஏறி உட்கார்ந்தான்.

"உன் வீட்டுக்குப் பக்கத்துல டியூஷன் இல்லையா?"

"இல்ல சார். எங்க மாஸ்டர் வீடு இங்க இருக்கு - ஸ்கூல் பக்கத்துல. ரைட்... போலாம் சார்."

போனேன். மேற்கொண்டு ஏதும் பேசவில்லை. ஏனென்றால் மறுவாரம் மறுபடி லிஃப்ட் கேட்பான் என்று அப்போது தெரியாது.

இரண்டாம் முறை அவன் ஏறி இறங்கியதும், ஏனோ எனக்கு இத்தகைய 'ஓவர் ஸ்மார்ட்' இளைஞர்கள் மேல் ஒரு சிறு வெறுப்பு உண்டானது. அவர்களது சாமர்த்தியத்தை உபயோகித்து சோம்பேறிகளாய் ஆகிவிடுகிறார்களோ என்று ஓர் அச்சம் வந்தது.

நான் சிறுவனாய் இருந்த காலத்தை எண்ணிப் பார்த்தேன். இவனைப் போலத்தான், சுமார் இரண்டு கிலோமீட்டர் நடந்தே பள்ளிக்குப் போய் வரவேண்டும்.

அவனுக்குத் தேவை அறிவுரை என்பது விளங்கியது. அந்தப் பதினான்கு அல்லது பதினைந்து வயது சிறுவனுக்குச் அடிக்கடி லிஃப்ட் கொடுப்பதில் எனக்கு சிரமமோ சங்கடமோ ஏதுமில்லை. சொல்லப்போனால் அந்தக் கும்மிருட்டில் என் வண்டி பஞ்சர் ஆனால் கூட, உதவிக்கு ஆள் உடனிருப்பது நல்லதுதான். ஆனால், அவர்களது எதிர்காலத்தில் இப்படி மற்றவரது இரக்கத்தை உரிமையாய் எதிர்பார்க்கும் வழக்கம் பழகிப் போய் விட்டால் என்ன செய்வது?

ஆனால், நான் அதற்குப் பல மாதம் காத்திருக்க வேண்டியிருந்தது.

திடீரென்று நான் எதிர்பாராத ஒரு நாள் இருட்டுக்கு மத்தியில் கட்டைவிரல் ஒன்று உயர்ந்ததும் இடப்பக்கம் ஒதுங்கி வண்டியை நிறுத்தினேன். கும்மிருட்டிலும் அந்தச் சிறுவனின் உருவம் உடனே எனக்குப் பரிச்சயமாகிப் பழைமையைப் புதுப்பித்தது.



இரவல் சவாரி

வி.மீனாட்சி சுந்தரம்

"உட்கார்... என்ன ரொம்ப நாளா காணோம்?"

"நீங்க கடைசியா எனக்கு லிஃப்ட் கொடுத்தீங்களே, ஞாபகம் இருக்கா சார்? சுமார் ஆறு மாசத்துக்கு முன்னால...?"

"......" தலையாட்டினேன்.

"அன்னிக்கு மட்டும் நீங்க நிறுத்தாம போயிருந்தா, எங்கம்மா அன்னைக்கே போய்ச் சேர்ந்திருப்பாங்க சார்."

"என்ன ஆச்சு?"

"நான் போகும்போதே அம்மா சீரியஸா இருந்தாங்க. எனக்குக் கைகால் ஓடல. எங்க வீட்டுல நானும் அம்மாவும் மட்டும்தான். உடனே ஆட்டோவுல தூக்கிப்போட்டு ஜி.எச்.சுக்குக் கூட்டிக்கிட்டுப் போனேன். 'ஏம்பா, இப்படி லாஸ்ட் மினிட்லயா கூட்டிக்கிட்டு வரது? ஒரு பத்து நிமிஷம் தாமதமா வந்திருந்தா, எங்களால ஒண்ணும் பண்ணியிருக்க முடியாது. நீ பண்ணின புண்ணியம்... உங்கம்மா பிழைச்சுக்கிட்டாங்க'ன்னு டாக்டர் சொன்னாரு."

"என்ன பிரச்னை?"

"அம்மா ஹார்ட் பேஷண்ட் சார்... அடிக்கடி நெஞ்சுவலி வரும்"

என்னை அறியாமல் செய்திருந்த உபகாரத்தில் உச்சி குளிர்ந்து போனேன்.

"அதே வீடுதானே...? உட்கார்... பேசிக்கிட்டே போகலாம்."

"வேணாம் சார். நான் நடந்தே போறேன். எனக்கு நடக்கறதுன்னா ரொம்பப் பிடிக்கும். சில்லுன்னு இந்த ஈரக் காத்தும்... நொய்யின்னு வண்டுகளோட ரீங்காரமும் .... நான் நடந்தே போயிடுவேன். ரொம்ப நன்றி சார்" இருகரம் கூப்பினான். என் கண்கள் கலங்கியிருந்தது நல்ல வேளையாய் இருட்டில் அவனுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

"இத்தனை நாள் நீ வராம என்ன பண்ணினே? உன்னைப் பார்க்கலியே?"

"அம்மாவுக்கு அதுமாதிரி ஆனதுல இருந்து எனக்குப் பயம் புடிச்சுடுச்சு சார். நான் டியூசனுக்கு வர்ற நேரத்துல ஏதாச்சும் ஆயிட்டா என்ன பண்றதுன்னு மறுநாள்ல இருந்து டியூசன் போறதையே நிறுத்திட்டேன்."

"அம்மா திட்டல?"

"டியூஷன் மாஸ்டர் இனிமே டியூசன் எடுக்கப் போறதில்லையாம்னு அம்மா கிட்ட பொய் சொல்லிட்டேன்..."

"பின்னே இன்னிக்கு எதுக்கு இங்கே வந்திருக்கே?"

"உங்களுக்கு 'தேங்க்ஸ்' சொல்லத்தான். அன்னிக்கு நீங்க எனக்கு லிஃப்ட் மட்டும் தரலே சார். அதிகமா ஆறு மாசத்துக்கு என் அம்மாவைத் தந்தீங்க... போன வாரம் அம்மா போய்ச் சேர்ந்துட்டாங்க. வரேன் சார்...."

என் பதிலுக்குக் காத்திராமல் அவன் நகர்ந்தபோது திடீரென்று பாரமாகிப் போன என் இதயம் என்னை நகர விடாமல் நங்கூரமாக்கியிருந்தது. ○



தலைநகரம்

இதுவரைக்கும் பின்னாடி இருந்து பல ஹீரோக்கள டைரக்ட் பண்ண சுந்தர்.சி, தானே ஹீரோவாயிட்டாரு 'தலைநகரம்' மூலமா. அதுவும் ஆஸ்கார் ஃபிலிம்ஸ் தயாரிப்புல. டைரக்டர் சுராஜ், சுந்தரோட சிஷ்யர். எப்பேர்ப்பட்ட வாய்ப்பு! சரி, நல்லா பயன்படுத்தியிருக்காரா? ஓ.கே.தான்னு சொல்லணும்.

வழக்கமான அடிதடி கதைதான். திருந்தி வாழ நினைக்கற ரௌடியோட வாழ்க்கைய துடிக்கத் துடிக்கச் சொல்லியிருக்காங்க. சுந்தர்.சிய ரௌடியா கற்பனை பண்ணவே முடியல. காரணம் அவரோட அமுல் பேபி முகம். தாடி வச்சு அதை மறைச்சாலும் அப்பாவித்தனம் போகல. முரட்டுத்தனத்தை இன்னும் காண்பிச்சிருந்தா பின்னியிருக்கலாம். ஆனாலும் பாஸ் பண்ணிடறாரு

புதுமுக நாயகி ஜோதிர்மயி, அமைதியா வந்து போறாங்கன்னு பார்த்தா, மனம் பாதிக்கப்பட்ட நிலைமைல அவங்க எக்ஸ்பிரஷன்ஸ் சூப்பர். கே.எஸ். ரவிக்குமார் நேர்மையான போலீஸ் அதிகாரி. ஆனா இடைவேளைக்குப் பிறகு அவர் என்னாகறார்னே தெரியல. புதுசா பிரகாஷ்ராஜ் வர்றார். அலம்பல் பண்றார், நடிப்புலயும். காதர்பாயா வர்றவரோட மேனரிஸமும் நடிப்பும் யதார்த்தம். டெல்லி கணேஷ் அரும்பு மீசைல அசத்தறார்.

காட்சிக்குக் காட்சி விறுவிறுப்பு குறையாம படத்தை நகர்த்தியிருக்காங்க. ஏற்கெனவே பலரால கையாளப்பட்ட கதைன்னாலும் ஒரு ஃப்ரெஷ்னஸ் தெரியுது. படத்தோட ஹைலைட் வடிவேல் காமெடி. என்னம்மா பிச்சு உதர்றாரு மனுஷன்! அழற குழந்தைகூட சிரிச்சுக்கிட்டே படம் பார்க்குதுன்னா பாருங்க! சுந்தர்.சியோட நண்பனா வந்து அவருக்காகவே உயிரை விடற இடத்துல கண்கலங்க வச்சிடறாரு வெங்கட்.

இமானோட இசையில பாட்டுங்க பரவால்ல ரகம். ரீரிக்கார்டிங் ஓ.கே. தலைநகர தாதாக்கள் பார்க்க வேண்டிய படம். ஆனா திருந்துவாங்களான்னுதான் தெரியல.

- லஜ்ஜாவதி


திடீர் பரிசுப் போட்டி!
ரொம்ப நாளாச்சு போட்டி வச்சு..!
இந்தப் படத்துக்கு
சுவையான கமெண்ட்
எழுதியனுப்புங்க. சிறந்த
கமெண்ட்டுக்கு ரூ.200 பரிசு.
திடீர் பரிசுப் போட்டின்னு
குறிப்பிட்டு அஞ்சலட்டையில்
மட்டுமே எழுதியனுப்புங்க.
கடைசி தேதி:
5.6.2006
ஆசிரியரின் தீர்ப்பே
இறுதியானது.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.